# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஒக்ரோபர்.23 - ஒக்ரோபர்.29, 2013 பக்கம் - 24 30/


## அமைச்சரவையில் தாடிப் புலி



## துயிலுமில்லங்களும் ரத்தும் இராணுவமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமுகன்

# சில்லறைச் சண்டை

அவரது முகத்தைப் பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது.வாய் திறந்து கேட்பதற்கு வெட்கம்.போய்ச் சேரும்வரை மனசுக்குள் சில்லறைச்சண்டை. கடைசிவரை பிரச்சினை தீரவில்லை. யாழ்ப்பாணம் தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்ட பஸ்.கிளி நொச்சிக்கு செல்கிறது. நானும் கிளிநொச்சி செல்லவேண்டும். 93 ரூபா ரிக்கற். நூறு ரூபா கொடுத்தேன். எனக்கு அருகில் இருந்தவரும் அப்படித்தான். ஆனால் அவருக்கு பத்து ரூபா திருப்பிக் கொடுக்கப்பட்டது.

எனக்குத் தரப்படவில்லை.சரி இல்லையாக் கும் தருவார் என்ற நம்பிக்கை.போய்ச் சேரும் வரை அவர் சிட்டை எழுதுவதற்காக அங்கும் இங்கும் சென்றுவந்தார். அப்போதெல்லாம் அவரது முகத்தைப் பார்த்தேன். ஞாபகப்படுத்தலுக்காக. ஆனால் அவர் நினைப்பில் அந்த சில்லறை இல்லை. அவருக்கு 7 ரூபா லாபம். எனக்கு ஏழு ரூபாவுடன் 'ரிக்கற்' போட்டது முதல் இறங்கும் வரையான நேரம் வரை சிந் தனைகளும் நட்டம்.

திரும்பி வரும்போது இ.போ.ச.பஸ்.92ரூபா டிக்கற்.100ரூபா கொடுத்தேன். 10ரூபா தந்தார். அவருக்கு 2 ரூபா நட்டம்.

**கடைகளிலும் இதே நிலை**

இப்படித்தான் தினமும் நாம் நுகரும் பொருள்களுக்கான மீதிப்பணம் வழங்கப் படுவதில்லை. அல்லது மேலதிகமாக நாமே பெறுமதி இழக்க நேரிடுகின்றது. பொதுப் பாவனையில் சில்லறைக் காசுகள் புழக்கத்தில் இல்லாததால் நுகர்வோரும் அதை எடுத்துச் செல்லவோ, மீளப் பெறவோ விரும்புவதில்லை. இதனால் கடைக்காரரை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. விலைப் பதிப்புக்களும் தந்திர மானவை. சில்லறைப்பணத்தை கொள்ளையடிப்பதாகவே அவை அமைகின்றன.

இப்போதெல்லாம் சட்டைப்பையில் இப்போது ஒரு ரூபா கிடந்தாலும் கனமாக இருக்கிறது. எப்படியாவது அதை அகற்றுவதே சிந்தனை. ஒருலட்சம் ரூபாவை 20 தாள்கள் மட் டும் நிரப்பிவிடுகின்றன. அப்படியானால் சாதாரண சட்டைப்பையே 5 லட்சம் ரூபாவை யாருக்கும் தெரியாது வெளியில் எடுத்துச் செல்ல உதவியாக இருக்கிறது. பட்டப்பகலில் உயிருடன் இருக்கும் ஒருவரது காதுகளை அறுத்து கொள்ளையடிக்கும் ஊரில் அரசின் நாணயத்தாள் அச்சிடும் உத்தி பாராட்டுக்குரியது. ஆனால் போலி??

> “பட்டப்பகலில் உயிருடன் இருக்கும் ஒருவரது காதுகளை அறுத்து கொள்ளையடிக்கும் ஊரில் அரசின் நாண யத்தாள் அச்சிடும் உத்தி பாராட்டுக்குரியது. ஆனால் போலி??”

**வியாபார உளவியல்**

மனித நடத்தை உளவியலுக்கு அப்பால் இன்று மனிதர்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் வர்த்தக உளவியல் மேலோங்கியிருக் கிறது. அதாவது உலகின் வாணிப மறுமலர்ச்சி, அதனூடான சர்வதேச கம்பனிகளின் உருவாக்கம் இந்த தந்திரங்களைக் கையாள்கின்றன.

உதாரணமாக நாம் காலணியைக் கொள்வனவு செய்யும்போது சத பெறுமதியை அவதானிக்கிறோம். எங்களிடம் இருந்து சத பெறுமதி நீக் கப்பட்டு வெகு நாளாகிவிட்டது.ஆனாலும் கம்பனிகளது கவரும் தந் திரம் அதைத் தன்வசம் வைத் திருக்கிறது.

ஒரு காலணியில் 999.90 சதம் பொறிக்கப்பட்டிருக்கும். (கம் கனி, பொருள்தரம் என் பனவற் றுக்கு ஏற்ப விலை வேறுபடும்)பார்க்கும் போது அது பணப்பெறுமதியை குறைத்துக் காட்டுவது போலத் தெரியும். ஆனால் அதன் விற்பனை பெறுமதி 1000.00 ரூபா. இந்த தொகையை விற்கப்படும் பொருளில் பொறித்திருந்தால் பார்ப்பவர்கள் ஆயிரம் ரூபாவா? என்று வாயை பிழக்கக்கூடாது என்பதே வாணிப உளவியலின் நோக்கம்.

**நண்பரின் பெறுமதி**

காலத்தால் பழமையான ஐந்து சதக் குற்றியைத் துளையிட்டு தனது கழுத்தில் அணிந் திருக்கிறார் எனது நண்பர் ஒருவர்.அவரது விளக்கம் 'பணம் இண்டைக்கு இருக்கும் நாளைக்கு போய்விடும்'. இப்பிடி போயிட்டா என்னைப் பாத்து ஒருவன் 'அஞ்சு சதத்துக்கு பெறுமதி இல்லாதவன்' எண்டு பேசக்கூடாது என்பது தான்.

அந்த ஆசை என்னையும் விட்டுவைக்கவில்லை. நானும் ஒரு சதத்தை கழுத்தில் அணிய ஆசைப்பட்டேன். ஆனால் அதை 'உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்' (காதல் அல்ல) என்று சொல்லும் ஒருவர் அணியவிடாது தடுத்து விட்டார். ஆனால் அவருக்கு இப்போ என்னை பிடிக்காது. பணம் தான் ஆள்மாறுகிறது எண்டால் அன்பும் இப்ப அப்பிடித் தானே? ஐயகோ அதை பற்றி பேசவே வேண்டாம்.

**அன்பும் சில்லறை**

காதல், அன்பு பற்றிய பழங்காலக் கட்ட மைப்புக்கள் மாற்றப்பட்டுவிட்டன. இப் போது சமூகவலைத்தளங்கள்தான் காதல் அன்புக்கு அடித்தளங்கள். இதில் தொலைபேசி களும் அடக்கம். கட் ஆவதும் இணைக்கப்படு வதும் அவரவர் விதி. ஆனால் வரைவிலக்கணங் களும் எடுத்து காட்டுகைகளும் பாரம்பரிய மான தாகவே இருந்தாலும் பிரையோகமாற்றப் விதிகளுக்கு அப்பால் விடுபட்டு சீரழிவுக்கால ஆரம்பத்தை அறிமுகப்படுத்துகின்றன.

உன்னைத் தவிர அனைவரும் உத்தமர்கள் என்பதே குற்றம் நீரூபிக்கப் பட்டவனதும் வாக்குமூலமாக இருக்கிறது.அப்படியானால் குற்றவாளி இந்த உலகமே.மனித நாகரிகம் இன்று உலகை குற்றவாழிக் கூண்டில் அடைக்க தலைப்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது.அதுவே அழிவின் விளிம்பு.

**சில்லறை வழக்குகள்**

பேச்சுத் தொனியும் கருத்தாடலும் திறம்படக் கொண்ட நம் உத்தமர்கள் உண்மையை பொய்யாக்குவதிலும் பொய்யை உண்மையாக்குவதிலும் வல்லவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ் மக்களின் எதிர்காலம் தவிர இவர்கள் ஆடிய வழக்குகள் அனைத்தும் வெற்றியே.

நீதிமன்றுகள் அதிரும்படியாக வழக்காடும் ஆற்றல் கொண்ட நம் முன்னோர்கள் தமிழ் மக்களது எதிர்காலத்தை சில்லறையாக்கிவிட்டு ஒரு ரூபா பணத்துக்காக வழக்காடியுள்ளனர் என்பது வேதனைக்குரியது.

இன்றும் தமிழனின் இருப்பு கேவலப்படுவதற்கு இந்த அடித்தளங்களே காரணமாகின என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுத்தான் ஆகவேண்டும். வரலாறுதான் தமிழினத்துக்கு துரோகம் இழைத்திருக் கிறது.

மீண்டும் ஒரு சில்லறை சம்பவத்துடன் சந்திப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் தாடிப் புலி

■ அக்கினி குமாரன்

"எதிர்காலத்தில் இடம் பெறும் அமைச் சரவைக் கூட்டங்களுக்கு மாகாண முதலமைச் சர்களும் கலந்து கொள்ள அழைக்கப்படுவார் கள்" இது வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் மேற்கொண்ட பின்பு வெளியிடப்பட்ட கருத்து! அது மட்டுமல்ல,

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப் பட்ட தாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த அறிவிப்புக்களால் ஜனாதிபதி திடீரென மனம் மாறி மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் என்ற பாதையில் இறங்கிவிட்டாரோ என்ற கேள்வி எழக் கூடும். மேலும் வட மாகாண மக்கள் மாகாண சபைத் தேர்தல் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணைக்கு காது கொடுக்க ஜனாதிபதி தயா ராகி விட்டாரோ என்ற ஒரு ஆச்சரியத்தையும் ஏற் படுத்தக் கூடும்.

வலது கரத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு சிறு உரிமையைக் கூட வழங்கக் கூடாது எனக் கொக்கரிக்கும் இனவாதிகளையும், இடது கரத்தில் தமிழ் மக்களுக்காகக் கண்ணீர் வடிப் பவர் களாக நடிக்கும் சில இடது சாரிகளையும் வைத்துக் கொண்டு அதிகார பீடத்தில் வீற்றிருக்கும் ஜனாதிபதி அவ்வளவு இலகுவாக நியாயத்தின் பக்கம் பார்க்கக் கூடியவரல்ல என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவர். அப்படியானால்ஏனிந்த நாடகம்?

"சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை!" மஹிந்த சிந்தனையும் தனது இன ஒடுக்குமுறை நிலைப்பாட்டிலிருந்து இலகுவில் இறங்கி வந்து விடக் கூடியதல்ல!

மாகாண முதலமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வது அமைச்சர் களாக அல்ல, வெறும் பார்வையாளர்கள் தான்.

அவர்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்கலாம். அமைச்சர்களுக்கு விளக்க மளிக்கலாம். ஆனால் முடிவெடுப்பது அமைச்சரவை உறுப்பினர்கள் தான். முதலமைச்சர்களுக்கு முடிவெடுப்பதில் எவ்வித அதிகாரமும் இல்லை. இது மாகாண முதலமைச்சர்களுக்கு ஜனாதிபதி கருணை கூர்ந்து வழங்கிய வரம்.

முதலமைச்சர்கள் நிலையோ முத்து எடுக்கப் போய் கிழிஞ்சல்கள் பொறுக்கிய பரிதாபம் தான். இதன் மூலம் ஜனாதிபதி பெறப்போகும் இலாபமோ பற்பல.

அமைச்சர் விமல்வீரவன்சவும் , சம்பிக்க ரணவக்கவும் அமைச்சரவைக்குள் தாடிப்புலி புகுந்து விட்டதாகக் கூக்குரலிடுவார்கள். ஜாதிகஹெலஉறுமய, சிஹலஉறுமய, தேசப் பற்றுள்ளதேசியஇயக்கம் போன்ற அமைப்புக் கள் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங் களையும் நடத்துவார்கள்.ஜனாதிபதியும் ஜனநாயக நாட் டில் கருத்துச் சுதந்திரம் உண்டு எனக் கூறி அவற்றை அனுமதிப்பார்.

இப்படியான போராட்டங்கள் மூலம் வடமாகாணம் உட்பட சகல மாகாணங் களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு விட்டதான ஒரு பொய்மைத் தோற்றப்பாடு உருவாக்கப்படும்.

ஏன் இப்படியான திட்டமிட்ட பொம்மலாட்டங் கள் என்ற ஒரு கேள்வி எழலாம்! எல்லா வற்றுக்குமே காரணம் உண்டு! அதாவது தலைக்கு வரும் ஆபத்தைத் தொப்பியுடன் போக வைக்கும் ஒரு நீண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கம் தான்.

எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகளின் அணித்தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. வழமை போல் அபிவிருத்தி, பயங்கரவாத ஒழிப்பு, சமாதானம், நல்லிணக்கம் போன்ற ஜாலங்கள் மூலம் தொடர்ந்து சர்வதேசத்தின் கண்டனங்களிலிருந்து தப்பிவிட முடியும் என்ற கனவு மெல்ல மெல்லச் சிதைந்து வருகின்றது.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் போதிய அக் கறை காட்டாமை என்பவை காரணமாக கனடா மேற்படி மாநாட்டில் பங்கு பற்ற மறுத்து விட்டது. பிரிட்டிஷ் பிரதமர் மாநாட்டில் கலந்து கொண்டாலும் மேற்படி பிரச்சினைகள் தொடர்பாக மிகக் கடுமையான நிலைப் பாட்டை எடுக்கப் போவதாக தெரிவித்து விட்டார். அது மட்டுமன்றி இந்த இரு நாடுகளுமே பொது நலவாய அமைப்புக்கு வழங்கும் நிதியில் கணிசமான தொகையை வெட்டி தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

எல்லாச் சர்ந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு தோன்றாத் துணையாக நின்று காப்பாற்றும் இந்தியாவும் கூட மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக இன்னும் முடிவு எதையும் எடுக்க வில்லை.

இப்படியான நிலையில் பொதுநலவாய மாநாடு இலங்கைக்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு மாறாக எதிர்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்களே அதிகம் உள்ளன. இப்படி யான நிலையில் இலங்கைக்கு ஏற்படக் கூடிய நெருக்கடிகளிலிருந்து காத்துக் கொள்ள ஒரு கவசம் தேவைப் படுகிறது. இப்படியான கவசமாகவே வடமாகாண முதலமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ளார். அதாவது நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ள மறுத்துள்ள நிலையில் இந்த அமைச்சரவைக் கூட்டம் இப்படி ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கும் வகையில் முன் வைக்கப் படுகிறது.

"சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை!" மஹிந்த சிந்தனையும் தனது இன ஒடுக்குமுறை நிலைப்பாட்டிலிருந்து இலகுவில் இறங்கி வந்து விடக் கூடியதல்ல!

எனவே பொதுநலவாய மாநாட்டில் ஜனாதிபதியோ அல்லது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸோ அவர்களோ அமைச்சரவையில் வடமாகாண சபை முதல்வருடன் இணக்கமான முறையில் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக உரை நிகழ்த்துவார்கள். மேலும் ஒரு படி மேலே போய் "இது ஒரு உள் நாட்டு விவகாரம் எனவும் உள்நாட்டிலேயே பேசித்தீர்க்க முடியும்" எனவும் கூறக் கூடும்.

இன்னொரு புறம் இனவாத அமைச்சர்களும்,இனவெறி பிடித்த அமைப்புக்களும் தாடிப் புலி புகுந்து விட்ட தாக மேற்கொள்ளும் பரப்புரைகள் இனப் பிரச்சினையைப் பூதாகரமாகக் காண்பிக்கும் தமிழ் மக்களுக்கு மஹிந்த அதிகாரங்களை வழங்கி விட்டதான ஒரு பொய்மையை எங்கும் பரப்பும் அது தொடர்பாக எழும் சர்ச்சைகளும் வாதப்பிரதிவாதங்களும் இனப் பிரச்சினையின் மையப்புள்ளியாக இதைக் காண்பிக்கும்.

அதேவேளையில்முதலமைச்சர்விக்னேஸ்வரன் அமைச்சர்வைக் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்தால் ஜனாதிபதியும், அவரின் இடதுசாரிக் கைக்கூலிகளும் வடமாகாணசபையும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் நியாயமான முறையில் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முன்வர மறுப்பதாகப் பரப்புரை செய்வார்கள். பொது நலவாய மாநாட் டில் கூட இப்படியான ஒரு கருத்து முன் வைக்கப்படலாம்.

எனவே வடமாகாணசபை முதலமைச்சரை அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கு கொள்ள அழைப்பது என்பது ஜனாதிபதி விரிக்கும் ஒரு சூழ்ச்சிகரமான வலை என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும்,கலந்து கொள்ளாமல் விட்டாலும் அதை எமக்கு எதிரா கப் பாவிக்கத் தயங்க மாட்டார் கள். ஆனால் கலந்து கொள்ளாமல் விடுவதை விடக் கலந்து கொள் வது மிகவும் ஆபத்தானது.

மாகாணசபையின் அதிகாரம் முதலமைச் சரின் அதிகாரம் என்பவற்றை விட வடமாகாண சபைக்கு தேர்தல் மூலம் மக்கள் வழங்கிய ஆணையே முக்கி யமானது. எனவே மாகாணசபையையோ, முதலமைச்சரின் பதவியையே, சர்வதேச அழுத்தங் களுக்கு எதிரான ஒரு கவசமாகப் பாவிக்க நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனுமதிக்க முடியாது.

பொதுநலவாய மாநாட்டில் ஏற்படப் போகும் எமக்குச் சாதகமான நிலைமையைக் குழப்ப எம்மையே மற்றவர் பாவிக்கும் நிலை உருவாகி விடக் கூடாது. எனவே முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் பசித்தாலும் புல்லைத் தின்னாத தாடிப்புலியாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்ப மாகும்.

நாம் மக்கள் ஆணை என்ற வலிமையான ஆயுதத்தைக் கையில் ஏந்தியவர்கள். கடந்தகால அனுபவங்கள் எமது பாதையைச் செப்பனிட்டுள்ளது. நாம் இனியும் சறுக்கி விழுந்து விட முடியாது. சர்வதேச ஆதரவு தமிழக மக்களின் அர்ப்பணம் நிறைந்த உதவி எல்லாமே எமக்கு உண்டு. இதை முதிற் கொண்டு எமது உரிமைப்பயணம் தொடர வேண்டும்.



நன்றி: அததெரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 6



## பாலசிங்கத்தை சந்தித்தேன்

1978 இல், இலங்கைத் தீவைச் சேர்ந்த அன்ரன்பாலசிங்கம் என்ற தமிழர் ஒருவரை நான் திருமணம் செய்த போது தான் எல்லாமே ஆரம்பமாகியது. அந்த இணைப்பின் போது, ஒரு இனத்தின் கூட்டுப் பிரக்ஞையையும் அதன் வரலாற்றையும் மணந்து கொண்டேன். தனது இனத்தின் பலங்களையும், பலவீனங்களையும், பெருமைகளையும், குறைபாடுகளையும் தன்னுள் அடக்கிய அந்தத் தமிழனின் ஆன்மாவைப் புணர்ந்து கொண்டேன். உலகின் மிகப் பழைமை வாய்ந்த கீழைத்தேய நாகரீகங்களில் ஒன்றினது சமூகத்திலும், கலாசாரத்திலும் வாழ்வதற்கு அந்த வரலாறு என்னை ஈர்த்தது. எனது கணவருடைய பண்டைய வரலாற்றுத் தோற்றுவாய் நிலமான இந்திய தென்திராவிட தமிழ் நாட்டுக்குத் கவர்ந்து இழுக்கப்பட்டேன். தமிழீழம் எனப்படும் இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் தமிழ் மக்களின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணம் என்ற எனது கணவரின் பிறந்த மண்ணில் பல ஆண்டுகள் வாழ்ந்தேன். கூர்மதியோடு நடத்தப்பட்ட இனப்படுகொலை முயற்சியை எதிர்த்து, துயரங்களில், மகிழ்ச்சியில், கொண்டாட்டங்களில் நானும் மூழ்கி எழுந்தேன். இதன்விளைவாக எனது வாழ்விலே கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாக, நினைத்துப் பார்க்க முடியாத புதுவகை அனுபவங்களைப் பெற்றேன். முதலில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அரச ஒடுக்குமுறையினதும், அரசின் கருவறுப்பு முயற்சியினதும் தாக்குதலின் பயங்கரத்தை நேரடியாக அனுபவித்துக் கொண்டிருந்த மக்களோடு கூடி வாழ்ந்து, அவற்றில் பங்கெடுத்த ஒரே நாட்டவர் நானேதான். இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களிடையே நான் வாழ்ந்த வாழ்க்கை எனக்குப் பெருமை தருவது.

அதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, ஓர் இனத்தின் விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்து நடத்தும் அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அருகேயிருந்து நேரடியாகப் பார்க்கவும், அந்த அமைப்பின் வீரர்கள் புரியும் மகத் தான வரலாற்றுப் போராட்டத்துக்கும் வியத்தகு தியாகத்துக்கும் நேரடிச் சாட்சி பகரவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பு. இரண்டாவது, எனக்கு முக்கிய மானது. இந்த விடுதலை அமைப்பும், அந்த இனமக்களும் என்னை நம்பினார்கள். எனக்கு மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ் மக்களுடனான எனது அனுபவம் ஆழமானது என் பதை ஒரு தமிழ்ச் சிநேகிதி, வன்னி விசுவமடுவில், தனது தோட்டத்திற்குள் நின்ற செழுமையான மாமரத்தின் குளிர்மையான நிழலில் உரையாடிக் கொண்டிருந்தபோது என்னை "வெள்ளைக்காரத் தமிழ்ப்பெண்" என்று எடுத்த எடுப்பில் கூறியதிலிருந்து உணரலாம்.

இருபது ஆண்டுகளுக்குமுன் நான் பாலசிங்கத்தைச் சந்தித்து நேசிக்கத் தொடங்கிய போது எனது வாழ்க்கை இத்தகைய திருப்பங்களைச் சந்திக்கும் என்று நான் நினைத்தே பார்க்க வில்லை. எனது சமூகக் கலாசார சூழலில் இருந்து முற்றிலும் முரண்பாடான சூழலைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்கின்றேன் என்ற அந்த ஒன்றே, எமது திருமணம் மறக்க முடியாதபடி ஒருவித்தியாசமான திருமணமாக அமைந்தது. அதெப்படி இரண்டு வெவ் வேறு கலாசாரங்களில் இருந்து வரும் இரண்டு பேர், திருமணம் என்ற பொதுத் தளத்தில் சந்திக்கக்கூடுமாக இருக்கின்றது? அதுவெறும் உடற்கவர்ச்சியாக இருந்திருக்க முடியாது. கவர்ச்சியேதான் என்றால் எமது அந்த உறவு அவ்வளவு ஆழமாகவும், நெஞ்சார்த்தமாகவும் இருந்திருக்க முடியாது. அப்பிடியென்றால் எம்மைப் பிணைத்தது எது? இத்தகைய ஒரு அசாதாரண பாதையில் என்னை அவரோடு இட்டுச் சென்றது எது?

பல ஆண்டுகளுக்கு முன்னதாக நான் மணம் புரிந்த பாலசிங்கம் இப்போதும் சராம்சத்தில் அதே மனிதராகவே இருக்கின்றார். ஆனால் காலமும் சூழலும் அவரை இன்றைய நிலையிலுள்ள சிந்தனையாளராகவும், ஆளுமையாளராகவும் ஆக்கியிருக்கிறது. கால் நூற்றாண்டுக்கு முன் நான் மணம்புரிந்த மனிதரை ஒரு ஆன்மீகவாதி என்று தான் கூறுவேன். ஆன்மீகவாதி என்று கூறும் போது, நிறுவனமாகி விட்ட சமயங்களையும், நிலைபெற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப் பவராக நான் அவரைக் குறிப்பிடவில்லை. மாறாக நேர்மை, நற்சீலம், மனித நேயம் ஆகியவை பொதிந்த மனிதராக அவரிருந்தார் என்றே கூறுவேன்.

நாம் முதலில் சந்தித்த போது பாலாவுக்கு வயது முப்பத்தியாறு. அப்போது கீழைத்தேய தத்துவ சிந்தனைகளை, குறிப்பாக, இந்திய வேதாந்த தத்துவங்களை அவர் நிறையவே படித்திருந்தார். புத்தரின் போதனைகளில் அவருக்குத் தனியான நாட்டம் இருந்தது. உண்மையில் இளவயதிலேயே பௌத்ததத்துவம் அவரை வெகுவாகக் கவர்ந்ததால் இலங்கையில் பௌத்த கல்விமான்களைத் தரிசித்து விளக்கங்களையும், தத்துவத் தெளிவையும் பெற்றிருக்கிறார். பொது மேடைகளில் பௌத்த உரைகளைக் கூட நிகழ்த்தியிருக்கிறார்.

உண்மையான பௌத்த தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததால் சிறிலங்காவில் நிலவிய பௌத்தத்தில் அவர் நம்பிக்கை இழந்தார். இனவாத மற்றும் குறுகிய தேசியவாதக்கோட்பாடுகளால் அது களங்கப்பட்டு விட்டதாக அவர் கருதினார். ஆயினும் தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்பே அவருக்குள் அளப்பரிய சிந்தனா சோதனையை ஏற்படுத்தியது. தம்மையும், தாம் தீவிரமாக கடைப்பிடித்த தத்துவங்களையும் தாமே தமக்குள் கேள்விக்குரியவை ஆக்கினார். அவருடைய முதல் மனைவி கடும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு உயிரைத் தக்க வைக்க வெளி இணைப்புக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில் தங்கியிருக்க வேண்டிய அறுதி நிலை ஏற்பட்டபோது, தர்மம் பற்றியும் அறநெறி பற்றியும் பாலா கொண்டிருந்த நிலைப்பாடு சோதனைக்குள்ளாகியது. கடும் நோயினால் பீடிக்கப்பட்டு, மரணத்தின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருந்த தமது அழகிய இளம் மனைவியைக் கண்காணித்துப் பராமரிக்கும் போது மனோரீதியாகவும், உணர்வுரீதியாகவும் அவருக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் மனிதம் பற்றியும், மானுட உலகம் பற்றியும் அவருடைய உள்ளார்ந்த தத்துவ சுய தேடலை மேலும் ஆழமாக்கியது. உடல் நோயின் விளைவாக மானுட சரீரத்தில் ஏற்படும் சீரழிவும் மாற்றமும், அத்தோடு நித்தமும் மரணத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் மானுட இருப்பின் அர்த்தம் பற்றி அவரை ஆழமாக சிந்திக்க வைத்தன. தனித்துவம் வாய்ந்த அனுபவங்களையும் அவர் பெற்றார். அவை தந்த சிந்தனைத் தெளிவு அவரை ஒரு மதியூகி ஆக்கின. யாதார்த்த உலகிலே அவர் ஒரு பகுத்தறிவு வாதியாக காலூன்றவும் வழிகோலின.

ஒரு புறம் கடுமையான பொருளாதாரப் பிரச்சினை. மறுபுறம் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் அவருடைய துணைவியின் மன உளைச்சலுக்கும், உடல் பராமரிப்புத் தேவைக்கும், ஈடுகொடுக்கும் பொறுப்பு. இவற்றுடன் போராடிய இந்தக் கட்டம், பாலாவின் வாழ்வில் ஒருதார்மீகச் சவலாக அமைந்த காலம்; அவருடைய ஆளுமையின் திண்மையே சோதனைக்கு உள்ளான காலம் இது.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியப் பிரதமரின் கடத்தல்;
# வெளிப்படுத்தும் உண்மைகள்

▣ நீலன்



**2011** ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி.நேட்டோ படையணிகளின் துணையோடு லிபியாவை ஆட்சி செய்த சர்வதிகாரியான லிபியத் தலைவர் கேணல் மும்மர் கடாபியை ஆட்சிப் பீடத்திலிருந்து விரட்டிவிட்டு மேற்குலக நாடுகளின் ஆசியுடன் இடைக்கால அமைப்பொன்றிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அன்றைய தினத்தில் லிபியாத் தலைநகரின் கொரிந்திய ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் முக்கியமான இருவராக பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூனும், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சார்கோஷியும் அடங்குவர். "ஜனநாயகம் மலர்ந்துவிட்டது" என்று ஹோட்டலின் முன்னால் திரண்டிருந்த படைவீரர்கள் போட்ட கோஷம் விண்ணைப் பிளந்தது. எல்லோர் முகங்களிலும் வெற்றிக்களிப்பு.

சுமார் இரண்டாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் இம்மாதம் 10 ஆம் திகதி. அதே கொரிந்திய ஹோட்டலில் வைத்து தற்போதைய லிபியாவின் பிரதமரான அலி ஸெய்டன் அதிகாலை 4 மணியளவில் ஆயுத முனையில் கடத்தப்பட்டு சில மணித்தியாலங்களுக்குள் விடுத்லை செய்யப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் லிரியாவில் ஜனநாயகத்தை நிலை நாட்டி, வெற்றிக் களிப்பை லிபிய மக்களுடன் சேர்ந்து கொண்டாடுவதற்காக லிபியத் தலைநகருக்குச் சென்றபோது ஐக்கியப்பட்ட லிபியாவைக் காண்பதே தமது விருப்பமெனக் கெமரூனும், சார்கோஷி யும் கூறியிருந்தனர். அதற்கு மாறாக இன்று எந்தள விற்கு லிபியா ஐக்கியப்பட்டுள்ளதென்பதை கடந்த 10 ஆம் திகதிய கடத்தல் சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது.

ஓய்வைக் கழிப்பதற்காக தலைநகரிலுள்ள கொரிந்தியர் சொகுசு ஹோட்டலுக்குச் சென்று அதிகாலையில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த பிரதமர் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டார். இது வியப்பினை அளிப்பதை விடவும், அரசின் நிர்வாகத்திலுள்ள பாதுகாப்பு அமைப்புடன் சேர்ந்து பணியாற்றும் ஆயுத பாணிகள் தான் கடத்தலில் ஈடுபட்ட அந்தக் கிளர்ச்சியாளர்கள் என்பது தான் அதிர்ச்சிக்குரிய விடயமாவுள்ளது.

தம்முடன் இசைந்து செல்லாத ஆட்சியாளர்களுக்கு 'சர்வதிகாரிகள்' என்று மகுடம் சூட்டி அவர்களுக்கு எதிரான ஆயுத பாணிகளை வலுவூட்டுவது மேற்குலக நவ காலணித்துவத்தில் ஒன்றும் புதிய விடயமல்லவே. அத்தகைய சக்திகள் அரேபிய வசந்தம் என்றெல்லாம் கவர்ச்சிகரமான பெயர்களைச் சூட்டி தமக்கு விரும்பாத அரசியல் தலைவர்களை ஆட்சிப் பீடத்தில் இருந்து கவிழ்க்கும் சதி முயற்சிகளைக் கட்டவிழ்த்துவிடுவதைக் காண்கின்றோம். கூடவே ஒரு பொருத்தமற்ற அரசியல், சமூக, பொருளாதார பின்புலத்தில் முழுமை பெறாத ஜனநாய கத்தை வலிந்து திணிப்பதால் ஏற்படும் பாதிப்புக்களை வெளிப்படுத்துவதாகவே இந்தக் கடத்தல் சம்பவம் அமைந்துள்ளது.

சிரியாப் பிரதமர் கடத்தப்பட்ட சமயத்தில், எதுவுமே தெரியாததொரு தெளிவற்ற நிலை நீடித்தது. அவரைக் கடத்தியவர்கள் யார்? என்ன நோக்கத்திற்காக கடத்தப்பட்டார்? என்ற கேள்விகளுக்கு உடனடியாக விடை தெரியவில்லை.

பிரதமர் ஸெய்டன் மேற்குலகின் கைம்பொம்மையாக இயங்குபவர் என்பதால் இஸ்லாமிய கடும் போக்கு அமைப்புக்களே அவரைக் கடத்தியிருக்கக் கூடும் என்று கூறப்பட்டது. கேணல் கடாபியின் விசுவாசிகள் அவரை ஆயுத முனையில் கடத்திச் சென்று பழி தீர்த்துக் கொள்ள முனைந்திருக்கக் கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

> “ கடாபியை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்காக ஒரே அணியில் திரட்டப்பட்ட ஆயுத பாணிக் குழுக்களை அரச பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து இயங்கும் துணைப்படைகள் என்பதா? கிளர்ச்சியாளர்கள் என்பதா? ”

அதே வேளையில் கடாபியின் ஆட்சிக் காலத்தில் ஒருகுடைக்குள் கொண்டு வரப்பட்ட வெவ்வேறு இனக் குழுமங்கள் இன்று பல்வேறு வகையில் சிதறியிருக்கக்கூடிய பின்புலத்தில் அவ்வாறு பகைமை கொண்ட குழுக்களில் ஏதேனும் ஒன்று இக்கடத்தலுடன் தொடர்புடையதாக இருக்கக் கூடுமெனவும் சிலரால் ஊகிக்கப் பட்டது.

எனினும் ஸெய்டன் கடத்தப்பட்டு சில மணித்தியாலங்களுக்குள் விடுவிக்கப்பட்ட போதிலும் அவர் கடத்தப்பட்டமைக்கான பின்புலம் இன்னமும் தெளிவற்றதாகவே நீடிக்கின்றது. எதிரணியில் அமர்ந்து இருக்கும் அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய ஆயுதக் குழுவொன்றே தம்மைக் கடத்தியதாக ஸெய்டன் கூறியிருப்பதுடன், இது தம்மை ஆட்சியில் இருந்து கவிழ்ப்பதற்காக முன்னெடுக்கப்படும் ஒரு சதி முயற்சியே எனவும் அவர் விபரித்துள்ளார்.

ஸெய்டனின் கருத்தைப் பார்த்தால் இது உள் வீட்டுப் பிரச்சினை போன்றே தோன்றும். ஆனால் அதனை உறுதிபடக் கூற முடியாதுள்ளது . ஏனெனில் ஸெய்டனைத் தாமே கடத்தியதாக கூறிக்கொள்கிறோம். இரு கிளர்ச்சிக் குழுக்களும் இருவேறு காரணங்களை முன் வைத்துள்ளன.

அரச நிர்வாகக் கட்டமைப்பைக் கறை படிந்தாக மாற்றியமைக்காக அவரைக் கடத்தித் தண்டிக்க நினைத்ததாக ஒரு குழுவும், அமெரிக்காவுக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என்பதற்காகவே அவரைக் கடத்தியதாக மற்றைய குழுவும் தெரிவித்துள்ளன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் திரிபொலி வீதிகளில் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு லிபியாவைச் சேர்ந்த அடி அனஸ் அல்-லிபி என்பவரைப் பிடித்துச் சென்றன அமெரிக்கப் படைகள்.

அல்-லிபி, அல்கெய்தாவின் முக்கியஸ்தர் என்று அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டாலும், அவர் லிபியப் பிரஜையே என்ற குரல் வலுவடைந்துள்ளது. இவற்றில் யார் கூறுவதை ஏற்றுக் கொள்வது , யார் கூறுவதை மறுப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாத சிக்கலான நிலையில் சிரியா இருக்கிறது. அதற்குக் காரணம் அங்கு நிலவும் மோசமான அரசியல், சமூக, பொருளாதாரப் பின்புலமே தான். அரசாங்கத்தின் கட்டுப்பாடு ஸெய்டனின் கைகளில் அறவே இல்லை என்பதே உண்மையான நிலைப்பாடு.

இஸ்லாமிய கடும்போக்கு சக்திகளும், வன்முறைகளில் ஈடுபடும் குழுக்களும் அங்கு களம் அமைத்து செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. லிபியத் தலைநகரிலுள்ள அமெரிக்கத் துதரகத்தைத் தாக்கியவர்கள் யார் என்பதை இன்னமும் கண்டு பிடிக்க முடியாத நிலைமை இருப்பதையும் குறிப்பிட முடியும்.

பொருளாதாரம் என்ற கோணத்தில் ஆராய்ந்தாலும் லிபியா பிரச்சினைகளையே எதிர் கொள்கிறது. "மனித உரிமைகளை அப்பட்டமாக மீறினார்" "அப்பாவிகள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தார்" என்ற ரீதியில் கேணல் கடாபி மீது எத்தகைய குற்றச்சட்டுக்களை முன் வைத்தாலும், அவரது ஆட்சிக் காலத்தில் லிபிய மக்கள் பொருளாதார சுபீட்சத்துடன் வாழ்ந்தார்கள். லிபியாவின் கனிம வளங்களில் கிடைத்த வருமானம் சகல இனக் குழுமங்களுக்கும் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படும் வகையிலான பொருளாதார முறையொன்று நடைமுறையில் இருந்தது. இன்று எரிபொருள் விற்பனையில் கிடைக்கும் வருமானம் யாருக்குச் செல்கிறது என்பதைத் தெளிவாகக் கூறி முடியாத நிலை. இது ஒருபுறமிருக்கக் சாதாரணப் பொதுமக்களும் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்குச் சிரமப்படக் கூடிய் நிலை தலைதூக்கியுள்ளது.

அன்று ஒரு சர்வதிகாரியின் பிடியிலிருந்து லிபிய மக்களை விடுவிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு மேற்குலகம் மேற்கொண்ட அநாவசியமான தலையீட்டின் காரணமாக லிபியா எந்தளவு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை ஆராய முனைபவர்களுக்கு பிரதமர் மந்திரி ஸெய்டனின் கடத்தல் ஒரு பாடமாகும்.

ஒரு வெளிநாட்டுப் படை தமது நாட்டுக்குள் புகுந்து தமது நாட்டின் பிரஜையைக் கடத்திச் செல் வதைக் கூட கட்டுப்படுத்தாத நிலையில் உள்ள அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தியது அந்தக் கடத்தல் நாடகம் தான். பெயரளவில் அரசாங்கமென்று இயங்கிய போதிலும் அந்த அரசாங்கத்தால் அதன் நிர்வாகத்தில் உள்ள அமைப்புக்களை கட்டுப்படுத்த முடியவில்லை.என்பதும் கடத்தல் சம்பவத்தின் ஊடாகவே தெரிய வந்துள்ளது.

லிபியாவில் ஜனநாயகத்தை மலரச் செய்ய வேண்டும் என்பதற்காக அதன் ஆட்சிப் பொறுப்பை மேற்குலக சக்திகள் இடைக்கால நிர்வாக சபையிடம் ஒப்படைத்தது உண்மைதான். ஆனால் இன்று முறையான ஆட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தும் நடைமுறையில் இன்னமும் அரசியல் யாப்பைக் கூட உருவாக்க முடியவில்லை. என்பது பலருக்குத் தெரியாத விடயமாக இருக்கக் கூடும்.

கடாபியை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்காக ஒரே அணியில் திரட்டப்பட்ட ஆயுத பாணிக் குழுக்களை அரச பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து இயங்கும் துணைப்படைகள் என்பதா? கிளர்ச்சியாளர்கள் என்பதா? ஆனால் மேற்குலகின் தூரதரிசனமற்ற தலையீட்டு நடவடிக்கைகள் காரணமாக இன்று ஈராக்கிலும் பாதுகாப்பு இல்லை, ஆப்பானிஸ்தானிலும் அமைதி இல்லை. ஏன் சிரியாவும் அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை அறியாதவர்கள் இருக்க முடியாது.

மேற்குலகம் போதிக்கும் ஜனநாயகம் எதுவாக இருப்பினும் இந்த வருடம் மாத்திரம் ஈராக்கில் ஆறாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ் தானில் இன்னமும் போர் நீடிக்கிறது. சிரியாவில் கடந்த இரண்டாண்டுகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டுகிறது.

அமைதியாக இருக்கும் நாடுகளை குருதிக் காடாக மாற்றுவது தான் மேற்கின் போதனை போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்.23, – 29 , ஒக்., 2013
sudarolijaffna@gmail.com

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## உரையாற்றப் போகிறாரா வடக்கு முதல்வர்?

இன்னமும் சர்ச்சைகளின் சூழலுக்குள் இருந்து வடக்கின் முதல்வர் மீளவில்லை. ஒரு சர்ச்சைச் சகதிக்குள் இருந்து ஒரு காலை எடுத்தால் இன்னொரு சர்ச்சைக்குள் சிக்குவது அவருக்கு வாடிக்கையாகிவிட்டது. இப்போது பொதுநலவாய மாநாட்டில் உரையாற்றப் போகிறார் விக்னேஸ்வரன் என்ற புதுக் குண்டை அரசு தூக்கித் தமிழர் தரப்பு மீது வீசியிருக்கிறது. இந்தக் குண்டு எந்தளவு தூரம் உண்மை அல்லது பொய் என்பது தெரியாவிட்டாலும் 'சிலவேளைகளில் வடக்கு முதலமைச்சர் உரையாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்ற நிலையே தமிழ் மக்களிடம் உண்டு. அந்தளவுக்கு வடக்கு முதல்வர் பற்றியே சந்தேகமான விம்பமே மக்களின் மனதில் ஆழப்பதிந்துவிட்டது.

பொதுநலவாய மாநாட்டில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று கனடா தெட்டத் தெளிவாக அறிவித்துவிட்டது. இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுத்து, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்ற மாட்டேன் என்று அறிவித்துவிட்டார். இலங்கையில் நடைபெற்ற மனிதப் படுகொலைகளைக் கண்டித்து, பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கவேண்டுமென்று, புலம்பெயர் மக்களும் தமிழக மக்களும் கோரி நின்றனர். இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்த்தே கனடா தன்னுடைய தீர்க்கமான முடிவை வெளிப்படுத்தியிருந்தது. இந்நிலையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்ற உள்ளபோது, இலங்கை மீதான குற்றப் பத்திரிகை வாசிப்பதற்காகவே இந்த மாநாட்டைப் பயன்படுத்தப்போவதாகத் தெரிவித்திருக்கிறார். ஆக மொத்தத்தில் நமக்காக உலகத்தின் செவிகள் சாய்க்கின்றபோது நம்முடையவர்கள் மட்டும் மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளில் மிதித்துக்கொண்டு நடக்க முற்படுகிறார்கள்.

மக்களின் ஆணைக்குப் புறம்பாக ஜனாதிபதி முன்னால் ஒன்றுக்கு இரண்டு தடவை பதவிப் பிரமாணம் செய்த வடக்கு முதல்வர், பொதுநலவாய மாநாட்டில் உரையாற்றப் போகிறார் என்று அரச தரப்பு தகவல்களைக் கசியவிட்ட பிறகும் கூட, வாய்மூடி மௌனியாக இருப்பது மக்களிடையே இன்னும் சந்தேகத்தையே கிளறியுள்ளது. நல்லிணக்கத்துக்காக சொந்த மக்களின் மனங்களைப் புண்படுத்துவது எந்த விதத்திலும் தகாது.

# துயிலுமில்லங்களும் துரத்தும் இராணுவமும்

பிரமன்



வழமையாகவே நவம்பர் மாதம் பிறந்தவுடனேதான் மாவீரர் துயிலுமில்லங்கள்மீது படைத்தரப்பின் பார்வை பதிவதுண்டு. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து களமாடி வித்தான போராளிகளின் உடல்கள் பூரண இராணுவ மரியாதையோடு விதைக்கப்படும் இடங்களே மாவீரர் துயிலுமில்லங்கள்.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று தாயகம் எங்கும் உள்ள துயிலும் இல்லங்களில் தீபங்களின் வடிவில் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்ந்து வந்தார்கள். அவையெல்லாமே போருக்குப் பின்னர் அடியோடு மாறிவிட்டன.

வன்னிப் பகுதியில் முற்றுமுழுதாகத் தமது பிடிக்குள் கொண்டுவந்த படைத்தரப்பு முதலில் செய்த வேலை புலிகளின் நினைவுகளை மக்களின் மனதிலிருந்து அகற்ற முயற்சித்ததுதான். இதற்காக எவையெல்லாம் புலிகளை ஞாபகமூட்டுகின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாகவே அழிக்கத் தொடங்கினார்கள்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், தூபிகள், நினைவுப் பலகைகள் என்று ஒன்றும் விடாமல் வழித்துத் துடைத்தார்கள். அதிலும் அதிகம் அவர்கள் தம்முடைய ஆக்ரோசத்தைக் காட்டியது துயிலுமில்லங்கள் மீதுதான். மனிதம் என்ற ஒன்றைத் தூக்கியெறிந்துவிட்டு, கல்லறைகளுக்குள் உறங்கிக்கொண்டிருந்த போராளிகளின் வித்துடல்களைக் கனரகவாகனங்கள் மூலம் கிண்டிக்கிளறி, உழுதார்கள். எந்தப் பகுதியை மக்கள் மாவீரர் துயிலுகின்ற புனிதபூமியாக நினைத்தார்களோ அவற்றின்மீது தமது பூட்ஸ் கால்களைப் பதித்து, புதிய படைமுகாம்களைக் கட்டமைத்துக் கொண்டனர்.

இப்போது படையினர் பற்றிய அச்சம், வடக்குத் தேர்தலின் பின்னர் மெல்ல மெல்ல குறையத் தொடங்கியுள்ளதால், சாவகச்சேரி, கரைச்சி பிரதேசசபைகள் மாவீரர்கள் துயிலுமில்லங்களைப் புனரமைத்தல் அல்லது சிரமதானம் செய்தல் என்னும் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தன. ஆனால் இந்தத் தீர்மானங்களை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்ட படைத்தரப்பு பிரதேச சபைகளை முந்திக்கொண்டு மாவீரர் துயிலுமில்லங்களை முற்றுகையிட்டுவிட்டது.

அத்தோடு நின்றுவிடாமல் இன்னும் பிரதேச சபைகளின் கண்களில் படாமலிருக்கும் மற்றைய மாவீரர் துயிலுமில்லங்களிலும் இராணுவம் குவிக்கப்பட்டது. இரவோடு இரவாக எல்லா மாவீரர் துயிலுமில்லங்களும் முட்கம்பி வேலிக்குள் சிறையிடப்பட்டன. குறித்த துயிலுமில்லங்களுக்கு அருகில் இருந்த சிறிய படைமுகாம்களில் இருந்த இராணுவத்தினர் தளபாடங்கள் சகிதம் இந்தத் துயிலுமில்லங்களுக்குச் செல்லுமாறு கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதைவிட மாவீரர் மயானங்களைப் புனரமைப்பது குறித்த தீர்மானத்தைப் பிரதேச சபைகளில் கொண்டுவந்த உறுப்பினர்கள் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுப் பிரிவால் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். இன்னும் சில நாள்களில் எல்லா மாவீரர் மயானங்களும் படைத்தளங்களாக மாற்றப்பட்டுவிடும். இவ்வாறு அவசர அவசரமாகத் துயிலுமில்லங்களுக்கு இராணுவச் சீருடையைப் படைத்தரப்பு அணிவிப்பதற்கு காரணம் இருக்கவே செய்கிறது.

தேர்தல் பரப்புரைகளின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் "மாவீரர் துயிலுமில்லங்களை மீண்டும் அமைப்போம்" என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அந்த வாக்குறுதிக்கு உயிர் கொடுத்து இந்த நவம்பரில் மீண்டும் மாவீரர் தினத்தைப் பகிரங்கமாக நினைவுகூர்ந்து விடுவார்களோ என்ற அச்சமே படைத்தரப்பின் அவதிக்குக் காரணம். ஆனாலும் என்னதான் கல்லறைகளின்மீது படைக் கட்டடங்களைக் கட்டினாலும் மக்களின் மனதில் இருந்து மாவீரர் நினைவுகளை எந்த அதிகாரத்தாலும் அழித்துவிடமுடியாது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகங்கள் விற்பனைக்கு...!

ஹரன்

> “ தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் அவலங்களையும் தமிழ்த் தேசியவாதிகளின் தியாகங்களையும் பயன்படுத்தி அரசியல் நடத்துவதை யும் உணர்ச்சி அரசியல் பேசுவதையும் விடுத்து தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாமல், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவும் உண்மையாகவும் பாடுபட வேண்டும். ”

முள்ளிவாய்க்கால் தியாகங்களை விற்பனைப் பண்டங்கள் ஆக்கி, சுயலாப அரசியல் நடத்துவதில் தமிழ்த் தேசியவாதிகள் தொடர்ந்தும் வெற்றி கண்டு வருகின்றனர். தேர்தல் காலத்தில் அவர்கள் போட்ட உணர்ச்சி முழக்கங்கள் தேர்தல் முடிந்த பின்னர் மக்களை அடிமட்ட முட்டாளாக்கி அவர்கள் நடத்தும் சுயலாப அரசியல் நகர்வுகளுக்கும் இடையே பெரும் வித்தியாசங்கள் உணரபட்டு வருகின்றன. தேர்தல் பரப்புரைக் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை தேசியத் தலைவர் என்றும் விடுதலைப்புலிகளை விடு தலைப் போராளிகள் எங்கள் பிள்ளைகள் என்றும் உரிமை கொண்டாடியவர்கள் இன்று அரசுக்குக் கொடி, குடை, ஆலவட்டம் பிடிப்பதில் வெற்றி கண்டு வருவ தோடு, நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்து கிறோம் என தமது செயற்பாடுகளை நியாயப்படுத்தியும் வருகின்றனர். அதே போன்று முள்ளிவாய்க்கால் அவலத்தையும் தியாகத்தையும் அமைச்சுப் பதவிகளுக்கான அடிபாடுகளை மறைக்க இவர்கள் பயன்படுத்தி வருவது வேதனைக்குரிய விடயம் தான்.

முள்ளிவாய்க்கால் என்பது தமிழர் தேசத்தின் வீரத்தினதும் அவலத்தினதும் குறியீடு. சாவுக்கு திகதி குறித்து வெடித்துச் சிதறிய ஆயிரம் ஆயிரம் போராளிகளின் மூச்சுக் காற்று உலவும் இடம். இந்த மண்ணிலேயே 2009 ஆம் ஆண்டு மே மாதம் பல தியாகங்கள் தொடர்ச்சியாக அரங்கேறின. இந்தத் தியாகத்தினாலும் அதற்காக வன்னி மக்கள் கொடுத்த உயிர் விலையாலும் இன்று உலக மாநாடுகளில் விவாதிக்கப்படும் விடயமாக மாறியிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் தமிழர் பிரச்சினையின் முடிவுப்புள்ளி அல்ல. ஆரம்பப் புள்ளி என தமிழ் சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் விமர்சிக்கும் அளவுக்கு தமிழர் பிரச்சினையில் முள்ளிவாய்க்கால் தியாகங்கள் ஆழமான வரலாற்றுத் தடங்களைப் பதித்து விட்டு சென்றிருக்கின்றன. ஆனால் இந்தத் தியாகங்களைத் தமது சுயலாப அரசியலுக்காகச் சிலர் பயன்படுத்தி வருவது யதார்த்த அரசியல் போக்கில் விமர்சனத்திற்கு உரியதாக ஆத்திரத்தை கிளப்புவதாக உள்ளது.

அண்மையில் முள்ளிவாய்க்கால் மாகாணசபை உறுப்பினர் பதவியேற்புப் பற்றிய விடயங்கள் தமிழர் நெஞ்சங்களில் வடுக்களை ஏற்படுத்தி உள்ளன. வன்னிப் போரில் சிக்கித் தமது உறவுகளைத் தொலைத்த சுதந்திரப் போருக்காகத் தமது பிள்ளைகளை வெற்றித் திலகமிட்டு அனுப்பிய பல தாய்மார்கள் இன்று ஏதுமற்ற வறுமையின் வெறுமையில் தவிக்கிறார்கள். அடுத்த வேளை உணவுக்குகூட வழியில்லாத வறுமையும் வெறுமையும் முல்லைத்தீவு மக்களையும் கிளிநொச்சி மக்களையும் ஆழமாகப் பீடித்திருக்கின்றது. நிவாரணத் திகதியும் முடிவடைவதால் இன்னும் சில நாட்களில் பசி பட்டினி அவர்களை ஆட்கொள்ளத் துடியாய் துடிக்கிறது. இந்த அவலத்தின் மத்தியிலும் அங்குள்ள மக்கள் கூட்டமைப்பையே ஆதரித்துள்ளார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தைவிட, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்திலேயே வாக்களிப்பு வீதம் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டனது. மொத்த வாக்கு விகிதத்தில் 80 வீத வாக்குகளைக் கூட்டமைப்பு தனதாக்கிக் கொண்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிப் பீடம் ஏறியது. ஆனால் வன்னி மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்தது மாகாண சபையின் மீதான காதலாலும் அல்ல அமைச்சுப் பதவிகள் மீதான ஆசையினாலும் அல்ல. அது தமிழர் தனித்துவத்தை நிலை நாட்டவே. ஆனால் நந்தவன ஆண்டிகளைப் போல அந்த வெற்றியை மலினப்படுத்தி போட்டுடைப்பது கவலைக்குரிய விடயமே. தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அது முடியாமல் போகவே அவலத்தில் சிக்கிய முல்லைத்தீவு மக்களுக்கு அமைச்சுப் பதவி தாருங்கள் எனக் "பிளேட்டை" மாற்றிப் போட்டமை முல்லை மக்களின் வெந்த புண்களில் வேலினை பாய்ச்சியிருக்கிறது. அதே போன்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய ரெலோ சார்பிலான மாகாண சபை உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கத்தின் பதவியேற்பும் கடும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளது. இது குறித்த விமர்சனங்களை முன்வைக்கும் மக்கள் "தாயக விடுதலைக்காகவும் தனிநாடு கோரியும் போராடிய ஆயிரக்கணக்கான மாவீரர்கள் மடிந்த பூமியில் இலங்கையின் இறைமையை மீறமாட்டோம்" எனவும், இலங்கையில் மீண்டும் பிரிவினைகளை தூண்டமாட்டோம் என்றும் சத்தியம் செய்வது அந்த மாவீரர்களின் கொள்கைகளை தியாகங்களை அவமானப்படுத்துகின்றனர்" என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த விமர்சனம் குறித்து சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:

இலங்கை அரசியல் யாப்பைக் கடுமையாக எதிர்த்த கலாநிதி என்.எம் பெரேரா கூட 'நாடாளுமன்றத்தில் அரசியல் யாப்பை மீற மாட்டேன்' என்று சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே அதை விமர்சித்தார். எமக்கு கொள்கைதான் முக்கியம் .நான் அங்கு இரு வகையான சத்தியப் பிரமாணத்தைச் செய்தேன். ஒன்று வழமையாக எனது கடமைகளை ஒழுங்காகச் செய்வேன் என்றும், மற்றையது நான் மாகாண சபை தேர்தலில் கூறியது போன்று "உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த பூரண சுயாட்சியை வென்றெடுக்க உழைப்பேன், அதை அரசு வழங்க மறுத்தால் சர்வதேசத்தின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரனையுடன் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வைக் வென்றெடுப்பதற்காக உழைப்பேன்" என அங்கு மடிந்த இலட்சக் கணக்கான மக்கள் மீதும் 50,000 மேற்பட்ட மாவீரர்கள் தமிழ்த் தேசியவாதிகள் மீதும் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டேன் என்று முள்ளிவாயக்கால் பதவியேற்பை நியாயப்படுத்தி இருக்கிறார் மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்.

இருப்பினும் மாவீரர்களின் இலட்சியங்களுடன் அங்கு நடத்தப்பட்ட சத்தியப் பிரமாண உறுதிமொழிகள் முரண்படுவது குறித்து சிவாஜிலிங்கத்தின் நியாயப்படுத்தல் போதுமானதாகவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி, சுயேச்சையாகக் களமிறங்கிய அனுபவம் சிவாஜிலிங்கத்துக்கு உண்டு. அதன் பின் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் களமிறங்கி பின்தள்ளப்பட்ட வாக்கு விகிதத்தைப் பெற்ற சிவாஜிலிங்கம், 'எனக்கு சுழற்சி முறையில் தலைவர் பதவியைத் தரவேண்டும்' என அடம்பிடித்தவர் அவர். இத்தகைய நிகழ்வுகளால் சிவாஜிலிங்கத்தின் மீது ஆத்திரத்தில் இருந்த மக்களுக்கு முள்ளிவாய்க்கால் பதவியேற்பு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக விருக்கிறது. மன்னார் ஆயரின் வேண்டுகோளுக் இணங்கவே ஏனைய உறுப்பினர்கள் முள்ளிவாய்க் காலில் பதவியேற்பை நிகழ்த்தவில்லை என தம்மை நியாயப்படுத்தினார். முதல் நாள் முள்ளிவாய்க்காலில் பதவியேற்பதாகச் சொல்லிவிட்டு அடுத்த நாளே ஆயர் சொன்னார் என்று தம் முடிவை தடாலடியாக மாற்றிக் கொண்ட இந்த ஒன்பது உறுப்பினர்களும் எப்படி தேர்தலில் சொன்னதை நிறைவேற்றுவார்கள் என்ற கேள்வி எழுகிறது. கொள்கையில் நிரந்தரமில்லாதவர்கள் தம்முடைய பதவி ஆசைகளை மறைக்கவே முள்ளிவாய்க்கால் முகமூடிகளை அணிந்திருக்கிறார்கள் என்பது வெளிச்சமானது. எனவே தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் அவலங்களையும் தமிழ்த் தேசியவாதிகளின் தியாகங்களையும் பயன்படுத்தி அரசியல் நடத்துவதையும் உணர்ச்சி அரசியல் பேசுவதையும் விடுத்து தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாமல், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காகவும் உண்மையாகவும் பாடுபட வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

# காதலர் மட்டும்...



## உடைந்த இதயங்களுக்கு

இந்த உலகத்தில் காதலைச் சந்திக்காதவர்களே இருக்க முடியாது. 'என் வாழ்க்கையில் காதல் வரவே இல்லை' என்று சொல்லும் சிலர், ஒன்று பொய் சொல்கிறார்கள், இல்லையென்றால் தன் வாழ்க்கையில், காதல் வந்து போனதே தெரியாத அப்பாவிகள்!

காதல் ஒரு சிலருக்கு திருமணத்தை பரிசளிக்கும்! சிலநேரம் தற்கொலை வரை கொண்டு செல்வதும் உண்டு. அப்படிப்பட்ட உடைந்த உள்ளங்களுக்கான ஆறுதல் சில.....

* ஒரு பேப்பரை எடுங்கள், உங்களுடைய அவன் அல்லது அவள் மீதுள்ள கோபத்தை அதில் ஆசை தீர கொட்டுங்கள்! எழுதியதை சத்தமாகப் படியுங்கள். பின்னர் அந்தப் பேப்பரை சுக்குநூறாக கிழித்து எரித்து விடுங்கள். காத(லி)லர் நினைவுகளையும் சேர்த்துதான்!



* உங்கள் வேலையைத் தீவிரமாக காதலிக்க ஆரம்பியுங்கள். அதில் கிடைக்கும் வெற்றிகள், உங்களுடைய வேதனையை நிச்சயம் மறக்கடிக்கும்.

* சார்லி சாப்ளின், விவேக், வடிவேல், கவுண்டமணி செந்தில் எல்லோருடைய நகைச்சுவைகளைத் திரும்பத் திரும்பப் பாருங்கள். வாய் விட்டுச் சிரியுங்கள். வாய்விட்டுச் சிரிச்சா நோய் மட்டுமல்ல, காதல் தோல்வியோட வலி கூட ஓடிப் போயிடும்.

* உங்கள் காதலி அல்லது காதலன் சூழ்நிலை காரணமாகக்கூட உங்களை விட்டுப் பிரிய நேர்ந்திருக்கலாம். அவர் பக்கத்து நியாயங்களை, நீங்களே உங்கள் உள் மனதுக்கு எடுத்துச் சொல்லுங்கள். நிச்சயம் உங்கள் மனது ஆறுதலடையும்.

* நீங்கள் படித்துக் கொண்டிருப்பவராக இருந்தாலோ அல்லது வேலைக்குச் செல்பவராக இருந்தால் ஒரு வாரம் லீவுபோடுங்கள். உங்களைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாத ஒரு இடத்திற்கு பெற்றோரோடு போய்விட்டு வாருங்கள். இந்த இட மாறுதல் நிச்சயம் ஒரு மனமாற்றத்தை உங்களுக்குள் ஏற்படுத்தும்.

* உங்களை முழுமையாகப் புரிந்து கொண்ட நண்பர்களிடம் உங்கள் மனதிலுள்ள எல்லா வேதனைகளையும் கொட்டித் தீர்த்து தேவையென்றால் அழுதும் தீர்த்து விடுங்கள்.

* உங்களுடைய அவ(ர்)ள் கெட்டவராக மாறிவிட்டதால், உலகத்திலுள்ள எல்லா பெ(ஆ)ண்களுமே 'கெட்டவர்கள்தான்' என்று கண்மூடித்தனமாக தீர்மானிக்காதீர்கள். இந்த குறுகிய மனப்பான்மை மற்றவர்களை உங்களிடம் பழக விடாமல் செய்துவிடலாம்!

* உங்கள் தோல்வியினுடைய வலியை முழுமையாக அனுபவியுங்கள், தேவைப்பட்டால் உங்கள் ரூமுக்குள் வாய் விட்டு, வெட்கப்படாமல் கதறி அழுங்கள். கண்ணீர் எல்லாக் காயங்களையும் ஆற்றும்.

* காதல் தோல்வியால் அழுது தற்கொலை போன்ற கடைசி முடிவுக்கெல்லாம் போய்விடாதீர்கள். ஏனென்றால், தற்கொலைகள் எல்லாமே சமுதாயத்தையோ அல்லது ஒரு தனி நபரையோ பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு செய்யும் முட்டாள்தனம்தான். ஆனால் வாழ்ந்து காட்டுதலைவிட சிறந்த பழிவாங்குதல் வேறில்லை. எனவே வாழ்க்கையில் தோல்வி காண்பது வெற்றியின் அறிகுறியே.

## காதல் திருமணத்திற்கு 'ஜாதகம்' நன்மை தருமா ?

பொதுவாக காதலர்கள் பெற்றோர் அனுமதியுடன் திருமணம் செய்துகொள்ளும் முன், சில பெற்றோர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்கி ஜாதக பொருத்தம் பார்ப்பதுண்டு.

இப்படி பட்ட சூழ்நிலையில் காதலர்களின் சுய ஜாதகத்தில், இல்லற வாழ்க்கை நல்ல முறையில் அமைவதற்கு வழி கோலும் பாவங்களான, குடும்பம் மற்றும் களத்திர ஸ்தானங்கள் பாதிக்க பட்டு இருந்த போதிலும், லக்கினம் மற்றும் பூர்வ புண்ணி யம் எனும் இரண்டு பாவங்கள் இரண்டும் வலிமை பெற்று இருப்பது அவசியம், ஏனெனில் தான் அமைத்துக் கொண்ட வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்து கொள்ள இந்த இரண்டு பாவங்கள் 100 சதவிகிதம் உறுதி புரியும், வாழ்க்கையில் எவ்வித சிரமங்கள் வந்த போதிலும் அவற்றை எல்லாம் மனத் துணிவுடன் எதிர் கொண்டு, காதல் திருமண வாழ்க்கையில் வெற்றி பெரும் யோகத்தைத் தரும்.

காதல் தம்பதியரின் வாழ்க்கை மேலும் மேலும் முன்னேற்றம் பெரும் மதிப்பு, மரியாதை, அந்தஸ்த்து, கௌரவம் போன்றவை இயற்கையாக அமையும், தம்பதியருக்கு குடும்ப வாழ்க்கையில் ஒரு பிடிப்பும், நம்பிக்கையும் உண்டாகும். எனவே காதல் திருமணம் செய்துகொள்ளும் அன்பர்களின் ஜாதகத்தில் குடும்ப ஸ்தானம் களத்திர ஸ்தானம், ஏதாவது ஒருவகையில் பாதிக்க பட்டு இருக்கும் என்பது உறுதி. ஆனால் லக்கினம் மற்றும் பூர்வ புண்ணியம் பாதிக்கபடாமல் இருப்பது அவசியம். ஒருவேளை காதல் திருமணம்செய்துகொள்ளும் அன்பர்களின் ஜாதகத்தில் லக்கினம் மற்றும் பூர்வபுண்ணியம் எனும் இரண்டு பாவகங்களும் பாதிக்கப்படும் பொழுது ஜாதகரின் காதல் வாழ்க்கையும், காதல் திருமண வாழ்க்கையும் மிகப்பெரிய சிக்கல்களை சந்திக்கவேண்டி வரும், இதனால் காதலர்களின் மன உறுதி உடைபடும், குடும்ப வாழ்க்கை சின்னாபின்னமாகும் சூழ்நிலையை, திருமணத்திற்கு பிறகு வெகு விரைவில் தரும். அப்பொழுது காதலர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் காணும் மன நிலையையும், விட்டுகொடுக்கும் மனப்பக்குவத்தை இழந்து தங்களது காதல் வாழ்க்கைக்கு முடிவுரை எழுதும் நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதே உண்மை.

எனவே மேற்கண்ட குடும்ப ஸ்தான அமைப்பில் இருந்து ஜாதகர் 100 சதவிகித நன்மையை பெற வேண்டும் எனில் குடும்ப ஸ்தானம் எனும் இரண்டாம் பாவம் சுய ஜாதகத்தில் 100 சதவிகிதம் நல்ல நிலையில் இருப்பது அவசியம்.

ஆகவே காதல் திருமணம் செய்துகொள்ளும் அன்பர்கள் குடும்ப களத்திர ஸ்தான அமைப்பில் இருந்து வரும் இன்னல்களை ஏற்று வாழ்க்கை இனிமையாக வாழும் மனபக்குவத்தை வளர்த்துகொள்வது மிகுந்த நன்மை தரும், காதல் திருமணம் ஆரம்பத்தில் துன்பமாக இருந்தாலும் சில காலங்களுக்குப் பிறகு வாழ்க்கை மிகவும் இனிமையானதாக மாறிவிடும், என்ற உண்மையை காதல் திருமணம் செய்துகொண்ட தம்பதியர் இருவரும் உணருவது காதல் திருமண வாழ்க்கை 100 சதவிகித வெற்றி பெற உதவி புரியும்.




சுடர்ஒளி "காதல்பரிசு' போட்டியில் சிறந்த படைப்பை எழுதிய நீ.ஜனகாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பரிசை வழங்கினார்.

### காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஏங்கும் நெஞ்சங்கள்....

சித்தன்கேணி.
பாமினி லோகேஸ்வரன்



அன்று அதிகாலை ஐந்து மணியிருக்குமென பிள்ளையார் கோயில் காண்டாமணி அறிவித்தது. அன்று தைமாதத்து முதல் நாள் சூரியனுக்கும் உழவர்களுக்கும் நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடப்படுவது என நாம் எல்லோரும் அறிந்தவொன்று தான்.

யாழ். மாவட்டத்திலுள்ள காரைநகர் எனுமிடத்தில் ஓர் மாளிகை போல் ஒரு வீடு . அங்கு ஆட்கள் நடமாட்டம் உள்ளதா என சந்தேகிக்குமளவில் எவ்வித சத்தமோ, சந்தோஷமோ காணப்படவில்லை. அயல் வீடுகளில் எல்லாம் பொங்கல் பொங்கத் தயாராகிக் கொண்டிருந்த வேளை இவ்வீடு மட்டும் அமைதியாக காட்சியளித்தது. மீண்டும் பிள்ளையார் கோவில் மணி ஒலித்து பூசைக்குத் தயார் என அறிவித்தது. அவ் வீட்டிலே முருகேசு எனும் பெரியவர் ஓர் மூலையில் உட்கார்ந்திருந்த தன் மனைவியைப் பார்த்து " என்ன கனகம் இண்டைக்கு தைப்பொங்கலேல்லோ ஒருக்கா உந்தப் பிள்ளையாரிட்டையும், சிவன் கோயிலுக்கும் போட்டு வருவம் வாவன்" என பாசத்துடன் கேட்டார். பதிலேதும் வரவில்லை. " உன்னைத் தான் கனகம் என்ன யோசிக்கிறாய்" மீண்டும் முருகேசுவின் குரல் ஒலித்தது. " சும்மா போங்கோ உந்தக் கடவுளுக்கு என்ன குறை வச்சம் ஏன் தான் எங்களுக்கு மட்டும் உப்பிடி நடக்குது" எண்டு கூறி முடித்த போது அவளது கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது மட்டுமல்லாது சிந்தனைகளும் காலங்களும் பின் நோக்கி நகர்ந்தன.

அன்று முருகேசு, கனகம் அவர்களுடன் அவர்களின் புதல்வர்கள் அதாவது நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் என எவ்வளவு சந்தேஷமாக காலத்தை ஓட்டினார்கள். மூத்தவன் காந்தன் இவ்வருடம் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் மருத்துவத்துறை மாணவன். அடுத்தவன் சுமன் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவன். அடுத்தவன் சுதன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் படிக்கிறான். நான்காவது காந்தினி அவள் இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்காக படித்துக் கொண்டு இருக்கிறாள். கடைக்குட்டி மதன் இவ்வருடம் சாதாரணப் பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ளார். முருகேசு யாழ் இந்துக் கல்லூரியின் ஆசிரியர். கனகம் யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை ஆசிரியர். அதனால் அக் குடும்பத்திற்கு இறைவன் எவ்வித குறையும் கொடுக்கவில்லை. கடவுள் மீது பக்தியும், நம்பிக்கையும் கொண்ட அக் குடும்பத்தில் கஷ்டம், கண்ணீர், கவலை என்ற சொல்லிற்கே இடமில்லை. இவ்வாறாக வாழ்ந்த போது அவர்களுக்கு மட்டுமல்ல தமிழராகப் பிறந்த எல்லோருக்கும் ஒரே விதியாக யுத்தம் ஆரம்பமானது.

அப் போரில் எங்கு பார்த்தாலும் கதறல், அழுகுரல்கள் " முன்னேறிப்பாய்ச்சல்" என பெயர் சூட்டப்பட்டது. எல்லோரும் கைகளில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு தம் பாதுகாப்புத் தேடிச் சென்றனர். முருகேசு குடும்பமும் அப்படியே தான். செல்லும் போது குண்டு போடும் "சுப்பர்சொனிக்" "புக்காரா" என ஏகப்பட்ட விமானங்கள் மட்டுமன்றி ஷெல் தாக்குதல்களும் தொடர்ந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் முன்னால் ஐந்து பிள்ளைகளும் பின்னால் தாயும் தந்தையுமாகச் சென்றனர்.

நாவற்குழிப் பாலத்தை நெருங்கும் போது அடுத்தடுத்து ஷெல் தாக்குதல்கள். எல்லோரும் சிதறுண்டு விட்டனர். இதில் இக் குடும்பத்தில் பெற்றோருடன் மதனும், சுதனும், காந்தினியும் ஓர் பக்கமாக சிதறி ஓடும் போது ஓடி விட்டனர். மூத்தவன் காந்தன் வேறிடம் என குடும்பமே பிரிந்து விட்டது. அவ் "ஷெல்லால்" தம் குடும்பத்தில் யார் யார் இறந்து போனார்களென தெரியவில்லை. கதறல்கள், அழுகுரல்கள் , இரத்த வெள்ளத்தின் மத்தியில் அவரவர் சென்று விட்டனர்.

பெற்றோரைத் தவறவிட்ட பிள்ளைகள், சகோதரர்களையும், பெற்றோரையும் தவறவிட்ட காந்தனென ஒவ்வொருவரும் தேடி அலைந்து கொண்டிருந்தனர். அப்போது "சுதனும் ,காந்தினியும் தமக்கினியாரும் இல்லையென" விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்துகொண்டனர்.

காந்தன் தன் பெற்றோரும், சகோதரர்களும் இறந்திருக்கமாட்டார்கள் என உணவு எதுவும் உண்ணாது அவர்களைத் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

இறுதியில் எல்லோரையும் வன்னிக்கு செல்லும்படி உத்தரவு வந்ததும் காந்தன் "கிளாலிக்" கரையிலே அவர்களுக்காகக் காத்திருந்தான். அவன் காத்திருந்தது வீண் போகவில்லை. தன் சகோதரர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு பாதுகாப்பாக வன்னி மாவட்டம் சென்றனர். வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகிவிட்டது. "யாழ்ப்பாணம் போகலாமாம்" என்றதும் அக் குடும்பமும் யாழ்ப்பாணம் புறப்பட்டது. கவ லையும், கண்ணீருமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

அங்கு வந்ததும் அவர்கள் சுதனையும் , காந்தினியையும் தேடுவதைக் கைவிடவில்லை. யாழ்ப்பாணமெங்கும் இராணுவம், முளத்திற்கு முளம் காவலரண்கள் எங்கு பார்த்தாலும் சிங்கள மொழி. அப்போது முன்னேறிப் பாய்ச்சலில் வீர மரணத்தை தழுவிய மாவீரர்களது பெயர்ப்பட்டியலிலே "காரைநகரைச் சேர்ந்த சுதன் எனப்படும் தமிழ்மாறன், காரைநகரைச் சேர்ந்த காந்தினி எனப்படும் "கடற்புலி கடல்வாணி" எனும் பெயர்களை காந்தனது கண்கள் பார்த்தவுடன் அவனது முகம் வீங்கி கையிலுள்ள பத்திரிகை கண்ணீரில் மிதந்தது.

இவ்விடயமே அவர்களது வாழ்வில் ஏற்பட்ட முதற்புயற்காற்று. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களது பிரிவுத் துயரிலிருந்து விட முயற்சித்த போது ஓர் நாள் "றவுண்டப்பாம் எல்லாரையும் சுழிபுரம் விக்டோரியா பள்ளிக்கூடம் வ்ரட்டாம்" என்றதும் முகம் கழுவியவர்கள், கழுவாதவர்கள் என அக்கிராமமே புறப்பட்டது. வயதானவர்கள் குழந்தைகளெனப் பார்க்கவில்லை.

"இளம் பிள்ளையளை இஞ்சால வரட்டாமென" இராணுவத்தினர் கூறுவதை ஒரு பெரியவர் தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். காந்தனும், சுமனும் செல்ல முருகேசு தானும் பின் தொடர்ந்தார். ஆனால் ஒரு இராணுவம் அவரைச் செல்லவிடாது காந்தனையும் சுமனையும் மட்டும் செல்ல அனுமதித்தது. அங்கு இவர்களைப் போல பல இள வயதினர் காணப்பட்டனர். கனகத்தின் வாயிலிருந்து "கடவுளே சிவனே இவங்களால எங்கட பிள்ளையளுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது. அடுத்த திருவிழாவுக்கு உனக்கு கற்பூரச் சட்டி எடுப்பேன்" என நேர்த்திக்கடன் வைப்பதாகக் கூறினாள்.

ஒரு மணித்தியாலயம் கழித்து சுமன் தகப்பனிடம் வந்து அப்பா "அண்ணைய அவங்கள் கூட்டிக் கொண்டு போயினம் இன்னும் இருபது பெடியங்களையும் கூட்டிக் கொண்டு போகினம் " ஏதோ தலையாட்டி ஆட்டினதாம். அதனால் ஏதோ விசாரணையாம்" என்றான். கண்ணீரும் கம்பலையுமாக. அடுத்த சோதனை அவர்கள் குடும்பத்துடன் விளையாடியது. அவனை தேடாத இடமில்லை. ஒரே கவலையாக அக் குடும்பம் காணப்பட்டது.

ஓர் நாள் சுமன் பாடசாலை சென்று வரும் போது ஓர் விபத்து "ஆமிக்காரண்ட வான் இடிச்சுப் போட்டுதாம் பெடியன் அதிலையே சரி" எண்டதும் முருகேசு,கனகம் சிலையானார்கள். பட்டுச்,சிட்டுக்குருவியாய் சிறகடித்த அக்குடும்பம் பெற்ற பிள்ளைகள் யாருமின்றி தனி மரமாக இன்று வாழ்கிறார்கள்.

அப்போது "கனகம் டீச்சர் இந்தாங்கோ பொங்கல் அம்மா தந்துவிட்டவா" என அயல் வீட்டு சிறுவன் கொடுத்துவிட்டுப் போனான். நினைவுகள் பழைய சுவடுகளின் அடையாளங்களிலிருந்து கனகம் விடுபட்டு எழுந்து சமயலறைப்பக்கம் சென்றாள். அவள் இருந்த இடமோ நீர்த்தடாகம் போல கண்ணீர் ஆறாகக் கிடந்தது.

உள்ளே சென்று தன் வேலைகளில் மனமின்றி ஈடுபட்டாள். "கண்டறியாத கடவுளாம் கடவுள்" என அவளது பேச்சும் வாயும் கடவுளைக் குறை கூறியது.

இவ்வாறு கனகம் முருகேசு குடும்பமல்ல இன்னும் எத்தனையாயிரம் குடும்பங்கள்,தாங்கள் பிள்ளைகள், மழலைகளை இழந்து இந்த மண்ணில் வாழ்ந்து வருகிறது.

கனகம்மா, முருகேசு இருவரும் தமது மூத்த மகன் எப்போதாவது வருவான் என எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு எத்தனை குடும்பங்கள் மீண்டும் எமது வாழ்வில் ஒளி விளக்கு பிரகாசிக்காதா என ஏங்கும் நெஞ்சங்கள் பற்பல உண்டு. அவர்களது வாழ்வில் மீண்டும் ஒளி ஏற்படுமா என தமிழ் இனம் என்றென்றைப் படைத்த இறைவனிடம் தான் கேட்க வேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை




தொடர் கதை

14

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

'ஏன் எங்கட பிள்ளையும் குடிக்கப் பழகியிருப்பானே? தெல்லிப் பளையில் வேலைசெய்யிற கனகசபை சொன்னவர் வெளிநாட்டில இருந்து வாற ஆக்களில கனபேர் குடிச்சு, நோயில வந்து போயினமாம்."

"தேவையில்லாமல் மூளையைப் போட்டு குழப்பாதையும்..குடிக்கிற பிள்ளை எங்கையிருந்தாலும் குடிக்கும்."

"என்னப்பா அங்க போன பெண்டுகளும் குடிப்பினம் தானே.?"

நான் பெரிதாகச் சிரித்தேன்.

"என்ன நீர்? கலியாண வீட்டுக்கசற்றிலை கலியாணம் முடிஞ்ச கையோட 'வைனை' கிளாசிலை ஊத்திப்போட்டு, கிளாஸை பிடிச்சுக் கொண்டு பெண்டுகள் நிக்கிறதை நீர் பார்க்கேல்லையோ சில நேரங்களில குடிக்கவேண்டிய தேவையும் இருக்கும். சில வேளையில் குடிக்கிற மாதிரி நடிக்க வேண்டியும் இருக்கும்"

"என்ர கடவுளே!"

மனுசி பெரிதாகப் பெருமூச் செறிந்தாள்.

ஏதோ மறந்தது நினைவுக்கு வந்தது போல் கேட்டாள்.

"என்னப்பா வாசுகி வீட்டில 'கொமட்' கட்டீனமெண்டு சொன்னியள், எங்கட பிள்ளையும் குடும்பத்தோட இஞ்ச வாறதெண்டால்.... நாங்களும் 'கொமட்' கட்ட வேண்டி வருமே?"

"உதையேன் இப்ப யோசிப்பான். அவையள் வரேக்க பார்ப்பம்"

பொழுது பட்டுவிட்டது.

வழமைபோல் எங்களுடைய வேலைகளில் இருந்த போது, சண்முகமாமா வீட்டுக்கு ஓடினோம். அயலட்டைச் சனங்களும் சேர்ந்து விட்டார்கள்.

காதில் விழுந்த செய்தியோ....!

மாமா இறந்து விட்டார்!

சண்முகமாமா 'மோசம்' போய்விட்டார்.

யாருக்கும் பாரமாக இருக்காமல், பிரச்சினை கொடுக்க விரும்பா மல், பாயில் படுத்து, நோயில் வீழ்ந்து, கஸ்ரப்படாமல், நிம்மதியாய் 'மனுசன் போய்ச் சேர்ந்து விட்டார்'

நெருங்கிய உறவினர்களுக்கு தகவல் சொல்லியனுப்பினோம். கும்பல் கும்பலாகச் சனங்கள் கதைத்துக் கொண்டு நின்றார்கள்.

"சா...... தங்கமான மனுசனப்பா"

"கடைசி நேரத்தில கொஞ்சம் யோசிச்சுப் போட்டார்"

"மனுசன் கொஞ்சநாளாய் அக்கா அக்கா எண்டெல்லோ அழுது கொண்டு இருந்தவர்."

"சே..... கலியாணம் முடிச்சிருந்தாலும் மனுசி, பிள்ளையாவது இருந்திருக்கும் இப்ப....."

எனது மனுசி அதிர்ச்சியடைந்த நிலையிலிருந்து மீளாமல் விக்கித்து நின்றாள்.

எல்லோர் மனதிலும் அடுத்தது என்ன?

என்ற கேள்வியே எழுந்து நின்றது.

'பொடியை' உடனே எடுப்பதா?

சகோதரி வரும் வரை வைச்சிருப்பதா?

தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, கொஞ்சநேரம் அழுத தாகவும், வரவிரும்புவதாகவும், கடைசியில் தன்னை எதிர்பார்க்க வேண்டாம் நடக்க வேண்டிய மற்றக் காரியங்களை உடனே பார்க்கும் படியும் சண்முகமாமாவின் அக்கா சொல்லிவிட்டார்.

கடைசியில்....

சண்முகமாமாவின் இறுதி ஊர்வலம் சகோதரமின்றி, அயலார், உறவினர், நண்பர்கள் சகிதம் நடந்து முடிந்தது.

மனுசி என்னை அவசரப்படுத்தினாள். வாசுகி வீட்டுக்கு வந்து சொல்லிவிட்டுப் போனது இப்போதும் காதில் ஒலித்தது.

"ரகுமாமான்ரை மூத்தவன்ர 'பிறந்தநாள்' அது அவர் இஞ்சைவர இரண்டு நாளைக்கு முன்னமே முடிஞ்சு போச்சு. உடன கொண்டாட முடியேல்ல. அதான் வாற வியாழக்கிழமை செய்யிறம். சொந்தக்காரர் எல்லோருக்கும் சொல்லிச் செய்ய மாமா ஆசைப்படுகிறார். இரண்டு பேரும் வேளைக்கு வந் திடுங்கோ. ராத்திரிக்கு அங்கதான் சாப்பாடு"

*(அடுத்தவாரமும் வருவார்கள்)*



# இராசி பலன்

23.10.2013 - 29.10.2013




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**செயல்களை ஆர்வமுடன் நிறைவேற்றும், மேஷ ராசிக்காரர்களே!**

உங்களின் பேச்சு, நேர்மை வசீகரத்துடன் இருப்பினும், இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால், சிரமம் தவிர்க்கலாம். உடன் பிறந்தவர்கள், ஓரளவு உதவுவர். வாகனத்தில் மிதவேக நடைமுறை பின்பற்றவும். உடல்நல ஆரோக்கியம் சீராகும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதிற்கு ஆறுதல் தரும். அதிக உழைப்பினால், தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவை சராசரிக்கு கொண்டு வரலாம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**சூழ்நிலைக்கு ஏற்ப, மனதை பக்குவப்படுத்தும், ரிஷப ராசிக்காரர்களே!**

கடந்த வாரங்களில், உங்களை கண்டுகொள்ளாமல் விலகிய சிலர், விரும்பி அன்பு பாராட்டுவர். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். இளைய சகோதரருக்கு உதவிபுரிவீர்கள். வீடு, வாகனத்தின் பராமரிப் பணி நிறைவேறும். புத்திரர் செயல்திறன் வளர்ந்து, படிப்பில முன்னேற்றம் பெறுவர். குடும்பத்தில் இருந்த நெருக்கடியான சூழ்நிலை மாற்றம் பெறும். இல்லறத்துணையின் மனக்குறையை சரி செய்வதில், கவனம் கொள்வீர்கள்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**நல்லவர் ஆலோசனையை மதித்து நடக்கும், மிதுன ராசிக்காரர்களே!**

குடும்பத்தேவைகளுக்கு, அளவான பணச்செலவு செய்வதால், பணக்கடன் பெறுவதை தவிர்க்கலாம். வீடு, வாகனத்தில் நம்பகக் குறைவானவர்களுக்கு, இடம் கொடுக்கவேண்டாம். புத்திரரின் குழப்பமான எண்ணங்களை, இனிய அணுகுமுறை, ஆலோசனையால் சரி செய்வீர்கள். சீரான ஓய்வு, உடல்நலம் பாதுகாக்கும். இல்லறத்துணையின் கருத்துக்கு, உரிய மரியாதை தருவது அவசியமாகும்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**இயற்கையாகவே, சுறுசுறுப்பு குணம் நிறைந்த, கடகராசிக்காரர்களே!**

சிறு விஷயங்களிலும், பதற்றமான மனதுடன் நடந்து கொள்வீர்கள். இதனால், சிரமமும், காலவிரயமும் ஏற்படலாம். அதிக விலையுள்ள பொருட்களை பயன்படுத்துவது, பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். வாகன பராமரிப்பு மேற்கொள்வதால், பயணமுறை எளிதாகும். எதிரியின மனப்பாங்கு உணர்ந்து விலகுவீர்கள். இல்லறத்துணையின் ஆலோசனை, உங்களைப் புதிய வழியில் செயல்படவைக்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**தன் கடமையை சரி வர நிறைவேற்றும் சிம்ம ராசிக்காரர்களே!**

மனதில் புத்துணர்வும், செயல்களில் பரிமளிப்பும் திறனும் உருவாகும். புதிய இலட்சியங்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் எதிர்மறையாக இருந்த சூழ்நிலை விலகும். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி வளரும். வழக்கு விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். நிலுவை பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். தொழில்,வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு வெகுமதி பெறுவர்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**பிறர் மனமறிந்து பேசி இதமுடன் செயல்படும் கன்னி ராசிக்காரர்களே!**

நண்பர்களின் விமர்சனங்களை ஆலோசனையாக கருதுவதால் புதிய படிப்பினையும், நன்மைகளும் வந்து சேரும். குடும்பத் தேவைகளுக்கான பணச்செலவு அதிகரிக்கும். சிறு அளவில் பணக்கடன் பெற சூழ்நிலை உள்ளது. இஷ்டதெய்வ நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். புத்திரரைக் கண்டித்து, நல்வழி நடத்துவதில் நிதான அணுகுமுறை பின்பற்ற வேண்டும். இல்லறத்துணை உதவும் மனப்பாங்குடன் நடந்து கொள்வார்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**குடும்ப ஒற்றுமை வளர்ப்பதில் அக்கறை மிகுந்த துலாம் ராசிக்காரர்களே!**

உறவினர்களிடம் உங்கள் மீது உருவான அதிருப்தி எண்ணம் மாறுகிற வகையில் நடந்து கொள்வீர்கள். பேச்சில் நியாய, தர்ம குணம் மிகுந்திருக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் கிடைக்கிற வசதியை போற்றி மகிழ்வீர்கள். புத்திரரின் செயல்குறையை இனிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். எதிர் மனப்பாங்கு உள்ளவரால் வருகிற தொல்லையை மன உறுதியுடன் முறியடிப்பீர்கள்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**சாதனை செயல்களில் துணிந்து ஈடுபடும் விருச்சிக ராசிக்காரர்களே!**

எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. வீடு, வாகனத்தில் பொருட்கள் களவு போகாமல் பாதுகாத்து கொள்வது அவசியம். புத்திரர் உடல்நலக் குறைவு, மனச் சஞ்சலம் ஆகிய தொந்தரவை எதிர்கொள்வர். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். இல்லறத்துணையின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்வைத் தரும். தொழிலில் உருவாகிற நிர்பந்தம் தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராக அமையும். பணியாளர் நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பது நல்லது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தன்னால் இயன்ற உதவியை பிறருக்கு வழங்கும் தனுசு ராசிக்காரர்களே!**

சிறு பணியும் நேர்த்தியாக அமைந்து அதிகபட்ச நன்மையை பெற்றுத் தரும். அக்கம் பக்கத்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். புதிதாக வீடு, வாகனம் வாங்க நல்லயோகம் உண்டு. புத்திரரின் தேவைகளை தாராள அளவில் பூர்த்தி செய்தாலும், சிறு மனக் குறையுடன் நடந்து கொள்கிற மாறுபட்ட சூழ்நிலை இருக்கும். நண்பரின் இல்ல விழாவில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் குடும்பப் பணி நிறைவேற்றுவார். தொழிலில் அபிவிருத்திப் பணி சிறப்பாகச் செய்வீர்கள்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**காலத்தின் அருமை கருதி பணிபுரியும், மகர ராசிக்காரர்களே!**

எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். வாழ்வில் சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்கிற ஆர்வம் அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம், பயணமுறையை எளிதாக்கும். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு அத்தியாவசிய செலவுக்கு உதவும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் நன்மை பெற, புதிய வாய்ப்பு உருவாகும். அரசு பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சலுகைப் பயன் பெற யோகம் உண்டு.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**சூழ்நிலையை சாதகமாக மாற்றும் திறனுள்ள கும்ப ராசிக்காரர்களே!**

குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்கு, உரிய முக்கியத்துவம் தருவதால், ஒற்றுமை சீராக அமையும். பணவரவை சிக்கனமாக செலவு செய்வீர்கள். மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். வாகன பராமரிப்பு மேற்கொள்வது நன்மை தரும். புத்திரர் வேத சாஸ்திர அறிவில் முன்னேற்றம் காண்பர். எதிரியிடம் விலகுவதால் நேரம், நற்பெயரை பாதுகாக்கலாம். இல்லறத்துணையின் செயல்பாடுகளில் உருவாகிற குளறுபடியை குறை சொல்ல வேண்டாம்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**வாக்குறுதி தருவதில் முன்யோசனை மிகுந்த மீன ராசிக்காரர்களே!**

மனஉறுதியுடன் செயல்பட்டு, வாழ்வில் சில மாற்றம் கொண்டு வருவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். அலைச்சல் தரும் என்று நினைக்கிற பயணம் தவிர்ப்பது நல்லது. புத்திரரின் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்து பெருமை தேடித் தரும். முன்னோர் செய்த புண்ணியத்தின் பலன் மறைபொருளாக நின்று உதவும். எதிரி வியந்து விலகுகிற புதிய சூழ்நிலை உருவாகும். இல்லறத் துணையின் எண்ணங்களை மதித்து நடப்பீர்கள். தொழிலில் தாமத நிலை விலகி, வளர்ச்சியின் வெளிப்பாடு கண்கூடாக தெரியும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர். குடும்ப பெண்கள் பொறுப்புணர்வுடன் நடந்து, குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டு

தொகுப்பு : வரு

# காலம் கடத்த முடிவா?



சச்சினின் ஓய்வுமுடிவானது ஆச்சரியமான ஒன்றல்ல. ரசிகர்கள் உட்பட பலரும் எதிர்பார்த்ததே! ஆனால்,சச்சினின் ஓய்வு அறிவிப்பு குறித்து அவரது பால்யநண்பனும் முன்னாள் இந்தியக் கிரிக்கெட் அணிவீரருமான வினோத் கம்ப்ளி தெரிவித்திருக்கும் கருத்து [illegible] வைக்கிறது. சச்சினின் ஓய்வு [illegible] ரசிகர்களுக்கு ஏமாற்ற மானது ஆனா[illegible] முடிவு காலம் கடந்தது. 2011 இல் இந்தியா [illegible]கக் கிண்ணத்தை ஜெயித்தபோதே ஓய்வு கு[illegible]ம் சச்சின் அறிவித்திருக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாகவே சச்சின் எதிர் பார்த்தளவு பிரகாசிக்கவில்லை என்பது கம்ப்ளியின் கருத்தாகும்.

கடந்த காலங்களிலும் பலசந்தர்ப்பங்களில் சச்சின் தொடர்பில் கம்ப்ளியின் கருத்தைக் கேட்பதற்கு ஊடகங்கள் முண்டியடித்தன. அவரது கருத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன்? கம்ப்ளியும் சச்சினும் பாடசாலைக்கால நண்பர்கள். இவர்கள் இருவரும் இணைந்து படைத்த '664' என்ற இணைப் பாட்டமே இந்திய முதல் தரப் போட்டிகளில் அதிகபட்சமாக இருக்கின்றது. இதில் சச்சின் அடித்த இரட்டைச் சதமும்,கம்ப்ளி அடித்த முச்சதமும் அவர்கள் இருவரையும் இந்தியதேசியஅணியில் உள்வாங்க வழி சமைத்தது. சச்சின் அறிமுகமாகி மூன்று வருடங்களின் பின்னரே கம்ப்ளிக்கு இந்திய டெஸ்ட் அணியில் விளையாட சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனாலும், இரண்டரை வருடங்கள் மட்டுமே டெஸ்ட் அணியில் நீடித்த கம்ப்ளி 1992, 1996, 1999 வருடங்களில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியதுடன் 10 வருடங்கள் வரை இந்திய அணிக்காக ஒருநாள் போட்டிகளில் விளையாடினார். இந்நிலையில், இரண்டு வருடங்களுக்கு முன்பு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட போது, தான் இந்திய அணியில் நீடிப்பதற்கு சச்சின் உதவவில்லை எனக் குற்றம் சுமத்தியிருந்தார். இக் கருத்து பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்தது. தற்போது, மீண்டும் ஒருமுறை சச்சின் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் நண்பர்.

கம்ப்ளியின் கருத்தும் ஒருவகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதே! 2011 உலகக் கிண்ணத்திற்குப் பிறகு சச்சினின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. திறமைமிக்க இளம் வீரர்களின் வருகையால் 'நட்சத்திரவீரர்' என்ற அந்தஸ்தையும் தாண்டிச் சச்சினுக்கு ஓய்வு வழங்க வேண்டிய தேவை பி.சி.சி.ஐ.க்கும் இருந்தது. இந்தியதேசியஅணிக்காக இவர் விளையாடிய முதலாவது 20-20 போட்டியே இவரது கடைசிப் போட்டியாகவும் அமைந்தது. 2006 இற்கு பிறகு 20-20 போட்டிகளில் சச்சினை சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை பி.சி.சி.ஐ.க்கும் இருந்திருக்கவில்லை. ஐ.பி.எல்.போட்டிகளில் மட்டுமேவிளையாடிய இவருக்கு, கடந்த வருடமும், இந்தவருடமும் பகுதியளவில் ஓய்வு வழங்கப்பட்டதுடன் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பும் பறிக்கப்பட்டது.

ஒருநாள் போட்டிகளில் 50 சதங்களை அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டு அதற்குப் போதிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டபோதும் 49 சதங்களுடனேயே கடந்த வருட இறுதியில் ஒருநாள் போட்டிகளில் இருந்தான ஓய்வை அறிவித்தார். இருந்தும் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் சதத்தில் சதம் கடந்தவர் என்ற பெருமையைஅவர் பெற்றுக்கொண்டார் (டெஸ்ட்டில் 51 சதங்கள்). அதேபோல,கடந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுடன் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் 50ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டினார். (ஒருநாள் 18426,டெஸ்ட் 15837, 20-20 2797,முதல்தரம் 9391, ஏ தரம் 3573).

கடந்த ஒருவருடமாக சர்வதேச போட்டிகளில் டெஸ்டில் மட்டுமே பங்கேற்று வந்த சச்சின் இறுதியாக அடித்தசதம் கடந்த 2011 ஜனவரியில் தென்னாபிரிக்காவில் பெறப்பட்டது. அதன் பின்னர் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியதீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக 21 டெஸ்ட் போட்டிகளில் 38 இன்னிங்ஸ்களில் விளையாடியபோதும் சதமொன்றைப் பெற அவரால் முடியவில்லை. ஆனாலும், ட்ராவிட், லக்ஷ்மன் ஓய்வுக்குப் பிறகு டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணிக்குப் பாரியதொரு இடைவெளி இருந்ததால் நட்சத்திர வீரரை ஒதுக்கும் எண்ணம் பி.சி.சி.ஐ.க்கும் இருந் திருக்கவில்லை. கனவான் வீரரைக் கிரிக்கெட்டில் இருந்து துரத்துவதை இந்தியரசிகன் மட்டுமல்ல எந்தவொரு கிரிக்கெட் ரசிகனுமே விரும்பமாட்டான். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் ஓய்வுபெறுமாறு சச்சின் நிர்ப்பந்திக்கப்படவில்லை. அவரது முடிவுக்காகவே காத்திருந்தார்கள். அந்த முடிவையும் சச்சின் அறிவித்துவிட்டார்.

கிரிக்கெட்டின் கடவுள் சேர் டொன் பிரட் மனுக்கு அடுத்தபடியாக வாழும் கிரிக்கெட் கடவுளாகப் போற்றப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். அண்மைக்கால பெறுபேறுகளைத் தவிர்த்து சச்சின் பெறுபேறுகளும் படைத்த சாதனைகளும் ஏராளம். இதை இன்னொரு கிரிக்கெட் வீரரால் இலகுவாக முறியடிக்க முடியாது. கிரிக்கெட்டைநேசிக்கும் சகலரும் சச்சினையும் நேசிப்பார்கள். விமர்சனங்களைத் தாண்டி அனைவரது மனத்திலும் உயர்வாகப் போற்றப்படுபவர் சச்சின். இவரது இறுதி டெஸ்ட் எதிர்வரும் நவம்பர் 14 முதல் 18 வரை மும்பையில் இடம்பெறவுள்ளது. இதுவே சர்வதேச கிரிக்கெட் அரங்கு ஒன்றில் சச்சின் விளையாடும் கடைசிப் போட்டியாகும். இதைக் காணநேரில் பலலட்சம் ரசிகர்களும், தொலைக்காட்சி வாயிலாகப் பலகோடி ரசிகர்களும்திரள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

## சோகமான சதம்




இந்தியக் கிரிக்கெட் அணிசார்பாக சோகமான சதத்தைப் பெற்ற வீரராக விராட் ஹோக்லி மாறியுள்ளார். இதற்கு அவர் எடுத்துக் கொண்ட பந்துகள் 52. இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே தற்போது நடைபெற்றுவரும் ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி கடந்த 17ஆம் திகதி ஜெய்பூரில் இடம்பெற்றது. இதன்போதே விராட் விரைவு சதத்தைப் பெற்றதுடன் இந்திய அணியின் வெற்றியையும் உறுதி செய்தார்.

இதற்கு முன்னர், இந்திய வீரரான வீரேந்தா சேவாக் 60 பந்துகளில் சதத்தைத் தொட்டதே சாதனையாக இருந்தது. கடந்த 2009இல் ஹமில்டனில் இடம்பெற்ற நியூசிலாந்துக்கு எதிரான போட்டியிலேயே சேவாக் தனது விரைவு சதத்தைப் பெற்றார். ஹோக்லி பெற்றசதம் சர்வதேச அளவில் 7 ஆவது விரைவு சதமாக இருக்கின்றது.

இதுவரை 115 ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள ஹோக்லி 16 சதத்தைப் பெற்றுள்ளார். சச்சினின் சத சாதனையை முறியடிக்க கூடிய தற்போதுள்ள வீரர்களில் விராட் முதன்மையானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முதல் ஐந்து வீரர்கள் பெற்றுக் கொண்ட அரைச்சதம் உலக சாதனையாகப் பதியப்பட்டுள்ளது.

**விரைவானசதம் (இந்தியஅணி)**

| வீரா | பந்துகள் | எதிரணி |
|---|---|---|
| விராட் ஹோக்லி | 52 | அவுஸ்திரேலியா |
| வீரேந்தர் சேவாக் | 60 | நியூசிலாந்து |
| அசாருதீன் | 62 | நியூசிலாந்து |
| யுவராஜ் சிங் | 64 | இங்கிலாந்து |
| சுரேஸ் ரெய்னா | 66 | ஹொங்கொங் |

**விரைவானசதம் (உலகஅளவில்)**

| வீரா | அணி | பந்துகள் | எதிரணி |
|---|---|---|---|
| சயீட் அப்ரிடி | பாகிஸ்தான் | 37 | இலங்கை |
| மார்க் பௌச்சர் | தெ.ஆபிரிக்கா | 44 | சிம்பாவே |
| பிரைன் லாரா | மே.தீவுகள் | 45 | பங்களாதேஷ் |
| சயீட் அப்ரிடி | பாகிஸ்தான் | 45 | இந்தியா |
| சனத் ஜெயசூரியா | இலங்கை | 48 | பாகிஸ்தான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிம்புவின் அக்காவாக ரம்பா

சிம்புவின் அக்காவாக மீண்டும் தனது நடிப்பைத் தொடரப்போகிறாராம் ரம்பா. ஒரு காலத்தில் கனவுக்கன்னியாக ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்தவர் தொடையழகி ரம்பா.பின்னர் தொழிலதிபர் ஒருவரை மணந்து வெளிநாட்டில் குடியேறினார். தற்போது இரண்டரை வயதில் குழந்தை உள்ள ரம்பா, சிம்புவின் அக்காவாக தமிழில் மீண்டும் கால்வைக்க இருக்கிறாராம்.

இனி அக்கா, அண்ணி போன்ற நல்ல கதாபாத்திரங்கள் மட்டுமே இவரது வீருப்பத் தேர்வாக இருக்குமாம்.மேலும் தமிழைப் போலவே தெலுங் கிலும் திரும்ப நடிக்கப்போகிறாராம் ரம்பா.



## ரெட் டிராக


'சிங்கம் 2' வின் பிரம்மாண்ட வெ
சூர்யா நடிக்கவிருக்கும் படத்தை 
சூர்யாவுக்கு ஜோடியாக சமந்தா ந
இப்படத்திற்கு இசையமைக்கிறார்.
அண்மையில் நடைபெற்றது. இதி
ரெட்-டிராகன் எனும் டிஜிட்டல் க
ரெட் ஒன் வகை கமராக்கள் சில வ
வருகின்றனர். அந்த வகையில்,
தற்போது நவீன தொழில்நுட்பத்
ரெட்-டிராகன் டிஜிட்டல் கமெரான
ஒளிப்பதிவாளர் சந்தோஷ்சிவன்.



## நாயகியான

ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக நடிக்கப்போகி
ஸ்ரீ திவ்யா.
இசை அமைப்பாளரான ஜி.வி.பிகாஷ், ஹீ
இருக்கிறார்.
'பென்சில்'என தலைப்பு வைக்கப்பட்டுள்ள
படிக்கும் மாணவராக நடிக்கும் ஜி.வி.பிரக
நடிக்கப் போகிறார் என செய்திகள் பரவின
'ஊதா கலரு ரிப்பன்' ஸ்ரீதிவ்யா தான் ஜோ
இந்தப் படத்தை கௌதம் மேனனிடம்
இயக்குகிறார்.பீட்சா படத்தின்
இந்தப் படத்துக்கு
மாதம் படப்பிடிப்பு

## விடைகொடுக்கிறார் விஜய்



அதிரடி வசனங்களுக்கு அஜீத்தை தொடர்ந்து விஜய்யும் விடைகொடுக்கிறார். ரஜினியின் படங்களில் பஞ்ச் வசனங்கள் பிரபலம். அதை தொடர்ந்து முன்னணி நடிகர்கள் மட்டுமின்றி, வளரும் மற்றும் வளராத நடிகர்கள் கூட அனல்பறக்கும் பஞ்ச் வசனங்களை பேச ஆரம்பித்தனர். இது ரசிகர்களை எரிச்சலடைய செய்தது. இதையடுத்து தனது படங்களில் கொஞ்சம் கொஞ்சமாக இப்படியான வசனங்களைப்பேசுவதை குறைத்த ரஜினி, இப்போது அதை விட்டுவிட்டார்.அதேபோல் தனது படத்தில் பஞ்ச் வசனமே இருக்கக்கூடாது என இயக்குநர்களுக்கு உத்தரவு போட்டுவிட்டார் அஜீத். இந்தப் பாணியை விஜய்யும் கடைப்பிடிக்க தொடங்கியுள்ளார். அவர் கடைசியாக நடித்த 'தலைவா' படத்தில் பஞ்ச் வசனம் எதுவும் இல்லை. அடுத்து அவர் நடித்து வெளியாக உள்ள 'ஜில்லா' படத்திலும் அதுபோன்ற எந்த வசனமும் கிடையாதாம் படங்களில் நாயகனை மிதமிஞ்சிய வீரனாகக் காட்டும் காட்சிகளுக் கும் விஜய் தடை போட்டிருக் கிறாராம்.

## மீண்டும் லட்டுத் தின்ன ஆசைய

'கண்ணா லட்டு திண்ண ஆசையா' நட்சத்திர கூட்டணி மீண்டும் சேர்ந்து உருவாகி வரும் படம் 'வாலிப ராஜா'.

இப்படத்தில் சேது, சந்தானம், விஷாகா மற்றும் பொலிவுட் நடிகை நுஷ்ரத் நடிக்கிறார்கள். மேலும் தேவதர்ஷினி, விடிவிகணேஷ், நீலிமா, மீரா கிருஷ்ணன், சித்ரா லட்சுமணன், கனல் கண்ணன், சந்தான பாரதி என்று பெரிய நட்சத்திர பட்டாளமே பங்கு பெறுகிறது. கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் சாய் கோகுல் ராம்நாத். இப்படம் குறித்து இயக்குநர் கூறுகையில், சேது டிசைனராக வருகிறார். சந்தானம் மனநல மருத்துவர் மற்றும் விஷாகா மனநல மருத்துவம் படிக்கும் மாணவி. வாலிப ராஜா என்பது சந்தானத்தின் பெயர்தான். அவர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதால் அந்த பாத்திரப் பெயரே படப் பெயராகி இருக்கிறது.

மேலும் வாலிப ராஜா என்கிற பெயரை வைத்து இது வாலிபம், கிளுகிளுப்பு சார்ந்த கதை என்று யாரும் யூகம் செய்து விட வேண்டாம் என்று குறிப்படும் கோகுல், இது ஒரு முழு நீள குடும்பச் சித்திரம் என்கிறார் .



## சிலிர்க்கும் ஸ்வாதி

மீண்டும் ஜெய்யுடன் ஜோடி சேருவது பழைய நினைவுகளை தூண்டுகிறது என்றார் ஸ்வாதி. 'சுப்ரமணியபுரம்' படத்தில் ஜெய், ஸ்வாதி ஜோடியாக நடித்தனர். இப்படம் வெற்றி பெற்றது. அதன்பிறகு இந்த ஜோடி இப்போது மீண்டும் 'வடகறி' படத்தில் இணைகிறது. இது பற்றி ஸ்வாதி கூறும்போது 'சுப்ரமணிய புரம்' படத்துக்கு பிறகு 'வடகறி' படத்தில் இருவரும் ஜோடி சேர்ந்திருக்கிறோம். இது பல எண்ணங்களை மலரச்செய்கிறது. 'சுப்ரமணியபுரம்' படத்தில் நடித்தபோது கிடைத்த நல்ல அனுபவங்கள் என் கண்முன் வந்து செல்கிறது. அடுத்து 'அமளி துமளி' படத்தில் நடிக்கிறேன். இதற்கிடையில் 'இதற்குதானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படம் எனக்கு தமிழில் புதிய வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது. இதுதவிர மலையாளத்தில் 'ஆமென்', 'நார்த் 24 கதம்' போன்ற படங்களில் நடிக்கிறேன். மனதுக்கு படித்த சில வணிக ரீதியான படங்களிலும் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறேன் என்றார்.

## கார்தியின் திடீர் முடிவு

'அட்டகத்தி' படத்தை இயக்கியவர் ரஞ்சித். அடுத்து கார்த்தி நடிக்கும் படத்தை இயக்குகிறார். இப்படத்துக்கு 'காளி' என பெயர் வைப்பதாக தகவல் வெளியானது. ஆனால் இப்படத்தின் தொடக்க விழாவின்போது தலைப்பு வைக்காமல் படப்பிடிப்பு தொடங்கப்பட்டது.

'காளி' பட தலைப்பு வைக்காமல் இயக்குநர் பின்வாங்கியது ஏன்? என்று விசாரித்தபோது பரபரப்பான தகவல்கள் வெளியாகின.

'காளி' என்பது கடவுள் பெயர். 'சரஸ்வதி சபதம்', 'திருவிளையாடல்' என சில பக்திப் படத் தலைப்புகளை வைத்தபோது எதிர்ப்புக் கிளம்பயது. அதுபோல் இதற்கும் எதிர்ப்புக் கிளம்பிவிடக்கூடாது என்று எண்ணினர்.

அது மட்டுமே காரணம் கிடையாது. இன்னொரு காரணமும் உள்ளது. ரஜினி நடித்த 'நான் மகான் அல்ல' என்ற தலைப்பைத் தன் பட தலைப்பாக வைத்து கார்த்தி நடித்திருக்கிறார்.

'மூன்றுமுகம்' படத்தில் ரஜினியின் அதிரடி பொலீஸ் பாத்திரமான அலெக்ஸ் பாண்டியன் என்ற கதாபாத்திரத்தின் பெயரையும் தனது பட தலைப்பாக வைத்து கார்த்தி நடித்தார். மீண்டும் ரஜினி சம்பந் தப்பட்ட பட தலைப்பாக வைத்தால் அவரையே பின்பற்றி செய்வதுபோல் இருக்கும் என்று சிலர் கருத்து தெரிவித்தனர்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டே படத் தலைப்பை மாற்ற கார்த்தியும் இயக்குநரும் முடிவு செய்திருக்கிறார்களாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாகன் கமெரா

...ண்ட வெற்றிக்கு பிறகு,
...டத்தை லிங்குசாமி இயக்குகிறார். இப்படத்தில்
...மந்தா நடிக்கவுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா
...க்கிறார். இப்படத்தின் ஆரம்பப் படப்பிடிப்பு
...து. இதில் இந்தியாவிலேயே முதன் முறையாக
...ட்டல் கமெராவைப் பயன்படுத்தினர். தமிழில்
...ள் சில வருடங்களாகவே பயன்படுத்தி
...கயில்,
...நுட்பத்தோடு வெளிவந்துள்ள இந்த
...கமெராவை இப்படத்தில் பயன்படுத்தவுள்ளார்
...சிவன்.

# ...ா ஸ்ரீ திவ்வியா

...ப்போகிறாராம் 'நம்ம ஊதா கலரு ரிப்பன்'

...ாஷ், ஹீரோவாக ஒரு படத்தில் நடிக்க

...பட்டுள்ள இப்படத்தில் 12 ஆம் வகுப்பு
...வி.பிரகாஷிற்கு ஜோடியாக ப்ரியா ஆனந்த்
... பரவின. ஆனால், அது உண்மை இல்லையாம்.
...ான் ஜோடியாம்.
...னனிடம் உதவி இயக்குநராக இருந்த மணி
...டத்தின் ஒளிப்பதிவாளர் கோபி அமர்நாத்
...டத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார். டிசம்பர்
...டப்படிப்பு தொடங்குகிறது.

# ...சயா





விரைவில் திருமண பந்தத்தில் இணையப்போகிறாராம் பொலிவுட்டின் கவர்ச்சிக்கன்னி மல்லிகா ஷெராவத்.

அரியானா மாநிலத்தின் ஜாட் குடும்பத்தில் பிறந்த மல்லிகா மும்பையில் மாடலிங் தொழில் செய்தார். பின்பு தொலைக்காட்சி மற்றும் சினிமா படங்களில் கவர்ச்சி நடனமாடி ரசிகர்களை கவர்ந்த இவர் பொலிவுட்டில் பிரபல கவர்ச்சி நடிகை என்ற உச்சத்திற்கே சென்றார்.


இந்நிலையில் ''லைவ் ஓ.கே'' என்ற ஆங்கில தொலைக்காட்சியில் மாப்பிள்ளை தேடும் வித்தியாசமான நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகிறது. இதில் நடிகை மல்லிகா ஷெராவத் கலந்து கொண்டார். அவரை மணக்க விரும்பும் போட்டியாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அவர்களிடம் மல்லிகா ஷெராவத்தை விரும்பும் காரணங்கள் பற்றி விளக்கங்கள் கேட்கப்பட்டன. மேலும் அவர்களுக்கான தகுதி திறமை போட்டியும் நடந்தது.

இறுதியில் 15 போட்டியாளர்கள் தகுதி பெற்றனர். இதில் ஜாஷன் சிங் என்பவர் மல்லிகாவை கரம் பிடிக்க விரும்பினார். சினிமா நடிகையாக மட்டுமல்லாது மற்ற



# விரைவில் டும் டும்

# புதிய மாற்றம்....



ஹன்சிகாவுடன் நடித்து வரும் 'மான் கராத்தே' படத்தில் வழக்கத்தில் இருந்து மாறுபட்டு நாகரிகமான பையனாக நடிக்கிறாராம் சிவகார்த்திகேயன். அதனால் அவரது சிகை அலங்காரம் உடை அமைப்பு என்று எல்லாவற்றையும் மாற்றியிருக் கிறார்களாம். கூடவே ஹன்சிகாவுக்கு இணையாக அவரது உருவத்தில் பிரமாண்டம் தெரிய வேண்டும் என்பதற்காக ஒரு பந்தாவான பையனாக அணிகலன் களைக்கொண்டே பக்காவாக மாற்றி யிருக்கிறார்களாம். அதனால், பாடல் காட்சிகளில் மட்டுமின்றி, அனைத் துக் காட்சிகளிலும்கூட ஹன்சி காவுக்குப் பொருத்தமான நடிகராக தன்னைப் புதுப்பித்துள்ளார் சிவகார்த்திகேயன்.

சினிமா



# ப்ரணிதா பச்சைக்கொடி

படவாய்ப்புகள் எதுவும் கிடைக்காததால் கவர்ச்சிக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளாராம் ப்ரணிதா.

அருள்நிதிக்கு ஜோடியாக 'உதயன்' படத்தில் அறிமுகமான ப்ரணிதா பின்பு கார்த்தி ஜோடியாக 'சகுனி' படத்தில் நடித்தார். இதன் மூலம் தமிழ் சினிமாவில் கால் ஊன்றி விடலாம் என்று நினைத்த அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதனால் தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வந்தார். ஆனால் அங்கும் இதே நிலைமைதான்.


இந்நிலையில் கவர்ச்சிக்கு மறுப்புச் சொன்னதால் இயக்குநர்கள் இவரை ஓரம் கட்டுவதாக செய்திகள் பரவின.

மேலும் சக நடிகைகள் தாராள கவர்ச்சி காட்டி தங்களைத் தக்க வைப்பதால் ப்ரணிதாவிடம் தற்போது மனமாற்றம் ஏற்பட்டு உள்ளதாம். பொது விழாக்களுக்கு கவர்ச்சியாக ஆடை அணிந்து வருகிறாராம். மேலும் நீச்சல் உடையில் நடிக்கவும் தயாராகி வருகிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புணர்ந்து கருத்துச் சொல்லுங்கள்



சாதனை நாயகனான சச்சின் டெண்டுல்கார் தன்னுடைய 200 ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறப்போகிறார் என்பது கிறிக்கெட் இரசிகர்களுக்கு அதிர்ச்சியான விடயம் தான். சச்சினின் ஓய்வு குறித்து கிறிக்கெட் பிரபலங்கள் அவர் குறித்த தங்களுடைய மனப்பதிவை வெளியிட்டு வருகின்றனர். இதில் தாங்கள் சச்சினோடு பழகிய நாட்கள் பற்றியும் அவ்ரிடமிருந்து தாங்கள் கற்றுக்கொண்டவை பற்றியும் அவரின் சாதனைகளின் மதிப்புப் பற்றியும் குறிப்பிட்டு வருகின்றனர். இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் கிறிக்கெட் வீரர் கவாஸ்கர் மற்றும் சச்சினின் துடுப்பு மட்டை தயாரிப்பாளர் ஆகியோர் தன்னுடைய இறுதிப் போட்டியில் சச்சின் சாதனை ஒன்றைப் படைத்து விடைபெற வேண்டும் என்றே தங்களுடைய ஆசையை வெளியிட்டுள்ளனர். அதாவது டெஸ்ட் இனிங்ஸ் ஒன்றில் பிறைன் லாரா அடித்த 400 ஓட்டங்களே அதியுயர் தனிநபர் சாதனையாக இருக்கின்றது. இதனையே சச்னின் தன்னுடைய இறுதிப் போட்டியில் முறியடிக்க வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இதனால் தன்னுடைய இறுதிப் போட்டியில்நிம்மதியாக விளையாட முடியாமல் பிறரின் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு அழுத்தத்தோடே சச்சின் விளையாட வேண்டியிருக்கும். சில காலங்களுக்கு முன்னர் சதத்தில் சதமடிக்க மிக நீண்ட காலமாக சச்சின் தடுமாறியிருந்தார். இதுவும் அழுத்தங்கள் காரணமாக ஏற்பட்ட தடுமாற்றம் தான். அத்தகைய அழுத்தத்தை கடைசிப் போட்டியிலும் கொடுத்து தடுமாறும் வீரனாக இவர்கள் சச்சினை அனுப்பவிருக்கிறார்கள். எனவே இனியாவது இவர்கள் பொறுப்புணர்ந்து கருத்துக்களைச் சொல்ல முன்வரவேண்டும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் சமூகமும்...

புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

**பெண்கள் பற்றிய சிந்தனையை எழுதக்கூடிய ஆதிலட்சுமி சிவகுமாரின் பெண்கள் பற்றிய பதிவொன்றின் ஒருபகுதி.**



எவ்வளவு தான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூகப் பார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் "பெண்ணிற் பெருத்தக்க யாவுள" என்று வள்ளுவர் எழுப்பிய கேள்வி முதலாக இன்று வரை பெண்ணினம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. பெண்களின் மாற்றங்களும், முன்னேற்றங்களும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவில் இருந்தாலும் பெரும்பாலும் துயரமும் ஆதங்கமும் நிறைந்ததாகவே இருக்கின்றன.

பெண்களின் ஆற்றல்களைப் பலமாக அங்கீகரிக்க பலரும் விரும்புவதில்லை. உதாரணமாக, யாருக்கும் அடங்காமல் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த கொம்பன் யானையை தன் வலிமையால் அடக்கிக்காட்டிய வீரப்பெண் அரியாத்தை. ஆனால் இந்தப்பெண் தெய்வ அருளாலேயே யானையைப் பணியவைத்ததாகக் கூறுவோரும் உள்ளனர். அதாவது பெண்ணின் ஆற்றலை ஜீரணித்துக் கொள்ளமுடியாத நிலையில் வெளிப்படுத்தும் கருத்தே இதுவெனக் கொள்ளலாம். தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்ல உலகிலுள்ள பெரும்பாலான இனச் சூழலில் சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் இருப்பதை நாம் அறியலாம். பிரான்சின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கரங்கள் நீண்டு விரிந்து தெரிந்த போது ஆர்க் எனும் கிராமத்திலிருந்து ஆவேசமாய்ப் புறப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களை மோதி வென்று படை நடத்திய வீரப்பெண் ஜோன் ஒப் ஆர்க் பின்னாளில் சூனியக்காரி யென்று எள்ளி நகையாடப்பட்டு, உயிருடன் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டாள் என்பது வரலாறு.

இன்றைக்கும் பல கிராமங்களில் பெண் பிள்ளைகள் பரீட்சைகளில் கூடிய பெறுபேறு பெற்றால், விளையாட்டுக்களில் பரிசுகள் பெற்றால் 'அதைப் பிள்ளையின் கெட்டித்தனம்' என்று மெச்சுவதை விடுத்து, 'கடவுளின் கிருபை' என்று மாற்றுவதை நாம் கண்கூடாய் பார்க்கின்றோம். காலம் காலமாகப் பெண்கள் பற்றி ஊன்றப்படுகின்ற கருத்து கருவூலங்களின் தோற்றப்பாடுகளே இவைகள் பெண்களின் உலகம் விரிவடைந்து வருகின்றது. பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். பெண்கள் சாதித்து வருகின்றார்கள். ஆனாலும் பெண்கள் மீதான சமூகப்பார்வை என்பது மாற்றம் காணாததாகவே இருக்கிறது.

இத்தகைய நிலைக்கு எந்த ஒரு தனி நபரையும் குற்றவாளியாக கூற முடியாது. சமூகத்தில் பெண்கள் பற்றி ஆழப்பதிந்திருக்கும் அடிப்படைக் கருத்தில் மாற்றம் காணப்பட வேண்டும். பெண் என்பவள் யார்? இந்த உலக இயக்கத்தில் பெண்ணின் பங்களிப்பு என்ன? அவள் தனது பங்களிப்பை முழுமையாகச் செய்யவிடாமல் தடுத்துநிற்கும் காரணிகள் என்ன என்பவை பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

# திருமண உறவில் பெண்கள்

**போ**குமிடமெல்லாம், கணவனில்லாமல் தனியே வாழும் பெண்கள் அடிக்கடி கண்ணில் பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். தனது மனைவி பிள்ளைகளைத்துறந்து இன்னொரு பெண்ணுடன் கண்ணெதிரே வாழும் கணவன், வவுனியா, யாழ்ப்பாணம் என்று விட்டுப் பிரிந்து சென்று வேறொரு திருமணஞ் செய்து வாழும் கணவன், "வேலையாப் போனவர் வரேல்லை" என்ற காரணத்து டனான கணவன் என்று பலவிதக் கணவன்மார்களை இழந்து பல பெண்கள்.


பெருந்திரளான மக்கள் நெருங்கி வாழ்வதால் இவ் விகிதம் கூடுதலாகத் தென்படுகிறதா அல்லது உண்மையிலேயே சமூகத்தில் சீர்கேடு மலிந்துவிட்டதா என்று ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும்.

பெண்களில் ஒரு சாரார் கணவனின்றித் தனித்து வாழும் துணிவைப் பெற, இன்னுமொரு சாரார் தனதும் குடும்பத்தினதும் கௌரவம் பேண வேண்டி அனைத்து வேதனைகளையும் தாங்கி மன அழுத்தத்திற்குள்ளாகின்றனர். அவர்களிற் சிலர் ஏதோ ஒருவகையில் அவ் அழுத்தத்தை விடுவிக்கும் வகையில் மேலதிக உணவு, உடை, ஆபரணங்கள் என்று தமது கவனத்தைத் திருப்பிக் கொள்கின்றனர்.

ஒரு சிலர் "அதுதான் என் தலைவிதி" என்று வாழ முற்படுகின்றனர்.

திருமணமே ஒரு பெண்ணின் வாழ்க்கையின் 'இறுதி இலக்கு' என்ற சமூகத்தின் கருத்துப்படிமம் திருமணம் தவிர்ந்தும் ஒரு வாழ்க்கை உள்ளது என ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை எமது பெண்களுக்கு வழங்கவில்லை.

பெரும்பாலான பெண்கள் நிலையான, நிறைவான திருமண வாழ்க்கையை விரும்பும் போக்கு சரியானது, யதார்த்த பூர்வமானது. ஆனால் அநீதிகளும் கொடுமைகளும் இழைக்கப்படும்போது அவர்களின் வாழ்வு அத்துடன் முடிந்துவிடக்கூடாது. அதிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவும், அவற்றினால் நிலைகுலைந்து போய்விடாமல் வாழ்வின் தொடர்ச்சியைத் திடமான மனதுடன் தாம் விரும்பிய வண்ணம் அமைத்துக் கொள்ளவும் அவர்கள் துணிவு பெற வேண்டியிருக்கிறது.



# எதிர்காலம் என்னவாகும்?



**வ**ட மாகாணத்தில் பாலியல் தொழில் மிகுந்த முனைப்புடன் வளர்ச்சியடைந்துள்ளதாக ஐ.ஆர்.ஐ.என். தகவல் வெளியிட்டுள்ளது. முன்னைய யுத்த வலயத்தின் பெரும்பான்மையான பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை வகித்து வருகின்றனர். யுத்ததினால் கணவனை இழந்த, காணாமல்போன அல்லது கைது செய்யப்பட்ட பல பெண்கள் குடும்பச் சுமையைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. போதியளவு வாழ்வாதார வழிகள் இல்லாமை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக அதிகளவான பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வடக்கில் சுமார் 7000 பெண்கள் இவ்வாறு பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. யுத்தத்தில் கணவனை இழந்த அல்லது காணாமல் போன பல குடும்பத் தலைவிகள் விருப்பமின்றியேனும் பாலியல் தொழிலைத் தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். 2012ஆம் ஆண்டு அரசாங்க மதிப்பீடுகளின் அடிப்படையில் வடக்கில் 59000 குடும்பங்களுக்கு பெண்கள் தலைமை தாங்குகின்றனர். தங்களது கணவர், சகோதரர், தந்தைமார் சுமந்த பொருளாதாரச் சுமையையே இவர்கள் இவ்வாறு சுமக்கின்றனர்.

வறுமை மற்றும் வாழ்வாதார வழிகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட தன்மை பெண்களை வர்த்தக ரீதியான பாலியல் தொழில் நோக்கி உந்துகின்றது.

வடக்கில் அதிகளவில் இராணுவத்தினர் பிரசன்னமாகியிருப்பதும், அபிவிருத்திப் பணிகளுக்காக அதிகளவான தெற்கைச் சேர்ந்த ஆண்கள் வடக்கை நோக்கி நகர்ந்துள்ளதும் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட களம் அமைத்துக் கொடுள்ளது எனப் பாலியல் தொழிலாளர் குறித்த தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றின் தலைவி விசாக தர்மதாச தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம்

■ ஜெகன்



# கொலைவெறி பிடித்த பேராசிரியன்

**கை**யில் துப்பாக்கியுடனும், கண்களில் குரோதக் கொலை வெறியுடனும் சற்றும் எதிர்பாராதவேளையில் அங்கு வந்த கொலை காரனை அந்தப் பெண் இமை கொட்டாமல் பயத்துடன் பார்த்தாள். அந்த இடத்திலேயே அவனது துப்பாக்கி வேட்டுக்கு இரை யாகப் போகிறேன் என்பது அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

அவள் உதவி கோரி அலற வாயைத் திறந்தாள். அந்தோ பரிதாபம்! அவளின் திறந்த வாயின் மென் உதடுகளில் அக் கொலை வெறியின் துப்பாக்கிமுனை தீண்டியதை உணரும்வேளையில் துப்பாக்கி வெடித்தது.

அவள் முகம் வெடித்துச் சிதறியது போல தோன்றிற்று. உட்கார்ந்திருந்த கதிரையிலிருந்து அவள் கீழே தரையில் சாய்ந்தாள். தரை முழுவதும்அவள் குருதி பரவியது. ஆனால் அதிஷ்டவசமாக அவள் சாகவில்லை. என்ன ஆனாலும் குற்றவாளியைத் தப்பவிடக் கூடாது. அவன் சட்டத்தின் பிடியில் அகப்பட வேண்டும், நீதி வழங்கப்பட வேண்டும் என்று மனதில் வைராக்கியத்துடன் தீர்மானித்துக் கொண்டாள் அந்நிலையிலும் கூட.

துப்பாக்கிச் சூடு பட்டு இரத்தம் பெருகிய நிலையில் மரணத்தின் விளிம்பில் போராடிக் கொண்டு விழுந்து கிடப்பவள் வேறு யாருமல்ல, மன்றோலியாவின் தலைநகரமான லிபிராவிலுள்ள மாதா கோயிலின் பாதிரியாரான அமெரிக்க நீக்ரோ டில்லாட் பிரவுனின் காரியதரிசியாகப் பணியாற்றும் 29 வயதையுடைய பேட் கத்தரின் தான்.

பேட் கத்தரினாவின் சொந்த ஊர் யோர்க் ஷையர். வழமைபோல அன்றைய தினமும் அவள் தன் வேலையைக் கவனிக்கத் தட்டச்சு இயந்திரத்தின் முன்னால் உட்கார்ந்திருந்தவேளையில் நைஜீரியாவைச் சேர்ந்த உயிரியல் பேராசிரியரான ஜஸ்ரின் வேகமாக ஆவேசத்துடன் நுழைந்தான். எலும்பு வெளியே துருத்திக் கொண்டிருக்கும் தோள்களையு டைய யூல்பிறைனர் உருவத்தில் குள்ளமானவன். அவன் மேலை நாட்டவர் போல் உடையணிந்திருந்தான். அவனது நடத்தைகள், குணாதிசயங்கள் எப்பொழுதும், எவருக்குமே வெறுப்பூட்டுபவையாகவே இருக்கும். அவனைக் கண்டாலே பேட் கத்தரினா வுக்குப் பிடிக்காது. அவனுக்கும் அவளைப் பிடிக்கவே பிடிக்காது.

அவ்னது நடத்தைப் பிசகு காரணமாக பாதிரி மிஷன் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த யூல் பிறைனரை வேலை நீக்கம் செய்து விட்டார்கள். அது அவன் மனதைப் பெரிதும் பாதித்து விட்டது. அதன் காரணமாக கல்லூரிக்குப் பொறுப்பாக இருந்த பாதிரியார் டில்லாட் பிரவுண் மீது அவன் கடும் கோபம் கொண்டிருந்தான். அதற்குப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தான்.

கையில் ரிவால்வருடன் வந்த யூல்பிறைனரை அலட்சியம் செய்து கத்தரினா தனது தட்டச்சு வேலையில் ஈடுபட்டாள். அவளை நெருங்கி வந்த பிறைனர் அவளது மேசை மீதிருந்த கடிதங்களைப் புரட்டிக் கிளறினான்.

"தொடாதே அவை இரகசியமானவை, பிறர் பார்க்கக் கூடாது" என்றாள் கத்தரினா. அவளது குரலைக் கேட்டு பாதிரியார் பிரவுண் பக்கத்து அறையில் இருந்து வெளிப்பட்டார். அவர் அறையில் இருந்து வெளியே இரண்டடிதான் எடுத்து வைத்திருப்பார். யூல்பிறைனரின் கையிலிருந்த ரிவால்வர் அவரது மார்பைக் குறி வைத்தது. இரக்கமின்றி அவரைச் சுட்டான். பாதிரியார் பிரவுண் கீழே சாய்ந்தார். மறு கணம் அவர் உயிர் பிரிந்தது. கத்தரினா பீதியில் உறைந்து போனாள். "பாவி தங்கமானவரைக் கொன்றுவிட்டாயே" என்றாள்.

> "தொடாதே அவை ரகசியமானவை, பிறர் பார்க் கக் கூடாது" என்றாள் கத்தரினா. அவளது குரலைக் கேட்டு பாதிரியார் பிரவுண் பக்கத்து அறையில் இருந்து வெளிப்பட்டார். யூல் பிறைனரின் கையிலிருந்த ரிவால்வர் அவரது மார்பைக் குறி வைத்தது. இரக்கமின்றி அவரைச் சுட்டான். பாதிரியார் பிரவுண் கீழே சாய்ந்தார். மறு கணம் அவர் உயிர் பிரிந்தது. "பாவி, தங்கமானவரைக்

மறுகணமே, அவள் வெறுப்பு பயமாக மாறியது. பிறைனர் அவளை நோக்கி வந்தான். அப்போது அவன் பார்த்த பார்வையை கத்தரினா என்றுமே மறக்கமுடியாது. எனினும் மரணத்தின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருந்த வேளையிலும் பேட் கத்தரினாவின் செவிகளில் மேலும் மூன்று முறை அவனது துப்பாக்கி வெடித்த ஓசை கேட்டது. இரத்தம் பெருகிய நிலையில் உடல் முழுவதும் தாங்க முடியாத வலியுடனும் எழுந்திருக்க முடியாமலும் கிடந்த கத்தரினாவுக்குச் சிறிது சிறிதாக உயிர் பிரிந்து கொண்டிருப்பதுபோல தோன்றிற்று.

எழுந்திருக்க முயன்றாள் முடியவில்லை. எங்கே பார்த்தாலும் இரத்தம். பிணமாகிக் கிடக்கும் பாதிரியாரை வெகு சிரமத்துடன் நகர்ந்தாள். அவரின் முகத்தைப் பார்த்ததுமே அவளுக்குப் ஆத்திரம் பொங்கியது.

தன் உயிர்போவதற்கு முன் கொலைகாரன் யார் என்று எவரிடமாவது சொல்லிவிட வேண்டும். ஆனால் அங்கு எவரின் நடமாட்டத்தையும் காணவில்லை. விவேகத்தை பயன்படுத்தி தனது கைவிரலை இரத்தத்தில் தோய்த்து மேசைத் துணியில் 'யூல் பிறைனர்' என்று எழுதினாள்.

அவள் எழுதி முடிக்கையில் அவளது மூன்று வயது மகன் வேலைக்காரப் பையனுடன் அங்கே வந்தான். மாலை 4 மணிக்குப் முடிவெட்டிக் கொள்ள அழைத்துப் போக அவளிடம் வருவதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தது. அவளால் குறிப்பிட்டிருந்த நேரத்திற்குச் சரியாக வந்திருந்தால் பிறைனர் அச்சிறுவனையும் சில வேளைகளில் சுட்டுக் கொன்றிருக்கலாம். அல்லது இன்னும் சிறிது நேரம் தாமதித்து வந்திருந்தாலும் அவனது தாய் கத்தரினா இறந்திருக்கலாம்.

பேட் கத்தரினாவால் பேச முடியவில்லை. அங்கு வந்திருந்த வேலைக்காரப் பையனிடம் உடனே உதவி தேவை என்று சைகை மூலம் காட்டினாள். நல்ல வேளை, அவ்விடத்திற்கு அருகாமையில் அதே வீதியில் அவளது மைத்துனர் டாக்டர் ஸ்ரீபனின் மருத்துவ மனை இருந்தது.

தகவலறிந்த விரைந்து வந்த டாக்டர் ஸ்ரீபன் அறை முழுவதும் தேடினார். அப்போது பாதிரியாரும் கத்தரினாவும் சுடப்பட்டு இறந்து கிடப்பது தெரிந்தது. அறை முழுவதும் ஒரே இரத்தம்.

டாக்டர் ஸ்ரீபன் அன்று கண்டதை நினைவு கூர்கிறார். "கத்தரினாவின் வாயிலிருந்த இரத்தம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. குறைந்தது இரண்டு போத்தல் இரத்தமாவது சேதமாகியிருக்கும். நாடித் துடிப்பும் மந்தமாக இருந்தது. சிறிது இரத்த அழுத்தமும் கூடவே காணப்பட்டது. அவளால் உடலை அசைக்கவே முடியவில்லை. அதனால் நான் மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்காகக் காத்திருக்கவில்லை. காலதாமதம் செய்யாமல் அறுவைச் சிகிச்சையைத் தொடங்கினோம். அவள் சத்திரசிகிச்சை செய்வதை உணரவில்லை.

பிறைனரின் துப்பாக்கிக் குண்டு கத்தரினாவின் நான்கு பற்களை உடைத்து விட்டது. நாக்கும் சேதமடைந்து விட்டது. தாடையும் பிளந்து போயிற்று. இறுதியில் குண்டு நுரையீரலுக்கு அருகில் சென்று தங்கிவிட்டது." என்று ஸ்ரீபன் விவரித்தார்.

பேட் கத்தரினா பல நாட்கள் மரணத்துடன் போராடினாள். ஆர்க்பிஷப் முதற் கொண்டு பலர் அவளைப் பார்க்கத் தினமும் வந்து சென்றனர்.

1980 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று அவளால் சிறிது சாப்பிட முடிந்தது . அப்பொழுதும் அவளது தாடை வயரினால் பிணைக்கப்பட்டே இருந்தது. விமானத்தில் அவளை லண்டனுக்கு அழைத்துச் சென்று அங்கு நுரையீரலுக்கு அருகில் தங்கியுள்ள குண்டை வெளியில் எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறே, லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டு சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டது. வெற்றிகரமாகச் சிகிச்சை முடிந்தது. ஆயினும் கத்தரினாவுக்குத் தொல்லை ஓயவில்லை. அவள் வழக்குக்குச் சாட்சி சொல்வதற்காக லிபியாவுக்கு வர வேண்டியதாயிற்று. யூல்பிறைனர் இருவரைக் கொலை செய்த குற்றத்திற்காக நீதிமன்றில் வழக்கு நடந்து கொண்டிருந்தது.

பைத்தியக்காரத்தனமாக இரண்டு கொலைகளைச் செய்த அரைமணி நேரத்திற்குள்ளாகவே பிறைனர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டான். கைதாகிய சமயத்தில் அவனிடம் மூன்று ரிவால்வர்களும், 150 தோட்டாக்களும் இருந்தன.

கொலைகள் இடம்பெற்று சில மாதங்களின் பிறகு மீண்டும் யூல் பிறைனரை, கத்தரினா பார்ப் பது இதுவே முதல்தடவை. நீதிமன்றின் சாட்சிக் கூண்டில் பேட் கத்தரினா நின்றிருந்தாள். சில வினாடிகள் தான் அவனைப் பார்த்தாள். அப் பொழுது கூட அவள் உடல் முழுவதும் அச்சத்தால் நடுங்கியது.

1981 ஆம் ஆண்டு யூன் 19ஆம் திகதி யூல் பிறைனர் தூக்கிலிடப்பட்டான். இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு லிபியாவில் அதுவே முதல் தூக்குத் தண்டனையாக அமைந்தது. தூக்கு மேடைக்குச் செல்வதற்கு முன் பிறைனர் பிராத்தனையில் கலந்து கொண்டான்.


பாதிரியாரிடம் பாவமன்னிப்புப் பெற்றான். அங்கு கூடியிருந்தவர் களைப் பார்த்து "யாரிடமும் எனக்கு விரோதம் இல்லை, வெறுப்பும் இல்லை, நான் மனமகிழ்வுடன் என்னைப் படைத்தவரிடம் செல்கிறேன்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஔண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன் 23



**05.04.2010** அதிகாலை 4 மணி. வானத்தை இறுக மூடியிருந்த இருளின் திரை மெல்ல விலகத் தொடங்கியிருந்தது.

நான்கு நாள்களுக்கு மேலாக ஊனுறக்கமின்றி, மனித இயந்திரங்களாகச் செயற்பட்டுவந்த யூலியன் குழுவினர் குளிர்சாதனப்பெட்டியில் எஞ்சியிருந்த ஒரேயொரு 'ஷம்பெய்ன்' மதுப்போத்தலை எடுத்து நன்றாகக் குலுக்கியபின் திறந்தனர். நுரை அறையெங்கும் பரவியது.

எல்லோரும் ஆனந்தத்தின் எல்லையில் நின்றனர். இருக்காதா? நான்கு நாள்களும் அவர்கள் பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைக்கப் போகின்றது அல்லவா.

"அதுசரி, மூடிய வீட்டுக்குள் நான்கு தினங்களாக நடந்த வேலை என்ன?"

யூலியனின் விக்கிலீக்ஸ் தளத்துக்கு 'ரீ.ஓ.ஆர்' முறைமூலம் அனுப்பப்பட்ட மிக நீண்ட ஒலி, ஒளிக்காட்சிகளின் தொகுப்புஒன்று 'எடிட்' செய்யப்பட்டு, நீளம் குறைக்கப்பட்டு, அதை வழங்கியவரின் அடையாளங்கள் மறைக்கப்பட்டு, உலகெங்கும் ஒரே தின வெளியீடாக மக்களைச் சென்றடைவதற்கான பணிகளே இந்த நான்கு நாள்களும் நடந்தேறியவை. எல்லாம் முடிந்தாகிவிட்டது. தேவையற்ற காட்சிகள் நீக்கப்பட்ட பின்பு இப்போது சுமார் 30 நிமிடங்களைக் கொண்டதாக அந்த வீடியோக் காட்சி செம்மையாக்கப்பட்டு விட்டது. மூன்று, நான்கு தடைவைகள் அதைத் திரும்பத் திரும்ப போட்டுப் பார்த்ததில் எல்லோருக்கும் திருப்தி.

முகத்தில் வெற்றியின் ரேகைகள் படிய தன் சகாக்களிடம் யூலியன் - 'சரி நண்பர்களே! இதற்கு என்ன பெயர் வைக்கலாம்?' என்று கேட்டான். அனைவரும் ஒன்றாகக் கூடி விவாதித்து கடைசியாக வைக்கப்பட்ட பெயர்தான் 'சமகாலத்துக் கொலைகள்' (collateral murder). அதன் பின் அவர்கள் தங்கியிருந்த வீட்டில் எஞ்சியிருந்த தடயங்கள் எல்லாமே தேடித் தேடி அழிக்கப்பட்டன. தாம் கொண்டு வந்த மடிக்கணினி உள்ளிட்ட பொருள்களைத் தன் சகாக்கள் காரில் ஏற்றிக் கொண்டிருந்த தருணத்தில் விக்கிலீக்ஸ் தளத்துக்கான வழங்கிகளைச் செயல்படுத்தும் நிறுவனங்களுடன் யூலியன் தொடர்பினை ஏற்படுத்தினான். சமகாலத்துக் கொலைகள் வீடியோவின் தீவிரத்தன்மையை விளக்கி, என்ன நிர்ப்பந்தம் வந்தாலும் அதனை நீக்கக்கூடாது என அவர்களிடம் உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டான். அத்துடன் வீடி யோக் காட்சிகளை வெளியிடுவதில் பெயர்போன 'யூ-டியூப்' தள நிர்வாகி களிடமும் பேசி விக்கிலீக்ஸில் வெளியாகும் அதேகணத்தில் அந்தத் தளத்திலும் இந்த வீடியோவை வெளியிட ஏற்பாடு செய்து கொண்டான் யூலியன். அதன் பின் யூலியன் காரில் ஏறிக்கொண் டான். கார் புறப்பட எத்தனித்த போது தன் மடிக்கணினிக்கு உயிர் கொடுத்த யூலியன், காரிலிருந்தபடியே சமகாலத்துக் கொலைகள் வீடியோவை வலைப்பதிவேற்றினான்.

**அந்த வீடியோவில் என்னதான் இருந்தது?**

ஈராக் நாட்டில் ஒரு பகல்பொழுதில் பாதுகாப்புமுன்னேற்பாடு என்னும் சாட்டில் அமெரிக்க 'அபாச்சி'ரகக் ஹெலிகொப்டர் மூலம் நடத்தப்பட்ட கொலைவெறியாட்டத்தை அந்த வீடியோ வெளிச்சம் போட்டுக் காட்டியது. கூடவே ஹெலிகொப்டரின் விமானியும், கட்டளை அதிகாரியும் அந்தக் கொலைகள் தொடர்பாக நடத்திய உரையாடலும் தெளிவாக அதில் பதிவாகியிருந்ததால், அது தற்செயலாக நடந்த தாக்குதல் அல்லவென்றும், திட்டமிட்ட படுகொலைகள் தான் என்ற உண்மையும் வெளிப்பட்டது. அந்தத் தாக்குதலின்போது ரொய்ட்டர்' செய்திச்சேவையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் இருவரும் பலியாகியிருப்பதும் பதிவாகியுள்ளது. குறித்த ஊடகவியலாளர்கள் பற்றிய விபரம் எதுவுமே தனக்குத் தெரியாதென்றே அமெரிக்கா இதுவரையும் சாதித்து வந்தது.

இதுதவிர குழந்தைகள் சிலரும் அமெரிக்காவின் வெறித்தனத்துக்கு இரையாகியிருந்தனர். வாகனம் ஒன்றில் குழந்தைகள் இருப்பதாக விமானி தெரிவித்த போது, "கவலைப்படாதே! யுத்தத்தில் இதெல்லாம் சகஜம்" எனக் கட்டளை அதிகாரி நவீன கீதையை' உபதேசித்து பச்சிளம் குழந்தைகளைக் கொல்லுமாறு கட்டளையிடுகிறார். எந்த 'அபாச்சி' ஹெலி தாக்குதல் நடத்தியதோ அதே ஹெலியில் இருந்துதான் இந்த வீடியோ பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதே இதன் நம்பகத்தன்மையை அதிகமாக்கியது. உலகம் முழுதும் பயங்கரவாதத் துக்கு எதிரான போரை எவ்வளவு பயங்கரவாதத்துடன் அமெரிக்கா நிகழ்த்துகிறது என்பதற்கு இந்த வீடியோ ஒன்றே போதும்.

விடியற்காலையில் எல்லா ஊடகங்களும் பரபரத்துக் கொண்டு கூவின. தன்னை ஒரு புனிதராகக் காட்டிக்கொண்ட அமெரிக்காவின் கடைவாய்ப்பற்களில் தோய்ந்திருந்த இரத்தக்கறையின் நாற்றம் யூலியனின் புண்ணியத்தில் உலகெங்கும் பரவியது. யூலியனின் முதல் அடியிலேயே அமெரிக்கா அம்மணமாகிப் போனது. அந்த அவமானத்தில் தன் வேட்டைப்பற்களுக்கு யூலியனை இரையாக்க அது வெறிகொண்டெழுந்தது.

அதில் அமெரிக்கா வென்றதா?

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்! செல்லப்பா!! எழுதுவது.....



தமிழ் மக்களைப் பிரித்து ஆளும் தந்திரத்தின் ஒரு பகுதிதான் 13
+ இற்கு அரசு மறுப்பு.
மத்தியில் 57 அமைச்சர்களும் மேலதிகமாகப் புதிய 29 பிரதி
அமைச்சர்களும் 2 திட்ட அமைச்சர்களும்
9 சிரேஷ்ட அமைச்சர்களும்
மேலும் பிரதியமைச்சர்களை அதிகரிக்கவும் உள்ளனர்.
ஆனால் மாகாணங்களுக்கு மட்டும் 5 அமைச்சர்கள் (முதலமைச்சர் உட்பட) வரையறை
செய்து யாப்பு அமைத்திருப்பது வடக்கைப் பொறுத்தளவு தமிழ் மக்களை அடிபடவைக்கவா
எனச் சந்தேகிக்க வைத்துள்ளது.
38 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 20 பேர் ஆளும் தரப்பு
18 பேர் எதிர்த் தரப்பாக வந்திருப்பின்
அல்லது 19 - 19 ஆக வரும் இடத்து, ஆட்சியைத் தக்க வைக்கத் தக்கவாறு எட்டு
அமைச்சர்களையும் மேலும் எட்டுப் பிரதி அல்லது அரை அமைச்சர்களையும் இன்னும் கால்
அமைச்சர்கள் காற்பாதி அமைச்சர்களையும் நியமிப்பதன்மூலம் நம்மவரின் ஒற்றுமையைக்
காப்பாற்றலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுப் பயணம்


● ராஜ்சிவா

# நிஜமா? 7

## இன்னமும் விலகாத மர்மங்கள்

அப்போலோ மிசனில் எடுக்கப்பட்ட படங்களில் கூட்டல் குறி (Cross Hair) போன்ற அடையாளம் காணப்படுகின்றன. புகைப்படக் கருவியொன்றில், போக்கஸ் செய்யப்படும்பொருளைக் குறிப்பிடும் வண்ணம் தெரியும் கூட்டல் குறி (+) போன்ற அடையாளம் தெரியுமல்லவா, அந்தக் குறி படங்களிலும் காணப்பட்டன. ஆனால் ஒரு படத்தில் மட்டும் அந்தக் கூட்டல் குறி அடையாளம் பொருளுக்குப் பின்னே மறைந்து காணப்படுகிறது. இது மிகவும் நகைச் சுவைக்குரியது. இரண்டு படங்களைஒன்று சேர்க்கும்போது தவறுதலாக நடைபெறும் செயல் போல இது காணப்படுகிறது. இதைச் சுட்டிக்காட்டி , 'இது ஒன்றே போதும். இவை அனைத்தும் பொய்யென்பதற்கு ' என்கிறார்கள். பலரால் அதிகம் விமர்சிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இது முக்கியமானது.

அப்போலோ 11 இல் , சந்திரனுக்குக் கொண்டு சென்றிருந்தது. 'ஹாஸல்ப்ளட்' என்னும் ஸ்வீடன் நாட்டில் தயாரிக்கப்பட்ட புகைப்படக் கருவியாகும். இன்று புகைப்படத் தொழில்நுட்பம் மிகவும் முன்னேறிய நிலையில் இருக்கிறது. ஆனால் 1969 ஆம் ஆண்டு பெரிய அளவு அது விருத்தியாகவில்லை. கைகளில் தடித்த கையுறைகளையும், தலையில் கவசங் களையும் அணிந்தபடி போக்கஸ் எதுவும் செய்ய முடியாத நிலையில் தான் சந்திரனில் அனைத்துப் படங்களும் எடுக்கப்பட்டன. ஆனால் எடுக்கப்பட்ட படங்கள் அனைத் துமே மிகமிகத் துல்லியமாகவும், தெளிவாக வும் இருந்தன. சந்திரனில் சூரிய ஒளி பட்டுத் தெறிக்கும், சூரிய ஒளிக்கு எதிராக எடுத்த படங்களும் துல்லியமாக இருந்தன. இவற் றையும் யாரும் நம்பத் தயாராக இருக்க வில்லை.



நிழலில் இருக்கும் மனிதனைப் பட்ம் பிடித்தபோதும், நிழல் அப்படியே இருக்க மனிதன் மட்டும் வெளிச்சமாக பிரகாசமாகப் படங்களில் தெரிகிறார். ஆனால், அவரும் நிழலில் இருப்பதால் மங்கிய வெளிச்சத்தில் உள்ளவராகத்தான் தெரிய வேண்டும். ஆனால் அப்படியில்லாமல் மனிதர்கள் மட்டும் பிரகாசமாகத் தெரிகிறார்கள்.

இரவு சந்திரனில் இருந்து பூமியைப் படமெடுத்த பொழுது, பூமி நீல நிறமாக தெளிவாகத் தெரிந்தாலும், அங்கு எந்த நட்சத்திரங்களும் காணப்படவில்லை. பூமியிலாவது மேகங்கள் அவ்வப்போது நட்சத்திரங்களை மறைக்கும். மழைக் காலங்களிலும் நட்சத்திரங் கள் தெரியாது. ஆனால் இவை எதுவுமே இல்லாத சந்திரனில், தெளிவான விண்வெளியில் ஏன் நட்சத்திரங்கள் தெரியவில்லை என்பதும் அதிகமாகவே சந்தேகங்களை வரவழைத்தது. இதில் இன்னுமொரு ஆச்சரியமும் உண்டு. பூமிக்குத் திரும்பிய ஆம்ஸ் ரோங் குழுவினரிடம் பத்திரிகை யாளர்கள் ,'சந்திரனில் இருந்து பார்க்கும்போது, உங்கள் கண்களுக்கு நட்சத்திரங்கள் விண்ணில் தெரியவில்லையா?" என்று கேட்டபோது, அந்த மூவரும் சொல்லி வைத்தாற் போல, தங்களுக்கு நட்சத்திரங்கள் கண்களுக்கத் தெரியவில்லை என்றார்கள். இதுவும் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்த சம்பவமாகியது.

சந்திரனில் ஈகிள் இறங்கிய போது , அது தரையில் மோதாமல் இருக்க, கீழ் நோக்கியபடி அதிவேகமாக நெருப்புப் புகை ஜெட் தொழில்நுட்பத்தில் கொடுக்கப்படும். அதனால் ஈகிளின் வேகம் குறைந்து மெதுவாக அது சந்திரத் தரையில் இறங்கும். ஆனால் ஈகிள் இறங்கிய இடத்தில் உள்ள படங்களில், தரையில் அதற் கான எந்தச் சான்றுகளும் காணப்படவில்லை.

*(மர்மங்கள் தொடரும்)*

# வெற்றியைத் தவறவிட்டால்.....

உண்மையில் பார்க்கப்போனால் உங்களுடைய யோசனை எதுவுமே வெற்றிபெறத் தவறி விடாது. அது இழப்பு அல்ல. ஒவ்வொரு யோசனையும் அது வெற்றியோ அல்லவோ எப்படி இருந்தாலும் புதிதாக ஒன்றை உருவாக்கும் முதல்படி பெறப்படுவதுபோல, வெற்றி பெறத் தவறவிட்ட சம்பவங்களில் இருந்து நீங்கள் அதிகப் பாடங்களைக் கற்றுக் கொள்வீர்கள். (வெற்றி களைவிட தொடக்க காலத்தில் வெற்றி வாய்ப்பை கற்றுக் கொண்டதன் காரணமாக இறுதியில் நான் பெருமளவு இலாபம் அடைந்தேன்) ஆக வெற்றி வாய்ப்பை இழப்பது என்பதைவிட எட்டுவதற்கு ஆனபடிகள், வெற்றிவாய்ப்பை பலமுறை இழந்த ஆபிரகாம்லிங்கன் தான் பிறகு உயர்ந்த இடத்தைஅடைந்தார். தோல்வியோ அறியாத-வெற்றிகளையே சந்தித்து வந்த நெப்போலியன் தான் இறுதியில் 'வாட்டர்லூ' என்கின்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் தோல்வியைத் தழுவினான்.

தொடர்ந்து வெற்றி கிடைக்காத நிலையில் பத்து ஆண்டுகள் கழிந்த பிறகு தான் 'பேட்டரி' களில் மின்சக்தியை சேமிக்கும்நிலை ஏற்பட்டது. 'லேடக்ஸ்' எனும் ரப்பர் பொருள் கண்டுபிடிக்கு முன் 17 ஆயிரம் யோசனைகள் பயனின்றிப் போய்விட நேர்ந்தது.

உங்கள் யோசனை வெற்றி பெறத் தவறிடும் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களா? உங்களுடைய யோசனை பரிசோதனை செய்யப்படுகிறது என்றால் அதற்கு என்ன பொருள்? எந்தஅளவு சீர்திருத்தலாம்? எடுத்துக் கொள்ளலாம்? சேர்க்கலாம்? மேம்படுத்தலாம்? என்று சோதனை செய்ய ஒரு வாய்ப்பு; அவ்வளவுதான்! வெற்றி கிட்டுமா கிட்டாதா என்பதற்கான இறுதி சவால் அல்ல. ஒரு பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கிற ஒரு ஏற்பாடு இதற்கு இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள முறைகளைக் கையாண்டால் அதன்மூலம் நீங்கள் முடிவில் வெற்றி பெறுவீர்கள். பயனுள்ள யோசனைகளைத் தெரிவித்தமைக்கான வெகுமதிகள் உங்களுக்குக் கிடைக்கும்.

ஜெனரல் மோட்டோர்ஸ் கம்பெனியின் மாபெரும் கண்டுபிடிப்பாளர், பெரும்நிபுணர் சார்லஸ் கெட்டரிங் எப்படி டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்தோம் என்பது பற்றிச் சொன்னார். "வெற்றி பெறாத யோசனைகளையெல்லாம் கூட ஒன்றன்பின் ஒன்றாக ஆறுஆண்டுகள் பரிசோதனை செய்தோம். கடைசியில் வெற்றிதரக் கூடிய ஒரு யோசனையைச் செயல் முறையைக் கண்டுபிடித்தோம்" என்றார் அவர்.

முதன் முதலில் எடுத்த எடுப்பிலேயே வெற்றி பெறத் தவறிய யோசனைகளைத் உருவாக்கியவர் என்பதால், சார்லஸ் கெட்டரிங் என்பவர் வெற்றி பெற முடியாதவர் என்றுசொல்லிவிட முடியுமா? டீசல் என்ஜினை உருவாக்க அவர் தெரிவித்த யோசனைகள் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு வெற்றியைத் தரவில்லை. அதனால் அவர் வெற்றி பெற முடியாதவர் ஆகிவிட்டாரா? நிச்சயமாக அல்ல. அவர் தனது யோசனைகளைச் சீர்திருத்தினார். பிறவற்றை எடுத்துக் கொண்டார். இணைத்தார். மேம்படுத்தினார். டீசல் என்ஜினை உருவாக்கும் வரை விடவில்லை. எத்தனையோ விதகண்டுபிடிப்புகளுக்கு அவர் பயன்படுத்திய வழிமுறை இதுதான்.

இதற்கு விஞ்ஞான பூர்வமாக வேறு ஒரு வழி இருக்கும் என்று சிலர் கருதக்கூடும். ஆனால் உலகிலேயே மிகப்பெரிய - மிகவும் செழிப்பான, மிகவும் அதிகமாக உற்பத்தி செய்கிற ஒருகார்ப்பரேஷனாக விளங்கியது ஜெனரல் மோட்டோர்ஸ். அந்த கம்பெனியின் ஆராய்ச்சிப் பிரிவிற்கு தலைமை வகித்தவர் சார்லஸ் கெட்டரிங். அவர் சொல்கிறார், "எங்களுக்குத் தெரிந்த வரையில் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து யோசனைகளைக் கொண்டு பரிசோதனை செய்து வந்தோம். இதுதான் வழி வெற்றிகரமான வழி" என்று.

எனவே உங்கள் யோசனைகளை அரை குறை பாடுள்ளவை என்பதால் அவற்றை சமர்ப்பிக்க அறிமுகப்படுத்தத் தயங்காதீர்கள். பரிபூரணமான - குறைகளே அஞ்சினால் உங்கள் யோசனை என்ற ஒன்று கிடையாது. அப்படி அஞ்சினால் உங்கள் யோசனையானது பரிசோதனை என்கிற முதல் கட்டத்தையே அடையாது போய்விடலாம். அது சீர்திருத்தப்படும். சில பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படும். சேர்க்கப்படும்; செம்மையாக்கப்படும். அறிவு, தொழினுட்பம், அனுபவம் இவற்றின் வழிகாட்டுதலின் மீது எல்லா யோசனைகளும் மதிப்பீடு செய்யப்படும்.

ஒரு இத்தாலிய பழமொழி சொல்வது போல் "வெற்றி பெறத் தவறுகின்றவனே பணக்காரன் ஆகிறான்." எனவே சீக்கிரம் செல்வந்தராவதற்கான ரகசியம் - வெற்றியை இழந்தால், வெற்றியை தவறவிட்டால் முன்னேற்றம்;
முன்னேற்றம்.


**சுடர் ஒளி வாசகர்களே**

குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.


சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள். தரமானவை
பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:
**சுடர் ஒளி,**
**இல.361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவிய வாள்களுடன் இளவரசர்கள் இருவரும் எதிரெதிர்த் திசைகளில் பாய்ந்து சென்றனர். வேகமாக விரைந்து வந்த பாம்பு ஒரு கணம் திகைத்து நின்றது. எந்த இளவரசனை முதலில் தாக்குவது என்று அது யோசிப்பது போல இருந்தது. இந்த சிறிய அவகாசத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட சந்திரவர்மன் பாம்பின் பின்புறமாக வாளால் தாக்கினான். இதனால் நிலை குலைந்துபோன பாம்பு, சடாரெனத் திரும்பி, சினத்தோடு சந்திரவர்மன் நின்றிருந்த பக்கமாகத் திரும்பியது ஆனால் அது சந்திரவர்மனைத் தாக்க முடியவில்லை. ஏனெனில் அதற்குள் இந்திரவர்மன் பாம்பின் நடுப்பகுதி மேல் தனது வாளை ஆழமாகப் பாய்ச்சி விட்டான் அதனால் பாம்பு அசைய முடியவில்லை. ஆனால் இளவரசர்கள் இருவரும் சிறிய இடைவெளி கூட இல்லாமல் வேகமாகத் தமது வாள்களைச் சுழற்றி நாலாபுறமும் பாம்பினைக் காயப்படுத்தினார்கள். கடைசியாக இருவரும் ஒரே நேரத்தில் பாம்பின் கண்களுக்குள் வாள்களைச் செருகினர். அவ்வளவுதான் தாமதம்! பாம்பு பல நூறு துண்டங்களாக வெடித்துச் சிதறியது. அது சிதறிய இடத்தில், 'தகதக' என மின்னியபடி தங்கத்திலான சாவி ஒன்று கிடைத்தது. இந்திரவர்மன் வேகமாகச் சென்று அந்தச் சாவியை தன் வசப்படுத்தினான்.

"இந்திரா! இந்த மாய மாளிகையை இந்தச் சாவி மூலம் திறக்கலாம்" என்றான் சந்திரவர்மன். அவன் சொல்வதை ஆமோதிப்பது போன்று தலையசைத்துவிட்டு மாளிகையின் கதவில் சாவியைப் பொருத்தினான் இந்திரவர்மன். மாளிகையினுள் இன்னும் அலறல் கேட்டுக் கொண்டே இருந்தது.

அந்த சாவி மாய மாளிகையினுள் கதவில் இருந்த துவாரத்தில் மிகச் சரியாகப் பொருத்தியது. அதன் பிறகு சாவியைப் பிடித்து சற்றுத் திருப்பினான் இந்திரவர்மன். 'கிறீச்' என்ற ஓசையுடன் கதவு திறந்துகொண்டது. உடனேயே மாளிகையினுள் புகுந்து கொண்ட இளவரசர்கள் மீண்டும் முன்னர் இருந்ததைப் போலவே கதவைப் பூட்டிக் கொண்டனர். பூனை போல சந்தடியற்று மெல்ல மெல்ல உள்ளே நடந்தனர்.

கண்ணாடி போன்ற பளிங்குத் தரையும், சுகந்த மணமும் அவர்கள் இருவரையும் பிரமிக்க வைத்தன. அலறல் கேட்டுக் கொண்டிருக்கும் பகுதி எதுவென அவர்கள் இருவராலும் அறிய முடியவில்லை.

ஏனெனில், அந்த மாளிகையில் சுவர்களிலெல்லாம் அலறல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இதனால் இளவரசர்கள் இருவரும் குழப்பமடைந்தார்கள். எனினும் தமது முயற்சியைக் கைவிட மனம் இல்லாதவர்களாய் மாளிகையினுள் இருந்த எல்லா அறைகளையும் ஆராயத் தொடங்கினர். பல அறைகளில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் பல எலும்புக் கூடுகள் இருந்தன. எனினும் அவை எல்லாம் அழகான தங்கப் பேழைகளில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. கடைசியாக இன்னும் மூன்று அறைகள் மிஞ்சியிருந்தன. நடுங்கும் கரத்துடன் அதில் ஒரு அறையைத் திறந்தான் இந்திரவர்மன்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*




★ இடி இடிக்கும்போது அதன் ஒலி அலைகள் மிக வேகமாக வந்து செவிப் பறையில் மோதும். அதனால் செவிப்பறை கிழிந்து காது செவிடாகி விடக் கூடும். இதைத் தவிர்க்க நாம் வாயைத் திறந்து கொண் டால். வாய் வழியாக வெளிக்காற்று உட்சென்று செவிப்பறையின் மறுபக்கம் மோதும். அப்போது வெளிக்காற்று செவிப்பறையின் அதிக அதிர்வை வாங்கிக் கொண்டு செவிப்பறையைப் பாதுகாக்கும்.

★ பொதுவாகக் காகங்களால் உயரமாகப் பறக்க முடியாது. குறிப்பிட்ட உயரம் வரையில்தான் பறக்கும். ஆனால், காகங்களில் சிவப்பு நிறக் கால் களைக் கொண்ட காகங்கள் மட்டும் உயரமாகப் பறக்கின்றன. இக்காகங்கள் கடல் மட்டத்திலிருந்து 8,200 மீற்றர் உயரம் பறக்கின்றன. அதாவது எவரெஸ்ட் சிகரத்தின் உயரமான 26,902 அடி வரை பறக்கின்றன.

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

*மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 07.11.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.*

*(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).*

**கேள்வி:-**

இந்தியாவில் ஒரிசா மாநிலத்தைத் தாக்கிச் சேதப்படுத்திய புயலின் பெயர் என்ன?

பதில்:- ................................................................

பெயர் :- ................................................................

தரம் :- ................................................................

பாடசாலை :- ................................................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்,**
சுடர் ஒளி
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**09**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 07**

*சரியான விடை* - **நரேந்திரமோடி**

*இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -*

**ஷாஜானி கலீல்**
*தரம் -11, அல்-அஸ்ஹர் ம.க., திஹாரிய.*

**பாராட்டுப் பெறுவோர்:-**

*01. எம்.எம்.எவ்.ஆதிலா, தரம் - 6, அஸ்ஸம்ஸ் முஸ்லிம் வித்தியாலயம்.*
*02. ஏ.எச்.பாத்திமாநகுஹா, தரம் - 7, தி/சென்.மேரிஸ் கல்லூரி.*
*03. ஏ.ஆர்.றிகாஸ்அகமட், தரம் - 7, கமு/அல்-மதினா வித்தி. நிந்தாவூர்.*
*04. ம.ரதீஷன், தரம் -8, யா/பரியோவான் கல்லூரி.*
*05. அ.அனோஜன், தரம் - 12, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.*

# ஒரு நிமிடத்தில்...

ஓவியர் ஒருவர் பிரபல நகர் ஒன்றில் தனது ஓவியக் கண்காட்சியை நடத்தினார். "என்னைப் போல வேகமாக யாராலும் ஓவியம் வரைய முடியாது!" என்று பெருமையடித்துக் கொண்டார். "ஒரே நிமிடத்தில் இரண்டு உயிரினங்களை வரைவேன்,' 'என்றார்.

பார்வையாளர்களில் இருந்த ஒரு சிறுவன் முன்னே வந்தான்.

"உங்களால் ஒரு நிமிடத்தில் இரண்டு உயிரினங்களைத்தான் வரைய முடியுமா? நான் ஒரு விநாடியில் பத்து உயிரினங்கள் வரைவேன்!" என்றான்.

ஓவியர் அவனை எரிச்சலுடன் பார்த்தார்.




"வீண் சவால் வேண்டாம். எங்கே வரைந்து காட்டு பார்ப்போம்!" என்றார்.

"முதலில் நீங்கள். அதன்பின்பும் தான் நான்!" என்றான் சிறுவன்.

ஓவியர் தன் பிரஷை வண்ணத்தில் தோய்த்தார். இப்படி ஒரு கீறல். அப்படி ஒரு தீற்றல். சில கோடுகள் என்று ஒரு நிமிடத்தில் ஒரு குரங்கு, ஒரு கரடி ஆகியவற்றை வரைந்து அசத்தினார். "இப்போது உன் முறை!" என்று வெற்றிப் பெருமிதத்துடன் சிறுவனை நோக்கிச் சொன்னார்.

சிறுவன் தன் இரு கைகளின் பத்து விரல்களையும் பழுப்பு வண்ண ஜாடியில் அழுத்தி எடுத்து, ஒரு பெரிய வெள்ளைத் தாளில், பத்து விரல்களையும் அழுத்தினான்.

"இதோ பத்துப் புழுக்கள்!" என்று காட்டிச் சிரித்தான்.

ஓவியர் வெட்கி தலைகுனிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சக் கிளர்வு

•வசியன்

# செய்க தவம் நெஞ்சே.....

நம்மிற் பெரும்பாலனவர்களின் அன்பு எமது வசதிக்கேற்ற படியே தோன்றுவதாக வும் தொடர்வதாகவும் நிலைப்பதாகவும் இருக்கிறது.

நமது அபிலாஷைகளுக்குத் தகுந்த விதமாகவும் நிபந்தனை களுக்குக் கட்டுப்படுகிற மாதிரியும் இருக்கிறவரை தான் பல அன்பு (?) கள் நிலைக்கிறவைகளாகவும் தொடர்கிறவைகளாக வும் இருக் கின்றன. முரண்பாடு கள் முளைவிடத் தொடங்கும் போதே எமது அன்பு ஒளி மங்கி வலிமை குன்றிப் போகின்றது.

நாம் அனைவரும், ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் . 'இரண்டு பேர்' என்று வருகிற போது, இரண்டு தனிப்பட்ட ஆளு மைகள் என்பதை - தனித்தனியான ' நான்'கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த இரண்டு பேர் நண்பர்களாக - காதலர்களாக - கணவன் - மனைவியாக - சகோதரர்களாக - எப்படியும் இருக்கலாம். ஒத்துப் போகிற போது இதமாக இனி மையாக இருக்கிற உறவு முரண்பாடொன்று வருகிற போது வெறுப்புக்குரியதாகி விலகிப் போக விரும்புகிற ஒன்றாக ஆகிப் போகிறதென்றால் நாம் பெரிதாகப் பேசிக்கொள்கிற 'அன்பு' வெறும் சர்ந்தர்ப்ப வசமான மேலோட்டமான ஒன்று தான் என்று ஆகிப் போகிறது.

" நான் எவ்வளவு அன்பாக இருந்தேன். எவ்வளவு தூரம் நேசித்தேன் நம்பினேன் எல்லாவற்றையும் மறந்துவிட்டாயே..." என்று எதிராளியைக் குற்றம் கூறுகிறோம். பழியை அடுத்தவர் மீதே சுமத்துகிறோம். இருவரில் ஒருவராவது விட்டுக் கொடுக்கவோ நமது இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்ளவோ தயாராக இகல்லை. முடிவு? இரு வரினதும் பிடிவாதத்திற்கு ஒரு நல்லுறவு பலியாகிப் போகிறது. எமது பிடிவாதத்தை ஒரு பெருங்குணம் போல காட்டிக் கொண்டு "என்னால் ஏலாது நான் செத்தாலும் அவனோட /அவளோட கதைக்கவே மாட்டேன்" என்று எமது அழுங்குப் பிடியை ஒரு திரையாக்கி ஒதுங்கிப் போகிறோம்.

அன்புணர்வு என்னும் ஓர் அரிய பண்பு எம்மால் கொடுக்கப்படக் கூடியதாக இருந்தும் மறுக்கப் பட்டு மறக்கப்பட்டு விடுகிறது.

காலம் காலமாய் வாழ்க்கை சொல்லிவரும் பாடம் ஒன்றை நாம் உணர்ந்து கொள்ளத் தவறி விடுகிறோம் - மெய்யான அன்பு- அன்பின் பொருட்டாகவே எதையும் மன்னிக்கவும். மறந்து ஏற்றுக் கொள்ளவும் தயராக இருக்கும் அன்பைப் பெற்றுக்கொள்கிறவர் களைவிட அன்பு செலுத்துபவரிடம் தான் பொறு மையும் விட்டுக் கொடுப்பும் இருந்தாக வேண்டும். அப்போது தான் நாம் கருத்திக் கொண்டிருக்கிற உயரிய அன்பு ஒளி குன்றாத மேலான பண்பாய் விளங்கமுடியும்.

இதனாற் தான் அந்த மீனசக் கவிஞன் அன்பினைத் தவம் என்றும் - அன்பினைக் காட்டிலும் உயர்ந்த நலமே இல்லை என் றும் சொல்லிப் போனான் என்பதை உணர்ந்து கொள்வோம். அன் பில் நனைந்து அன்பைச் சொரிந்து அனைத்தையும் இனி தெனக் காண்போம்.

தன்யன்

## நரியும் நனைவும்

தாகம் தன் உருவமற்ற நிழலை
உன் மீதும் என் மீதும் பரவ விடுகிறது
மூடுண்டு போகிறோம் அதனுள் சிறிது
சிறிதாய்....
கண் முன்னே சலசலத்தோடுகிறது நதி
ஆதி முதல் அது இவ்விதம் தான்
கரைகள் நனைந்து
இருபுறமும் செழிக்கும் மரமும் செடியும்
இலைகள் நிறம் மாற்றிக் கிளை நீங்கி
காற்றிலேறிப்போய் நதியிலே நலமும்

நெடுமூச்சோடு நதியை நோக்கியபடி
நின்று கொண்டிருக்கிறோம்
தயங்கித் தயங்கி நதியிடம் போய்
கால்களை நனைக்கிறோம்
குளிர்ந்துநிறையும் பாதங்களை
மீட்டெடுத்து நடையிடுகிறோம் கரைகளில்
நதியின் நகர்வு தொடர்ந்த படி ...
தாகம் நம்மைக் குடித்தபடி...
நாம் கரைகளில் நடந்தபடி...

- ந. சத்தியபாலன்

# வெள்ளை என்பது அழகல்ல - நிறம்

## ச. லிங்கேஸ் கவிதைகள் பற்றிய சில குறிப்புக்கள்




இந்த வாழ்க்கை, நம் சமூகம் நடந்ததும் நடந்து கொண்டிருப்பதுமான நிகழ்வுகள் இவையெல் லாம் சிந்திக்கின்ற மனிதனை, மனித நேயமுள்ள கலைஞனை ஈரமில்லா நிகழ்வுகளால் அலைக் கழிக்கப்படும் இதயம் கொண்ட மெல்லிதயக் காரனை எதிர்வினை புரியுமாறு நிர்ப்பந்திப்ப வனாகவே இருக்கின்றன.

நமது மண்ணில் கொடுந்துயர வாழ்வின் வழி வந்த ஒரு இளைஞனை எவ்வாறெல்லாம் உலுப்பியிருக்கும் என்பதற்கான காட்சிகளாய் அமையத்தக்க பல கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாய் லிங்கேஸ் தந்துள்ள கவிதை நூல் விளங்குகின்றது. ஒட்டு மொத்தமான பார்வையில் ஆற்றாமை ஏமாற்றம் போன்ற உணர்வுகளின் பதிவுகளாகவே அவரது கவிதைகளிற் பல திகழ்கின்றன.

சாதாரண வார்த்தைகளின் நேர் அர்த்தத்திற்குள் அடக்கிவிட முடியாத அனுபவங்களைத் தந்த யுத்தம் அகதிவாழ்வு துரோகம் போன்ற விடயங் களைத் தான் எதிர்கொண்ட விதத்தின் சாட்சிகளாக அவர் தமது தொகுப்பில் பதிவு செய்திருக்கிறார்.

இலக்கியம் ஒரு காலத்தின் ஒருவாழ்வின் சாட்சியொன்றில் லிங்கேஸ் தந் துள்ள பல கவிதைகள் அந்த உண்மைக்குத் துணை நிற்கின்றன என்று துணிந்து கூறலாம்.

புதைந்து விட்டதும் மறைந்து விட்டதுமான பலவற்றின் சாட்சிகளாக அவரின் பல கவிதைகள் விளங்குகின்றன. பட்டதும் கேட்டது மான பல அனுபவங்களைச் சொல்ல எத் தனிக்கும் அல்லது தொட்டுக் கட்டிப்போகும் அவரது கவி தைகள் எதிர்காலத்தில் ஆழமான பல கவிதைகளைத் தரவல்ல வராய் அவரை அடையாளம் காட்டுகின்றன.

தன்மைகளின் பால் இரை யாகாமல் வலிமை மிக்க சொல் அர்த்தங்களைக்கண்டு காட்டும் முயற்சிகளாய் அமையும் பட் சத்தில் இனிவருங் காலங்களில் லிங் கேஸ் இன்னுமின்னும் ஆழ மான கவிதைகளைத் தருவார் என நம்பியிருக்கலாம்.

## சிலிர்ப்பு

மழைபொழிய மண் நனையும்
மண் நனையப் புல் முளைக்கும்
புல்லிடையில் மொட்டரும்பும்
மொட்டொருநாள் பூவாகும்
பூவிடையிற் தேனூறும்
தேனுண்ண வண்டு வரும்
வண்டிருந்து தேனருந்தும்
வாழ்வையெண்ணிப் புல்
சிலிர்க்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘பேஸ்புக்’ இல்லாத உலகம்

**சி.செல்லக்குமார்,**
**உரும்பிராய்.**

**கே :** ‘பேஸ்புக்’கைத் தடைசெய்ய ஜனாதிபதி மஹிந்த ஆலோசித்து வருகிறார் என்று செய்திகள் வருகின்றனவே பித்தா, உங்களால் ‘பேஸ்புக்’ இல்லாத உலகத்தைக் கற்பனை செய்ய முடிகிறதா?




**ப :** இப்பத்த இளம்பிள்ளையள் விடிய வெள்ளன தேத்தண்ணி குடிக்குதுகளோ இல்லையோ கொம்பியூட்டருக்கு முன்னால குந்தியிருந்து இந்தப் பேஸ் புக்கில எல்லாருக்கும் குட்மோனிங் சொல்லத் தொடங் கினால் நடுச்சாமத்தில குட்நைட் சொல்லிப் போட்டுத்தான் எழும்புதுகள். அப்பிடி ஒரு போதை மாதிரி எல்லாரையும் கொம்பியூட்டருக்கு முன்னால கட்டி வைச்சிருக்குது மார்க் சுகர் பேகர் கண்டுபிடிச்ச இந்த பேஸ்புக் மந்திரக் கோல்.

தனிய பெடி, பெட்டையள் அலம்பிறதுக்கு மட்டும்தான் பேஸ்புக் இருக்கெண்டு நினைக்கக்கூடாது. எகிப்து, டுனிசியா எண்டு கனநாடுகளில மக்கள் புரட்சிக்கும் உந்தப் பேஸ்புக்தான் விதை போட்டது. அப்பிடி இஞ்சையும் ஒரு கருத்துப் போர் மூண்டிடுமோ எண்ட பயம் அரசாங்கத்துக்கு இருக்கு. தலைக்கு மேல வெள்ளம் போனபிறகு யோசிக்காமல் அதுக்கு முதலே அணை கட்டினால் என்ன எண்டதுதான் எங்கட மஹிந்தவாதிகளின்ர கனவு. ஆனால் அத்தியாவசியப் பொருளின்ர விலைய தாறுமாறா ஏத்தினால்கூட பேசாமலிருக்கிற எங்கட இளைய சமுதாயம் பேஸ்புக்கை நிப்பாட்டினால் ஏதோ சுவாசிக்க ஒட்சிசனே இல்லாமல் போனதுபோல துடிச்சுப் பதைச்சுப் போராட வெளிக்கிட்டால் அரசு அதோ கதிதான்.


**இ.றம்மியா,**
**வவுனியா.**

**கே :** சினிமா ஹீரோ மாதிரி சிலர் நிஜ வாழ்வில் இருக்க நினைக்கிறார்கள் இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**ப :** இது நிழலைப்போல நிஜமும் இருக்க ஆசைப்படுறதப் போலதான். நிழல் எப்பிடியும் ஓடும், ஆடும், வளையும், நீளும். ஆனா நிஜம் அப்பிடி இருக்க முடியாது. சின்னனில சிங்கத்தின்ரையும் முயலின் ரையும் கதையைப் படிச்சிருப்பீங்கள். தன்ர நிழல்தான் கிணத்துத் தண்ணீல இருந்து தன்னப் பாத்துக் கர்ச்சிக்குது எண்டு விளங்கிக்கொள்ளாமல் தான் கிணத்துக்க விழுந்து சிங்கம் செத்தது. அதுமாதிரித்தான் சினிமாவில் காசுக்காக நடிக்கும் நடிகர்கள மாதிரித் தாங்களும் இருக்க வேணும் எண்டு கனபேர் நினைக்கினம். ஆனா சினிமாவில வாற நல்ல விசயங்கள விட்டிட்டு கெட்ட விசயங்கள எடுக்கிறதுதான் பிரச்சினையில முடியுது. எப்பவும் கானல்நீர் தாகம் தீர்க் காது கண்டியளோ!.



## சொற்சிலம்பம் போட்டி இல. 592



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்
1. மரியாதை செய்தல்
2. அறிவீனன்
3. ஹிந்து மத ஆசிரமங்களில் மூன்றாவதாக இருப்பது
4. ஊதியம்
5. கபடமில்லாதவன்
8. சூறாவளி
14. பத்தாம் திதி
15. குதிரை
16. ஒவ்வோர் உடலினுள்ளும் இது உண்டு.
18. பிரித்து விடு
19. உண்

### இடமிருந்து வலம்
1. நோன்பு
6. பேணுதல்
7. இதை இழுத்த குரங்கு போல என்று சொல்வார்கள்
9. பாம்பு
10. குதிக்க
11. கோடரியால் விறகைத் தூண்டாடுவதை இப்படிச் சொல்வர்
12. ஒரு தோல் வாத்தியம்
13. இந்திரன் சபையில் ஆடும் ஓர் நடனப் பெண்.
14. நிஷ்டை
17. சாய்தல் (விலை) குறைதல்
18. வெட்டுவதற்கு உதவும் உபகரணம்
20. ஆண்மான்

### சொற்சிலம்பம் போட்டி இல. 592

சொற்சிலம்பம் போட்டி 592ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு நவம்பர்06ம் ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் மற்றும் நவம்பர் 20ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 590 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.உலகப்பற்று, 2. லகரி,3. காரியம், 4.தரை, 5.திரை, 7.இசைக்கலை, 9. காரு, 10. சாக்காடு, 11.கல், 13. கலிப்பா, 14.அசாம், 17. பாதி, 18. சுமை,

**இடமிருந்து வலம்**

1. உலகாயுதம், 6.லகரி, 7. இரை, 8. கரிய, 9. காசாக்க, 12. பதி, 13. கருக்கல், 14.அலி, 15.காலை, 16.சாப்பாடு,19. சம்பாதி, 20. இமை,

### போட்டி இல. 589இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | சி.எழில்வேள், அரசினர் வைத்தியசாலை, முழங்காவில். |
| 2ஆம் பரிசு | செ.றொபேட், தேவமாதா கோவிலடி, ஊர்காவற்றுறை. |
| 3ஆம் பரிசு | சந்திராணி தங்கத்துரை, வட்ட விதாணை வீதி, பெரியநீலாவணை. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி.ஸ்ரீ. துஷாரா,
யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(2) திருமதி. மணிமேகலை வரதராஜன்,
B-1 அரசவிடுதி,சரவணாவீதி,கல்லடி,
மட்டக்களப்பு.

(3) தி.இராசரத்தினம்,
பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

(4) வை.எல்.இமாம்,
பாலச்சோலை, அட்டாளச்சேனை-10.

(5) சின்னையா செல்வராஜ்,
இல 9/5 B-10, மஜீத் பிளேஸ்,
அவிசாவெலை வீதி, வெல்லம்பிட்டிய.

(6) மு.நளினி,
இல.179, தாழ்வுப்பாடுவீதி, எழுத்தூர்,
மன்னார்.

(7) சி.குகராஜா,
இல 36/35 கண்டி வீதி, சுமேதகம,
திருகோணமலை.

(8) வி.செல்வநாயகம்,
சிவன்கோவில் வீதி, புத்தூர்.

(9) ம.சிந்துஜா,
விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

(10) திருமதி. எஸ். பாக்கியநாதன்,
கொழும்பு தமிழ்ச்சங்கம், இல-07
57ஆவது ஒழுங்கை, கொழும்பு- 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## குறிப்பு



சிறை என்று
சொன்னால்...
இரும்புக் கூண்டை
குறிக்கலாம்
ஈழத்தமிழரை
குறிக்கலாம்

கைவிலங்கைக்
குறிக்கலாம்
காணாமல்
போனோரைக்
குறிக்கலாம்
முள்வேலியை
குறிக்கலாம்

முள்ளிவாய்க்காலின்...
மிச்சங்களைக் குறிக்கலாம்!

கள்வர் காவாலிகளைக்
குறிக்கலாமா?
காமக் கொடூரர்களைக்
குறிக்கலாமா?
இலஞ்சக்காரர்களைக்
குறிக்கலாமா?
வஞ்சம் தீர்ப்போரை
குறிக்கலாமா?
எதனைக் குறிப்பதென
குறித்துச் சொல்லுங்கள்!

விவேகானந்தனூர் சதீஸ்.
கிளிநொச்சி.


## தவிப்பு



அன்று நீ
பள்ளியில் தோழனாய்
இருளில் ஒளியாய்
என் பயணத்தின்
போது வழிகாட்டியாய்
நோயை போக்கும்
மருந்தாய் துன்பம்
வந்தபோது
துணைவனாய்
இருந்து பாலைவனம்
போலிருந்த -என்
இருண்ட வாழ்வை
சோலைவனமாக்கிய- நீ
இன்று பிரிந்து
சென்றதால் உன்னைக்
காணாது-என்
சோலைவனம் வாடிப்போய்
மீண்டும் பாலைவனமாகி விட்டது
அதை மீண்டும் சோலைவனமாக்க
மாற்ற உன்னைத் தேடி
தவிக்கிறேன் தோழா...

உ.மோவிதா.
அளவெட்டி.

## ஒன்று படுவோம்



ஓடியது போதும்
ஓரணியில் ஒன்றுபடுவோம்
எஞ்சியதை பெற- அல்ல
எமக்கானதை மீட்க

அஞ்சி நின்று
கெஞ்சியும் கொஞ்சியும்
கேட்டால்
கொஞ்சமும் கிடைக்காது

வஞ்சிப்பவனிடம் - கேள்
இது -உன்
குஞ்சப்பனின் சொத்தா? என்று

சொல்லி வை
பஞ்சுக்குவியல்களில்
படுத்தவர்கள் அல்ல - நாங்கள்
நெஞ்சுரம் கொண்டவர்

நஞ்சு உண்டவன்
வழி வந்த வாரிசுகள்
பிஞ்சிலேயே
நெஞ்சினில் நெருப்புகளை சுமந்த
அக்கினி குஞ்சுகள் என்பதை.

ப. அறிவு

## விதவை மரங்கள்

போர்ப்புயலடித்து
பூ உதிர்ந்த பசு மரங்கள்
பச்சையம் பறிக்கப்பட்ட
பாலைவன நிழல் மரங்கள்.

கொப்பும் குழையுமாய்
குழைவிடைக் காமமாய்
வெம்ப நிலத்தில் இன்னும்
வேரோடி நிற்கின்றன.

உடல் உதிரத்தில் இன்னும்
உயிர்த்திணிவு பாய்ச்சல்
உளக் காழ் வழியே
உணர்ச்சிகளின் வீச்சம்.

இதய இலைவாய்
இடை இடையே நிறைந்து மூடும்
வக்க வாயு நிலம்
இதனூடே வந்து போகும்.

பட்டடையை உரிக்கச் சில
பச்சோந்தி பாயும் அதன்
பாய்ச்சலைத் தவிர்க்க
பாதுகாப்பு வேண்டும்.

பூப்பூக்க வேண்டும் இல்லறப்
பூசைக்குப் போக வேண்டும்
மகரந்தச் சேர்க்கை நடந்து
மறுபடியும் காக்க வேண்டும்

சமூக இருளகற்றி வெறும்
சம்பிரதாய தடை கடந்து
நல்லற ஒளித் தொகுப்பாகும்
நம்பிக்கை ஒளி வேண்டும்

வெம்ப நிலத்தில் மீண்டும்
விளைச்சல் வேண்டும்
தப்பிய மரங்கள் நன்றாய்த்
தழைக்க வேண்டும்.



காரைக்கவி.

## பேதைப் பெண்

கொஞ்சம் அழகை
கொஞ்சம் கன்னமிர்
ஒட்டிக் கொண்டது
அவளிடத்தில்

வறுமை தோய்ந்த
அவளுருவம்
எனக்குள்ளே
நிழலாடுகிறது

விவாகம் செய்ய
முடியாத
தருணம்
வேதனையோடு
வேலை தேடுகிறாள்

பசம் கொள்பவரை
விடவும்
அவளை அனுபவிக்கத்
துடிக்கும்
ஆண் வர்க்கம் தான்
அதிகம்

பேதையவளுக்கு
உலகு புரியவில்லை
சோதனைக் களத்திலே
நிலை தடுமாறும்
துரும்பாகிறாள்.

வே.வே. அகிலேஸ்வரன்.
மருதங்கேணியூர்.

## இரவல் வீடு



இது ஒரு இரவல்
வீடென்று எப்போதோ
உணர்ந்திருந்தால்
சொந்த வீட்டை
உருவாக்கி நித்திய
சுகத்தை அனுபவிக்க
சிந்தித்திருப்பேன்
செயல்ப்பட்டிருப்பேன்
மந்த மதியால் பந்த
பாசத்தில் உழன்றேன்
மனதால் பாவங்கள்
பல புரிந்தேன் சந்ததமும்
சிற்றின்ப சாகரத்தில்
முக்குளித்து குடியிருக்க
வீடு கொடுத்தவனின்
குறிக்கோளை நிறைவேற்றாமல்
இருந்த வீட்டை நெருப்புக்கு
இரையாக்கி விட்டு போகிறேன்
இன்னொரு இரவல் வீடு தேடி
புண்ணியம் தேட அல்ல
பண்ணிய பாவங்களுக்கு
பரிகாரம் தேட

மர்மயோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் என்ன கழுதையே?

பேரனின் 'கதை சொல்லு கதை சொல்லு' கரைச்சலெண்டுறது பொல்லைக் கொடுத்து அடி வாங்கிற மாதிரி. கதை சொல்லத் தொடங்கின உடனை உது நேற்றுச் சொன்ன கதை புதுக் கதை சொல்லுங்கோ என்று அடம்பிடிக்கத் தொடங்கிவிடுவான்.

நாம் ஒருவர் - அதுதான் போன வாரம் சொன்ன காகம் நாய்கள் - நாடகக் கதை, திரும்பச் சொல்ல, 'உது வேணாம். உந்தக் கதை தெரியும். வேறை கதை சொல்லுங்கோ' என்று பேரன் அடம்பிடிக்க. 'புதுக் கதைக்கு நான் எங்கை போறது?' ஆனாலும் அதே கதையைச் சொல்லத் தொடங்கினேன். தொடங்கின உடனேயே முகம் சுழிக்க வெளிக்கிட்டார்.

"அப்ப ஒரு காகம், கா..காகா என்று சத்தம் போட ஒரு காகம் வருமாம். அப்ப இப்ப எத்தனை காகம்? சொல்லு பார்ப்பம்!" என்று கதையைக் கணக்காக மாற்ற அவர் விரலை எடுத்து மடக்கி, "ஒன்றும் ஒன்றும் இரண்டு காகம்" என்பார். "இரண்டு காகம் என்று சொல்லுறதில்லை. இரண்டு காகங்கள்" என்று சொல்ல வேண்டும் என்பேன்.


"சரி இரண்டு காகங்களும் சேர்ந்து 'கா..கா' என்று கரைய இன்னும் இரண்டு காகங்கள் வந்திடுமாம். ப்ப எத்தனை காகங்கள். இரண்டும் இரண்டும் நாலு காகங்கள். அந்த நாலு காகங்களும் சேர்ந்து காகா என்று கத்த இன்னும் நாலு காகங்கள் வந்திடும் இப்ப நாலும், நாலும் எட்டுக் காகங்கள்.."

"எட்டுக் காகங்களும் சேர்ந்து கா..காக..என்று கரைய இன்னும் எட்டுக் காகங்கள் வந்திடுமாம். இப்ப எட்டும் எட்டும் பதினாறு காகங்கள் எத்தனை காகங்கள்? பதினாறு காகங்கள். பதினாறு காகங்களும் சேர்ந்து 'குய்யா, முய்யா' என்று கரைய இன்னும் பதினாறு காகங்கள் வந்து சேர முப்பத்திரண்டு காகங்கள். முதலிலை ஒன்று ..பிறகு இரண்டு ..பின்பு இரண்டும் இரண்டும் நாலு இப்பிடியே கன காகங்கள் வந்து சேர்ந்து எல்லாம் சேர்ந்து சாப்பிட ஒரு நிமிடத்திலை பார்சல் முடிஞ்சுதாம். காகங்கள் பறந்திடுமாம்" என்று கதையோடு கதையாக கணக்கையும் குழைச்சுக் கொடுத்து கதை முடிஞ்சிடுமாம்.

பிறகு இதே கதையை வில்லுப் பாட்டு ஸ்ரைலிலை சொல்லுறதும் ஒண்டு இருக்குது. கதையும் பாடலும் அதே அதே. ஆனால் ஏற்ற இறக்கம், கொஞ்சம் நடிப்பு. நகைச்சுவை என்று சேர்த்து 'நான்..நான் ஒரே ஆள்தான் வில்லுப்பாட்டு "வில்லங்கப்பாடு" எண்டும் சொல்லலாம்.

சாரத்தைக் கட்டிக் கொண்டு, அமர்ந்த வண்ணம், இரண்டு முழங்காலுக்கும் மேலாக சாரத்தை கவ்விக் கொண்டு வரத்தக்கதாக முழங்காலை முன்னுயர்த்தி காலை அகட்டி இருந்தால், வில்லுப்பாட்டு வில்லு ரெடி. அதிலை அகப்பைக் காம்பால் தட்டித் தட்டி தலையை ஆட்டிப் பாடினால், வில்லுப்பாட்டாம்.

"உஹ்ரஉஹ்ர" என்று உறுமிக் கொண்டு பெரிய நாய் வருமாம், வந்து "யாரடா நாய்ப் பயலே நீதான்" என்று சத்தம் போட்டு குட்டி நாயை வெருட்டுமாம்.. என்று சொல்லும் போதே போடுற சத்தத்திலை பேரன் ஒருக்கால் நித்திரை குழம்பி எழுந்து கண்ணைக் கசக்கிக்கொண்டு வில்லுப்பாட்டைக் கேட்பாராம். அவர் நித்திரை என்றால், வீட்டிலை மற்ற ஆக்கள் குசினியிலையும், படிக்கிற அறையிலையும் இருந்து கொண்டு என்ரை வில்லுப் பாட்டை இரசிப்பீனமாம். நான் வில்லுப் பாட்டு நடத்துறது அவைக்கும் சேர்த்துத்தான்.. 'அப்பா இப்பிடி விசர் வேலையள் பார்ப்பார்' எண்டுறது என்ரை பிள்ளையளுக்கு நல்லாத் தெரியும்.



"குதிரை மச்சான்! குதிரை மச்சான் !! பாரம் தாங்க ஏலாமல் இருக்குது. ஒரு மூடையை நீ சுமந்து கொண்டு வந்து உதவி புரிகிறாயா?" "நான் எசமானை மட்டும் சுமப்பன் கண்டதையும் சுமக்கிறதுக்கு நான் என்ன கழுதையே?"



இனிக் கதை சொல்லுற கதைக்கு வருவம். கதை சொல்லிச் சொல்லிக் களைச்சுப் போய் இனி ஒரு நாளும் முடியாத, நிறைவு பெறாத, தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கின்ற கதை ஒன்றைச் சொல்லுவம் என்று தேடிக் கண்டு பிடிச்சிட்டன்.

**கதை இதுதான் கவனமாகக் கேளுங்கோ**

"ஒரு ஊரிலை ஒரு எறும்பு இருக்குமாம். அது மழை வாறதுக்கிடையிலை உணவு சேகரிச்சு வைப்பம் என்று புறப்படுமாம். பக்கத்திலை ஒரு விவசாயி வீடாம். அங்கை போய்ப் பார்த்தால் வீடு நிறைய நெல்லாம். ஒரு நாள் போய் ஒரு நெல்லை எடுத்துக் கொண்டு வந்து தன்ரை குடியிருப்பிலை வைக்குமாம். அடுத்த நாள் போய் இன்னொரு நெல்லாம். அதுக்கடுத்த நாள் போய் இன்னொரு நெல்லைக் கொண்டு வந்து தன்ரை இருப்பிடத்திலை வைக்குமாம். பிறகு அடுத்த நாள் போய்.

என்று சொல்லுறதுக்கிடையிலை பேரன் இடைமறிச்சான்.. 'என்ன அப்பன்?' என்று கேட்டன். அவன் சொன்னான் 'அடுத்த நாள் போய் பத்து பத்து நெல்லாகக் கொண்டு வருமாம்' என்றார். கதையிலை அடுத்த கட்டம் என்ன என்று அறிகின்ற ஆவல் அவருக்கு.

பின்பு நானும் அடுத்த நாள் போய் பத்து நெல்லைக் கொண்டு வருமாம்.. 'அதுக்குப் பிறகு?' என்று பேரன் கேட்க, 'அடுத்த நாளும் போய் பத்து நெல்லைக் கொண்டு வருமாம்' என்று எனது ஒரு நாளும் முற்றுப் பெறாத கதையைத் தொடரலானேன்.

"சரி தாத்தா இப்ப எல்லா நெல்லையும் கொண்டு வந்தாச்சுது. அடுத்தது என்ன?" என்று கேட்டான்.

"அடுத்தது என்ன மழை வர அது வெளியிலை போகாமல், ஒரு நாள் ஒரு நெல்லைச் சாப்பிட்டிச்சுதாம். அடுத்த நாள் இன்னொரு.." என்று தொடங்கவே அவன், எழுந்து ஓடிவிட்டான்."

'உது சரிவராது என்றதன் பின், நான் பாடசாலை விசிற் - தரிசிப்பிற்குப் போனால் சொல்லுகின்ற கதை களிலை ஒன்றைச் சொல்லுவம்' என்று தொடங்கினேன்.

ஒரு கழுதையும், ஒரு குதிரையும் அடுத்த கிராமத்திற்குப் போய்க் கொண்டிருக்குமாம். கழுதையின்ரை முதுகிலை பொருள் மூடை கள். குதிரையின்ரை முதுகில, அந்தப் பொருள் களுக்கும், கழுதை குதிரைக்கும் சொந்தக்கார ரான அந்த வியாபாரி அமர்ந் திருந்தாராம்.

கழுதைக்குச் சரியான பாரம். தாங்க முடியவில்லை. குதிரையைக் கேட்குமாம்,

"குதிரை மச்சான்! குதிரை மச்சான் !! பாரம் தாங்க ஏலாமல் இருக்குது. ஒரு மூடையை நீ சுமந்து கொண்டு வந்து உதவி புரிகிறாயா?" என்று கேட்டது.

குதிரை, "நான் எசமானை மட்டும் சுமப்பன் கண்டதையும் சுமக்கிறதுக்கு நான் என்ன கழுதையே?" என்று மறுத்து விட்டது.

கழுதை கொஞ்ச தூரம் நடந்து போய் விழுந்து செத்துப்போகுமாம்.

வியாபாரி என்ன செய்தாரெண்டால், பொருள் மூடைகளை எல்லாம் குதிரையிலை ஏற்றிக் கொண்டு செல்ல ஆயத்தமானார். அந்த நேரம் பார்த்து வந்த ஒருத்தன், அந்த வியாபாரியிடம், "ஐயா! அடுத்த கிராமத்திலை கழுதைத் தோலை நல்ல விலைக்கு விற்கலாம். அதை அப்படியே விட்டு விட்டுச் செல்கிறீர்களே?" என்று கேட்பானாம். அதற்கு அந்த வியாபாரி, "தோலை உரிக்க என்னிடம் வசதியில்லை... அது அப்படியே கிடக்கட்டும்" என்று சொல்வாராம். அதற்கு வந்தவன், "அடுத்த கிராமத்துச் சந்தையிலே கழுதை இறைச்சிக்கு நல்ல மதிப்பு. நிறையக் காசிற்கு விற்கலாம். தோலையும் உரிப்பித்து அங்கேயே விற்கலாம்" என்று சொன்னாராம். வியாபாரிக்கு ஆசை விடவில்லை. கழுதையையும் தனது குதிரையில் தூக்கி ஏற்றிக்கொண்டு போவாராம். சரியான வெய்யில். அவரால் அந்த சுடு புழுதியில் நடக்க முடியவில்லை. தானும் அந்தக் குதிரையிலை ஏறிக்கொள்வாராம். அந்தக் குதிரை, மூடைகளுடன், தனது எசமானையும், அது மட்டுமல்லாமல் கடைசியாகக் கழுதையையும் சுமந்தபடி அழுது அழுது போகுமாம்.

"இந்தக் கதையிலை இருந்து நீர் என்ன அறிஞ்சு கொள்ளுறீர்?" என்று பேரனிட்டைக் கேட்டன். அவன் "குதிரையும், கழுதையும் தங்களுக்கை தாங்கள் கதைக்கும் என்றதை அறிஞ்சுகொண்டன்" என்றான் அமைதியாக.

பம்பலி பரமசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விஸ்வரூபம் 2’

## இசையமைப்பாளரின் மனப் பதிவு




படித்தது வெறும் 10 ஆம் வகுப்புதான். ஆனால், இன்று ஜிப்ரான் ‘விஸ்வரூபம் 2’ வின் இசையமைப்பாளர்! முதல் படமான ‘வாகை சூட வா’விலேயே ஐந்து விருதுகள் என வளர்ச்சியில் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கும் இசையமைப்பாளர் ஜிப்ரானிடம் மனம் திறந்த ஒரு நேர்காணல்.

**கே:- நீங்கள் இசையமைப்பாளர் ஆனது எப்படி?**

ப:- கோயம்புத்தூரில் பள்ளியில் படிக்கும்போதே இசைமேல் மிகவும் ஆர்வம். இசைப் போட்டிகளில் நிறைய வென்றிருக்கிறேன். ஆனா, 10 ஆம் வகுப்புப் படிக்கும்போது அப்பாவுக்கு தொழிலில் பெரிய நஷ்டம். ஊரை விட்டு சென்னைக்கு வந்துவிட்டோம். மருந்துகளை விற்பனைசெய்யும் வேலைக்குப் போனேன். ஆனாலும், இசை மேல் இருக்கும் ஆர்வம் மட்டும் குறையல்லை. வேலை முடிந்ததும் இசையைக் கற்க நேரமொதுக்கினேன். கூடுதல் வருமானத்துக்காக குழந்தைகளுக்கு ரியூசன் கொடுத்தேன். அப்போதுதான் மைக்ரோ ஃப்ட் நிறுவனத்தின் அனிமேஷன் விளம்பரத்துக்கு இசைஅமைக்க வாய்ப்பு கிடைத்தது. அதுதான் திருப்புமுனை. அடுத்தடுத்து நிறைய விளம்பர வாய்ப்புகள். 500 விளம்பரங்கள் வரை இசை அமைத்தேன். அடுத்ததாக சினிமாவுக்கு இசையமைக்க ஆர்வம் வந்தது. அதற்கு இன்னும் இசையைக் கற்கவேண்டும். சிங்கப்பூர் இசைக் கல்லூரியில் பயின்றுவிட்டுத் திரும்பவும் சென்னைக்கு வந்தேன். என்னுடன் விளம்பரங்களில் வேலை பார்த்த சற்குணம், ‘வாகை சூட வா’ வாய்ப்புக் கொடுத்தார். இதுதான் என் கதை.

**கே:- ‘விஸ்வரூபம்-2’ படத்தில் பணியாற்றும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?**

ப:- என் வாழ்க்கையின் பெரிய ஆச்சரியப் பரிசு அது! ‘விஸ்வரூபம் இரண்டாம் பாகத்துக்கு நீதான் இசையமைப்பாய்’ என்று கவிஞர் வைரமுத்து சூசகமாகச் சொல்லிக்கொண்டே இருந்தார். ‘குட்டிப் புலி’ பாடல் ஒலிப்பதிவு நடந்தபோது அவர் ‘‘உன் இசை கமலுக்குப் பிடித்திருக்கிறது’’ என்று என்னிடம் சொன்னார். ஆனாலும் அப்போதுகூட விஸ்வரூப வாய்ப்புக் கிடைக்கும் என்று நினைக்கவில்லை. இந்த நிலையில்தான் ‘குட்டி புலி’ படம் வெளியானது. படத்தில் பின்னணி இசையில் இளையராஜாவின் ‘பொன்னோவியம்...’ என்ற பாட்டின் இசையை இயக்குநர் சேர்க்கச் சொன்னார். இதற்கு இசைஞானிக்கு நன்றி என்று போடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்யவில்லை. இதனால் நான்தான் இளையராஜாவின் இசையைத் திருடிவிட்டதாக ஆளாளுக்குப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் நடிகர் கமலஹாசனின் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. டில்லிக்குச் சென்று அவரைச் சந்தித்தேன்.

**கே:- கமல் என்ன சொன்னார்?**

ப:- படத்தின் இயக்குநரோட உட்கார்ந்து அவரின் துணையோடு இசைக் கோர்ப்புச் செய்த அனுபவம் எனக்குக் கிடையாது. அதனால கொஞ்சம் உதறல் இருந்தது. பயந்துகொண்டே கமலைப் பார்க்கப்போனேன். அவர் மிகவும் இயல்பாகப் பழகினார். சற்குணத்துடன் வேலை பார்த்தபோது எப்படி சுதந்திரமாக இயல்பாக இருந்தேனோ, அப்படிக் கமலுடனும் பணிபுரிய முடிந்தது. படத்துக்கான இசையின் 75 சதவிகிதம் முடித்துவிட்டேன். உலக நாயகனுக்கு என் இன்னிசை மிகவும் பிடித்துவிட்டது. நிச்சயம் ரசிகர்களுக்கும் பிடிக்கும்.


## U.S.A GREEN CARD VISA

அமெரிக்க GREEN CARD VISA விண்ணப்பிப்பதில் 11 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2015ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/= முத்திரையொட்டப்பட்டு சுயமுகவரியிட்ட தபாலுறையை

**Bristol Cyber Cafe**

No,8/3/4, Bristol Street, Colombo-01

என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.பதிவிலக்கம் W/A 44843

இதுவரை விண்ணப்பப் படிவங்களை பெறாதவர்கள் உடனடியாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையில் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

011 2393919, 077 4276579 Web: www.bristolcc.biz



## இந்தியத் திருத்தல யாத்திரை

தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களுக்கூடான திருத்தல யாத்திரை.

நாட்கள்: 18 + 2 யாத்திரிகர்கள்: 20 பேர்

ஆரம்பம்: டிசம்பர் 10ஆம் திகதி தொடக்கம்

**தரிசிக்கும் ஆலயங்கள்**

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி முருகன், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன், வரதராஜப்பெருமாள், நவசீரடி பாபா, பொற்கோவில், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருவண்ணாமலை, சிதம்பரம், நவக்கிரக ஆலயங்கள் 9. ராகு, கேது, சுக்கிரம், செவ்வாய், புதன், சூரியன், சந்திரன், வியாழன், சனி பகவான், வைரவன்பட்டி, குபேரன் கோவில், தஞ்சாவூர், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம் குன்றம், அழகர்கோவில், பழமுதிர்சோலை, நாகாத்தம்மன், மேல் மருவத்தூர், தோணியப்பர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக்காவல், சமயபுரம், மாங்காடு, திருவேற்காடு, அஷ்டலெட்சுமி, அறுபடை முருகன் (ஒரே இடத்தில்) பார்த்தசாரதி, கபாலீஸ்வரர், தன்வந்திரி விஸ்ணு, 408 சிவலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கலாம், வெக்காளி அம்மன் உட்பட 65 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். சென்னையில் ஒரு நாள் செப்பிங் செய்யலாம்.

**எமது சேவைகள்:**

இருவழி விமான டிக்கட், காலை காப்பி, தேநீர்பலகாரம், மதிய உணவு சாதம், 4 மணி காப்பி, தேநீர், இரவு காப்பி, பலகாரம், தங்குமிடங்கள் 2,3 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறையுடன் கூடிய அறைகள், யாத்திரை முடியும் வரை A/C வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் பட முன்பக்க போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போர்ட் அளவு வர்ண புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க.

மேலதிக விபரங்களுக்கு:
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
59, C 3/3, மூன்றாம் மாடி, செட்டியார் தெரு, கொழும்பு -11
T.P: 0777 680102 / 0724 222 989/ 0777 362154

பாஸ்போட் இல்லாதவர்களுக்கு ஒரே நாளில் எடுத்து தர ஒழுங்குகள் செய்து தரப்படும் (நேரில் வரவும்)

| மட்டக்களப்பில் | திருகோணமலையில் | யாழ்ப்பாணத்தில் |
| --- | --- | --- |
| K.ராஜகோபால்<br>தொ.பே: 0653653719<br>075 2621141 | திரு. T.சிவபாலன் | S.பிரசாத். 021 2228155<br>M.குமாரசிங்கம்<br>[illegible] |



ஹரே கிருஷ்ணா

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
## சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

**ரூபா.3,000/-**

ஒரு செங்கல்லுக்காக செலுத்தி

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

**வங்கி விபரங்கள்**

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No : 1120017042

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
**ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்**
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iskcon@slt.lk
www.iskcon.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2013 ஒக்ரோபர் 23 ஆம் திகதி வெளியிடப்பட்டது